janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi janasakthitholaikatchi




புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 84 | 2022 ஜனவரி 23 - 29 | விலை: ரூ.10 | 16 பக்கங்கள் | இதழ் 42







உத்தரபிரதேசம்: மதவெறி ஆட்சிக்கு முடிவு கட்டும்
ஒன்றிய அரசின் அதிகாரத்தில் இருக்கும் பாஜக அரை இறுதி ஆட்டத்தை சந்திக்க வேண்டிய கட்டாயம் >>> ப 03

மோடியைச் சாடுகிறது பி.எம்.எஸ்.
"தொழிலாளர்களுக்கு உதவ வேண்டும் எனும் சிந்தனை துளியும் இல்லை" ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் >>> ப 07

என்.எம்.லோகாண்டே 125வது நினைவு நாள்
தற்போது இந்திய நாடு கார்ப்பரேட் முதலாளித்துவ வளர்ச்சி, வகுப்புவாதம், சாதி அடிப்படைவாதம் ஆகிய மூன்று >>> ப 08








## குடியரசு தின அணிவகுப்பில்

# தமிழ்நாட்டு ஊர்திகளுக்கு தடை



## தமிழ்நாடு முழுவதும் கண்டன ஆர்ப்பாட்டம்

**வருடம் தோறும் தலைநகர் டெல்லியில் நடைபெறும் குடியரசு தின அணிவகுப்பில் தமிழ்நாடு அரசின் அலங்கரிக்கப்பட்ட ஊர்திகளும், கலைக் குழுக்களும் பங்கேற்கும். இதில் சிறப்பான முத்திரை பதித்து விருதுகளும், பரிசுகளும் பெற்று, தமிழ் நாட்டுக்கு பெருமை சேர்த் துள்ளது.**

இந்த நிலையில் வரும் 26.01.2022 ஆம் தேதி நடைபெறும் குடியரசு தின அணிவகுப்பில் தமிழ்நாடு பங்கேற்க அனுமதியில்லை என்ற அதிர்ச்சியளிக்கும் செய்தி வெளியாகியுள்ளது.

தமிழ்நாடு அரசின் சார்பில் கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனார், மகாகவி பாரதியார், ராணி வேலுநாச்சியார் ஆகிய தேச விடுதலைப் போராட்ட வீரர்கள் குறித்த அலங்கார ஊர்திகள் தயார் செய்யப்பட்டுள்ளன. இந்த ஊர்திகள் அனுமதிக்கப்படக் கூடாது என உத்தரவு போட்டது யார்? என்ன காரணம்? தமிழ்நாடு தயாரித்துள்ள விடுதலைப் போராட்ட வீரர்கள் பற்றி ஒன்றிய அரசு என்ன நினைக்கிறது?

ராணி வேலுநாச்சியார் காலனி ஆதிக்கத்தை ஆரம்ப நிலையிலேயே எதிர்த்து போராடி சாதனை படைத்தவர்.

தியாக வேங்கை வ.உ.சிதம்பரனார் காலனி ஆதிக்கத்தை எல்லா முனைகளிலும் எதிர்த்துப் போராடியவர். நாட்டின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் 30 வயதில் 40 ஆண்டுகால தீவாந்திர சிறை தண்டனை பெற்றவர்.

பிரிட்டீஷ் காலனி ஆதிக்கத்திற்கு எதிரான விடுதலைப் போராட்டத்தை,

தொடர்ச்சி 4ம் பக்கம் >>

### எதிரும் புதிரும்





அதெல்லாம் எங்களுக்குத் தெரியும், யாரு முட்டாள்ன்னு! – ஆட்டுக்குட்டி

## ஜன.18 ஜீவாவின் 59வது நினைவு தினம்



சென்னை தண்டையார்பேட்டையில் உள்ள ஜீவா சிலைக்கு மூத்த தலைவர் இரா. நல்லகண்ணு மாலை அணிவிக்கிறார். மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன், வடசென்னை மாவட்ட செயலாளர் எம்.எஸ். மூர்த்தி, தென்சென்னை மாவட்ட செயலாளர் எஸ்.ஏழுமலை, மத்திய சென்னை மாவட்டச் செயலாளர் பா.கருணாநிதி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## பா.ஜ.க ஆட்சி நடைபெறாத மாநிலங்களின் ஊர்திகள் நிராகரிப்பு

நடப்பு ஆண்டின் குடியரசு தின விழா அணிவகுப்பில் பா.ஜ.க. ஆட்சி நடைபெறாத மாநிலங்களின் ஊர்திகளை நரேந்திர மோடி தலைமையிலான, பிரிவினைவாத மனப்பான்மை கொண்ட, மத்திய ஆர்.எஸ்.எஸ் – பா.ஜ.க அரசாங்கம் நிராகரித்துள்ளதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா வன்மையாகக் கண்டித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தங்களின் பிரிவினைவாத இந்துத்துவ கோட்பாட்டிற்கு பொருந்தும்படியாக, இந்திய நாட்டின் பண்பாடு மற்றும் பாரம்பரியத்தை முன்னிறுத்துவதற்காக, ஆர்.எஸ்.எஸ் – பா.ஜ.க அரசாங்கம் நமது பெருமைமிகு வரலாற்றையும், நமது சுதந்திரப் போராட்ட வீரர்களின் மகத்தான பங்களிப்பையும் திரித்துச் சொல்லுவதற்கு தொடர்ந்து முயன்று வருகிறது. கடந்த காலங்களில் இந்த முயற்சிகள் தோல்வியுற்றன.

அணிவகுப்பு ஊர்தி ஒன்றில் ஸ்ரீ நாராயண குருவின் சிலை இடம்பெற்றுள்ளதால் அந்த ஊர்தி நிராகரிக்கப்பட்டுள்ளதாக கேரள மாநில அரசாங்கம் தெரிவித்துள்ளது. ஒன்றிய பாதுகாப்புத் துறை அமைச்சகம் நியமித்த தேர்வுக் குழு, ஸ்ரீ நாராயண குருவின் சிலைக்கு பதிலாக ஆதி சங்கராச்சாரியாரின் சிலையை வைக்க ஆலோசனை கூறியிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

### ஒன்றிய அரசுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கடும் கண்டனம்

இந்தப் போக்கு இந்தியாவின் பன்முகப் பண்பாடு, வரலாறு மற்றும் கூட்டாட்சி முறை மீது நடத்தப்பட்ட தாக்குதல் இல்லையா?

தமிழ்நாடு, மேற்கு வங்கம் உள்ளிட்ட மாநிலங்களின் அணிவகுப்பு ஊர்திகளும் நிராகரிக்கப்பட்டுள்ளதை கட்சி வேதனையுடன் சுட்டிக் காட்டுகிறது. மேற்கு வங்க மாநில அணிவகுப்பு ஊர்திகள், சுதந்திர போராட்டத்தில் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் ஆற்றிய மகத்தான பங்களிப்பை அடிப்டையாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன.

அது போலவே, மகாகவி பாரதியார், வ.உ.சிதம்பரம் பிள்ளை மற்றும் ராணி வேலு நாச்சியார் ஆகி யோரின் முன்னிலைப்படுத்தும் தமிழ்நாட்டு அணி வகுப்பு ஊர்திகளும் மத்திய அரசாங்கத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தரவை மத்திய அரசாங்கம் உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும் என்றும், அனைத்து மாநிலங்களும் தத்தம் அணிவகுப்பு ஊர்திகளை காட்சிப்படுத்த அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்துகிறது.




# நிறைவேறி வரும் நீண்ட நெடுநாள் கனவு – 1

**பேரன்புமிக்க தோழர்களே!**

**போராட்டங்கள் பல உண்டு, ஒவ்வொரு போராட்டமும் மிக, மிக முக்கியப் பங்கு வகிக்கின்றது.**

அத்தகைய போராட்டங்களில் தத்துவப் போராட்டம் மிக முக்கியப் போராட்டமன்றோ!

தத்துவமற்ற நடைமுறையோ அல்லது நடைமுறையற்ற தத்துவமோ வெற்றி பெறாது. ஒன்றில்லாமல் ஒன்றில்லை. தத்துவம் – நடைமுறை என்ற இரண்டுமே இரண்டு கண்களைப் போன்றது.

மார்க்சிய, லெனினிய தத்துவமின்றி நாம் எதனையும் எதிர்கொள்ள இயலாது. எதனையும் தத்துவார்த்த அடிப்படையில் நாம் அணுகவேண்டும்.

மார்க்சிய, லெனினிய பார்வையின்றி நாம் பார்ப்போமேயானால் பிழை ஏற்படும்.

ஒவ்வொன்றையும் நாம் மார்க்சிய கண் கொண்டு பார்ப்போமேயானால் பிழைகள் நம்மை நெருங்கா–

அத்தகைய தத்துவார்த்தப் பயிற்சியை நாம் ஒவ்வொருவரும் பெற்றிட பல்வேறு முயற்சிகளை இடையறாது மேற்கொள்ள வேண்டும்.

அவற்றில் ஒன்று தத்துவார்த்த பயிற்சி முகாம்.

நமது கட்சி அமைப்பிலும் மற்றும் வர்க்க, வெகுஜன அமைப்புகளிலும் இடையறாது பணியாற்றி வரும் தோழர்கள் அனைவருக்கும் தத்துவார்த்த பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது.

இத்தகைய பயிற்சியை அளித்திட நமது கட்சியில் கட்சிக் கல்வி இலாகா செயல்பட்டு வருவதை நாம் நன்கு அறிவோம்.

நமது கட்சியின் மத்திய தலைமையில் கட்சிக் கல்வி இலாகா செயல்பட்டு வருகின்றது.

மத்திய கட்சிக் கல்வி இலாகா தொடர்ந்து ஆங்கில மற்றும் இந்தி வகுப்புகளை நடத்தி வருகின்றன.

தமிழ்நாட்டிலும் கட்சிக் கல்வி இலாகா செயல்பட்டு வருகின்றது. கல்வி முகாம்களும் நடத்தப்பட்டு வருகின்றன.

சிவகங்கையில் நடைபெற்ற நமது கட்சியின் அமைப்பு நிலை மாநாட்டில் எடுக்கப்பட்ட பல முடிவுகளில் ஒன்றான கட்சிக் கல்வியை தொடர்ந்து நடத்துவது என்று முடிவு செய்தோம்.

முடிவை நிறைவேற்றும் வகையில் மாநிலக் குழு உறுப்பினர்களுக்கான முகாம் திண்டுக்கல் மாவட்டம், தொப்பம்பட்டியில் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து மாவட்டக் குழு உறுப்பினர்களுக்கான முகாம்களும், இடைநிலைக் குழு, கிளைச் செயலாளர்களுக்கான முகாம்களும் நடைபெற்றன.

இம்முகாம்கள் வெற்றிகரமாக நடைபெற்று வந்த நிலையில், உலகத்தையே முடக்கிப் போட்ட கொடிய கொரோனா நமது பணிகளையும் முடக்கியது.

மீண்டும் வகுப்புகளை நடத்திட தொடங்கினோம். குறிப்பாக அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற தோழர்களுக்கான பயிற்சி முகாம் கோவை மாவட்டம், ஆழியாறில் நடைபெற்றது. நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் மிகுந்த ஆர்வத்துடன் பங்கு பெற்று சென்றனர்.

இவ்வாறு ஆங்காங்கே வகுப்புகள் தொடர்ந்து நடை பெற்று வருகின்றன.

இதனை ஒரே நேரத்தில் ஆண்டு முழுவதும் மார்க்சிய கல்வி நடைபெற வேண்டும், அதற்குரிய முறையில் கட்சிக் கல்விக்கான நிரந்தர கட்டிடம் கட்டி அமைக்கப்பட வேண்டும் என்பது நமது கட்சியின் நீண்ட நெடுநாள் கனவாகும்.

அத்தகைய கனவு பகற் கனவாக இல்லாமல் இன்று கோபிச்செட்டிபாளையத்தில் நிறைவேறி வருகின்றது.

**தோழர் சி.எஸ்.சுப்பிரமணியம்**

**கோபிச்செட்டி பாளையத்தில் இக்கட்டிடம் அமைந்திட பெரும் காரணமாக இருந்தவர் தோழர் சி.எஸ்.சுப்பிரமணியம் ஆவார்.**

ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டம் நிர்வாக வசதிக்காக தஞ்சை, திருவாரூர், நாகை, மயிலாடுதுறை என நான்கு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள கோமல் கிராமம்தான் தோழர் சி.எஸ். சுப்பிரமணியம் சொந்த ஊராகும்.

அவரது தந்தை கல்வித் துறையில் அதிகாரியாக பணியாற்றியவர். பணியின் காரணமாக சென்னைக்கு வந்தார்கள்.

மூத்த மகனான தோழர் சி.எஸ்.சுப்பிரமணியத்தை உயர் கல்விக்காக லண்டனுக்கு அனுப்பி வைத்தனர்.

அப்போதைய ஐசிஎஸ் (தற்போது ஐஏஎஸ்) படிக்க லண்டன் மாநகருக்குச் சென்றார். ஐசிஎஸ் படிப்போடு மார்க்சியத்தையும் கற்றுத்தேர்ந்தார்.

மாணவர் மன்றம் அமைப்பை உருவாக்கி இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றார். படிப்பு முடிந்து, தாயகம் திரும்பிய பின்பும் தனது அரசியல் பணியைத் தொடரச் செய்தார்.

தமிழ்நாட்டில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்குவதில் பெரும் பங்கு வகித்தார்.

சிந்தனை சிற்பி சிங்காரவேலர், பேராசான் ஜீவா, விவசாயிகள் பேரியக்கத்தை உருவாக்கிய தோழர் சீனிவாசராவ், தோழர் பி.இராமமூர்த்தி போன்ற மதிப்புமிக்க தலைவர்களோடு இணைந்து பணியாற்றியவர்.

சென்னை மாகாணம் என்று செயல்பட்ட போது, அதன் முதல் செயலாளர் தோழர் சி.எஸ். என்றும் கூறப்படுகின்றது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தஞ்சை மாவட்ட முதல் அமைப்பு கூட்டம் திருத்துறைப்பூண்டி அருகில் உள்ள பாண்டி கிராமத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாநில கட்சியின் சார்பில் கலந்து கொண்டு வழிகாட்டியவர் தோழர் சி.எஸ்.சுப்பிரமணியம் என்று தோழர் ஏ.வி.இராமசாமி எழுதியுள்ள தஞ்சை மாவட்ட வரலாறு நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நேர்மையும், எளிமையும், உறுதியும், கட்சிக் கட்டுப்பாடும் குறித்து நாம் அனைவரும் அவரிடம் பாடம் படித்திட வேண்டும்.

அவரிடம் தெரிந்து கொள்ள வேண்டியதும், கற்றுக்கொள்ள வேண்டியது ஏராளம், ஏராளம்.

தோழர் சி.எஸ். நம்மோடு 102 வயது வரை வாழ்ந்தார்.

அவரது பிறந்த நூற்றாண்டு விழாவை கட்சி கொண்டாட வேண்டும் என்று முடிவு செய்தது.

அவரின் ஒப்புதல் வேண்டும். ஒப்புதலைப் பெறுவதற்காக நமது மூத்த தோழர் ஆர்.என்.கே. அவர்களை அனுப்ப கட்சி முடிவு செய்தது. கட்சியின் முடிவை நிறைவேற்ற தோழர் ஆர்.என்.கே.வும் கோபி சென்று அவரது இல்லத்தில் தோழர் சி.எஸ். அவர்களை சந்தித்து, கட்சியின் முடிவைக் கூறினார்.

அமைதியாகக் கேட்டுக் கொண்ட தோழர் சி.எஸ். நூற் றாண்டு விழாவை கொண்டாட ஒப்புதல் வழங்க மறுத்துவிட்டார். கட்சி விரும்பியபடி விழா கொண்டாட முடியவில்லை.

தனிமையில் இருக்கின்றார், அவ்வாறு இருக்கக்கூடாது, சென்னைக்கு அழைத்து வந்து விட வேண்டுமென பல முயற் சிகள் மேற்கொள்ளப்பட்டது. எளிதாக அவரது இசைவைப் பெறமுடியவில்லை.

மாநில கட்சியின் செயற்குழு முடிவு என்று மாநில செயலாளர் தோழர் தா.பாண்டியன் நேரடியாக கடிதத்தை கொடுத்தபோது, கடிதத்தை படித்த தோழர் சி.எஸ். கட்சி முடிவு செய்து விட்டது, முடிவை ஏற்கிறேன் எனக் கூறி அதன் பின்னரே சென்னை வந்தார்.

சென்னையில் அவரது சகோதரர் மகன் மற்றும் சகோதரி மகள் மற்றும் உறவினர்கள் நிரம்ப உள்ளனர்.

அவர்கள் அனைவருமே சி.எஸ்.இடம் மிகுந்த அன்பும், மரியாதையும் உடையவர்கள். தங்களது இல்லத்திற்கு அழைத்துச் சென்று பராமரிக்க வேண்டுமென்று முயற்சித்தார்கள். ஆனால் தோழர் சி.எஸ். அங்கெல்லாம் வர மாட்டேன் என்று பிடிவாதமாகக் கூறியதுடன் கட்சிப் பராமரிப்பில் இருந்து கொள்கிறேன் என உறுதிபட தெரிவித்து விட்டார். அம்பத்தூரில் உள்ள என்.சி.பி.எச். நிறுவனத்தில் ஒரு அறையில் தன் வாழ்நாள் இறுதிகாலம்வரை தங்கியிருந்து இயற்கை எய்தினார்.

விடுதலைப் போராட்ட வீரராக, கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்கும் சிற்பிகளில் ஒருவராக, திகழ்ந்த தோழர் சி.எஸ்.சுப்பிரமணியம் கோபிசெட்டிபாளையத்தில் தான் வாழ்ந்த கட்டிடத்துடன் கூடிய இடத்தையும், தனது வங்கி சேமிப்பில் இருந்த ரூ.20 லட்சத்தையும் கட்சிக்கு ஒப்படைத்தார். (உயில் மூலமாக)

அவரது மறைவிற்கு பின்னர் அவரது குடும்பத்தாரிடம் இடம் மற்றும் வங்கிக் கணக்கு புத்தகங்களை ஒப்படைத்த போது வாங்க மறுத்து, அவைகள் எங்களுக்கு வேண்டாம், நாங்கள் எல்லோரும் நன்கு வசதியாக இருக்கின்றோம், ஆகவே கட்சிக்கே எடுத்துக்கொள்ளுங்கள், அவரது பெயர் நிலைத்திருக்கும் விதமாக ஏதாவது செய்யுங்கள் என்று ஒருசேர மிகப் பெருந்தன்மையுடன் கூறினார்கள்.

தோழர் சி.எஸ். வழங்கிய இடத்தில்தான் நாம் தற்போது நிரந்தரக் கல்வி கூடம் கட்டி வருகின்றோம்.

அடுத்த வாரம் சந்திப்போம். வணக்கம்.


**தோழமைமிக்க**

**இரா.முத்தரசன்**



நா. பெரியசாமி

# உத்தரப் பிரதேசம் மதவெறி ஆட்சிக்கு முடிவு கட்டும்



**ஒன்றிய அரசின் அதிகாரத்தில் இருக்கும் பாஜக அரை இறுதி ஆட்டத்தை சந்திக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. அரை இறுதி ஆட்டத்திற்கு செல்லாமல், இறுதி ஆட்டத்திற்கு சென்றுவிடும் முயற்சியில் ஈடுபட்டு தோற்றுப் போனது.**

கோவிட் 19, ஒமிக்கரான் போன்ற நோய்த்தொற்றுப் பரவலைக் காரணம் காட்டி தேர்தலை ஒத்திவைக்கலாம் என்ற முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது.

தேர்தல் தொடர்பான நடவடிக்கைகள் குறித்து பிரதமர் அலுவலகம் நடத்திய ஆய்வுக் கூட்டத்திற்கு தேர்தல் ஆணையருக்கு அழைப்பு அனுப்பப் பட்டதும், , அலகாபாத் உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவர், தேர்தல் ஆணையத்திற்கு வேண்டுகோள் விடுத்ததும் சில கேள்விகளை எழுப்பியது.

நல்லவேளை அரசியலமைப்பு அதிகாரத்துடன், தற்சார்பு நிலையில் இயங்கி வரும் இந்தியத் தேர்தல் ஆணையம், தன் மீது சந்தேக நிழல் படிந்து விடக்கூடாது என்பதில் எச்சரிக்கையாக நடந்து கொண்டது.

உத்தரப்பிரதேசம், உத்தர்காண்ட், பஞ்சாப், மணிப்பூர் மற்றும் கோவா ஆகிய ஐந்து மாநிலங்களுக்கான சட்டமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. 2022 பிப்ரவரி 14 தொடங்கி, மார்ச் 03 ஆம் தேதி வரையிலும் பல கட்டங்களாக வாக்குப் பதிவு நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் கோவா, பஞ்சாப் மற்றும் உத்தர்காண்ட மாநிலங்களில் ஒரே நாள் 14.02.2022 வாக்குப் பதிவு நடைபெறும்.

மணிப்பூர் மாநிலத்தில் 27.02. 2022 மற்றும் 03.03. 2022 ஆகிய தேதிகளில் இரண்டு கட்டமாக வாக்குப் பதிவு நடைபெறும்.

உத்தரப்பிரதேசத்தில் 14.02. 2022, தொடங்கி 07.03.2022 ஆம் தேதி வரை ஏழு கட்டங்களாக வாக்குப் பதிவு நடைபெறும் ஐந்து மாநிலங்களிலும் வாக்குப் பதிவு முடிந்து, வாக்குகள் எண்ணிக்கை. 10.03.2022 ஆம் தேதி நடைபெறும் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

ஐந்து மாநிலங்களில் 690 சட்டமன்றத் தொகுதிகளுக்கு நடைபெறும் தேர்தலில் 403 சட்டமன்றத் தொகுதிகள் கொண்ட உத்தரப் பிரதேசம் மாநிலத் தேர்தல் நாட்டின் கவனத்தை ஈர்த்துள்ளது.

கடந்த 2017 ஆம் ஆண்டு நடந்த உபி மாநில சட்மன்றத் தேர்தலில் 384 தொகுதிகளில் போட்டியிட்டு 312 தொகுதிகளில் வெற்றி பெற்றது. இருப்பினும் 8 தொகுதிகளில் வைப்புத் தொகையை இழந்தது என்பதும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

உபியில் பாஜக பெற்ற வெற்றியின் நாயகர் யோகி ஆதித்திய நாத் என்று ஆரவாரம் செய்யப்பட்டது. உண்மையில் பாஜக தனது பலத்தால் வெற்றி பெறவில்லை, அதனை எதிர்த்த கட்சிகளிடம் பரஸ்பர புரிந்துணர்வும், ஒற்றுமையும் இல்லாத பலவீனம் தான் பாஜக அதிகாரத்தில் அமர வழி வகுத்தது.

கடந்த 2017 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் ஆறு தேசிய கட்சிகள் பாரதிய ஜனதா கட்சி, பகுஜன் சமாஜ் கட்சி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கட்சி, இந்திய தேசிய காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ் கட்சி , இரண்டு முக்கிய மாநிலக் கட்சிகள் சமாஜ்வாதி கட்சி மற்றும் ராஷ்டிரிய லோக் தளம் உட்பட தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்யப்பட்ட (அங்கீகாரம் பெறாத) கட்சிகள் என 302 கட்சிகள் தேர்தல் களத்தில் போட்டியிட்டன. இது தவிர சுயேட்சை வேட்பாளர்களும் தேர்தல் களத்தில் இருந்தனர்.

இந்தப் பெரும் தேர்தல் களத்தில் பாஜக 39.67 சதவீத வாக்குகள் பெற்றது. பாஜகவிற்கு.எதிராக 60.33 சதவீத வாக்குகள் பதிவானது என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் யோகி ஆதித்திய நாத் தலைமையிலான ஆட்சியில் மக்களின் வாழ்க்கை பிரச்சனைகள் எதுவும் தீர்க்கப்படவில்லை. மறாக அதிகரித்துள்ளது. கோரக்பூர் உத்தரப் பிரதேச மாநிலத்தில் உள்ள முக்கிய நகரம். இங்கு பாபா ராகவ் தாஸ் அரசினர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அமைந்துள்ளது. இந்த மருத்துவ மனை மாநிலத்தில் அமைந்துள்ள பெரிய மருத்துவ மனைகளில் ஒன்றாகும்.

இதே கோரக்பூரில் அமைந்துள்ள மடத்தின் அதிபதியாக ஆட்சி நடத்தி வருபவர் யோகியார். இந்த முறை இந்த நகரின் தொகுதி வேட்பாளராக யோகி அறிவிக்கப்பட்டுள்ளார்.

இங்கு பாபா ராகவ் தாஸ் அரசினர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் உயிராபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வரும் குழந்தைகளுக்கு ஆக்சிஜன் (மருத்துவ உயிர் காற்று) வழங்குவது தடைபட்டதால் ஒரே நாளில் (2017 செப்டம்பர்) 30 க்கும் மேற்பட்ட குழந்தைகள் மரணமடைந்தது நாட்டை உலுக்கியது.

இது பற்றி விசாரித்தால் 2014 ஆம் ஆண்டு முதல் ஆக்சிஜன் கிடைக்காமல் தினசரி 17 குழந்தைகள் வரை மரணமடைந்து வரும் அதிர்ச்சியளிக்கும் செய்தி வெளியானது.

இந்த மருத்துவ மனையில் ஆக்சிஜன் வழங்க "ஒப்பந்தம்" செய்து கொண்ட நிறுவனத்திற்கு முறையாக பணம் கொடுக்காமல், ஊழலும், முறைகேடுகளும் மலிந்து, குழந்தைகளின் உயிரை பறித்து வரும் கொடூரம் வெளிவந்தது.

உண்மையை உரக்க பேசிய, மரணத்தின் பிடியில் இருந்து குழந்தைகளை காப்பாற்றுவதில் அக்கறை காட்டிய மருத்துவர் கஃபீல் கான் பணி நீக்கம் செய்யப்பட்டதும், அவரை சிறையில் அடைத்து சித்தரவதை செய்ததும் யோகி அரசின் "யோக்கிதாம்சத்தை " அம்பலப்படுத்தியது.

ஹாத்ராஸ் சம்பவம் இப்போது நினைத்தாலும் ரத்தத்தை உறைய வைக்கும் பயங்கரமாகும்.

பட்டியல் சாதியை சார்ந்த 19 வயது இளம் பெண், சமூக ஆதிக்கம் செலுத்தும் தாக்கூர் சாதி வெறியர் நான்கு பேர்களிடம் சிக்கி சீரழிந்ததை மறக்க முடியுமா?

தொட்டால் தீட்டு, பட்டால் குற்றம் என்று "தீண்டாமை செயலை" வாழ்க்கை நெறியாகக் கொண்ட, சாதி வெறி பிடித்த நான்கு மனித மிருகங்கள், கடந்த 2020 செப்டம்பர் 20 ஆம் தேதி 19 வயது இளம் பெண்ணை கதறக் கதற வன்புணர்வு செய்து, பாலியல் தாக்குதல் நடத்தி, அந்தக் குற்றச் செயலின் தடயங்களை அழிக்க, அந்த அபலைப் பெண்ணின் முதுகெலும்பையும், இடுப்பு எலும்பையும் முறித்து, நொறுக்கின. எங்கே உண்மையை வெளியே சொல்லி விடுவாளோ என்று கருதிய, அந்த மிருகங்கள் அந்தப் பெண்ணின் நாக்கை அறுத்து எடுத்து விட்டன..

குற்றுயிரும், குலைந்த உடலுமாக கிடந்த மகளை அள்ளி எடுத்து, நீதி கேட்டு பெற்றோர்கள் நடத்திய போராட்டம் கற்பரசி கண்ணகி நடத்திய போராட்டக் காவியத்தை மிஞ்சியதாகும்.

**நாட்டை உலுக்கிய இந்தக் கொடூரத்தை நிகழ்த்திய கொடுங் குற்றவாளிகளுக்கு நாக்பூர் குரு பீடத்தின் "சிஷ்யர்கள் " பாஜக பிரமுகர்கள் என அறியப்பட்ட சாதி வெறியினர் ஆதரவாக குரல் கொடுத்ததை வரலாறு மன்னிக்காது. வாக்கு சாவடிகள் கட்டாயம் நினைவூட்டும்.**

யோகி ஆதித்திய நாத் ஆட்சியில் பட்டியல் சாதியினர் மீதான தாக்குதல் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இந்த விபரத்தை ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சகம் வெளியிடும் புள்ளி விவரங்கள் உறுதி செய்கின்றன.

நாடு முழுவதும் நடைபெறும் தாக்குதலில் 25 சதவீதத் தாக்குதல் உத்தரப் பிரதேசத்தில் நடக்கின்றன. கடந்த 2019 ஆம் ஆண்டில் 45 ஆயிரத்து 935 தாக்குதல் சம்பவங்கள் நடந்துள்ளன இது முந்தைய ஆண்டை விட (2018) அதிகம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனநாயக உரிமைகள் மறுக்கப்படுவதும், உரிமைப் போராட் டங்களை ஒடுக்க நேரடித் தாக்குதல் நடத்துவதும் அரங்கேற்றப் பட்டிருக்கிறது. ஒன்றிய அரசு நிறைவேற்றிய விவசாயிகள் விரோத , கார்ப் பரேட் ஆதரவு மூன்று வேளாண் வணிக சட்டங்களுக்கு எதிராக நாடு முழுவதும் விவசாயிகள் ஓராண்டுக்கும் மேலாக போராடி வந்தனர். இந்தப் போராட்டத்தின் ஒரு பகுதியாக உத்தரப் பிரதேசம் லக்கிம்பூர் கேரியில் விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

அமைதியான முறையில், அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த விவசாயிகள் மீது ஒன்றிய அரசின் உள் துறை இணை அமைச்சர் அஜாய் மிஸ்ரா மகன் அஸீஸ் மிஸ்ராவும், அவனது அடியாட்களும் கார்களை ஏற்றி விவசாயிகளை படுகொலை செய்த, பயங்கரவாதச் செயலை நாடு மறந்துவிடவில்லை.

இந்தக் குற்றச் சம்பவம் தொடர்பான வழக்கை விசாரித்து வரும் தேசிய புலனாய்வு முகமை, லக்கிம்பூர் கேரியில், விவசாயிகள் படுகொலை செய்யப்பட்டது. திட்டமிட்ட சதிச் செயல் என உறுதி செய்துள்ளது. உத்தரப்பிரதேசம் முழுவதும் விவசாயிகள் பேரெழுச்சி ஏற்பட்டுள்ளது.

இந்தப் பின்னணியில் கடந்த 2017 ஆண்டு பாஜக பெற்ற வாக்குகளின் தளங்கள் தகர்ந்து வருகின்றன. இதன் காரணமாக யோகி அமைச்ரவையில் இருந்த சுவாமி பிரசாத் மௌரியா, தரன் சிங் சைனி, பகவதி சாகர், வினைய் ஷாக்யா போன்றவர்களும், பல சட்டமன்ற உறுப்பினர்களும் பாஜகவிற்கு முழுக்குப் போட்டு, வெளியேறி வருகிறார்கள்.

உத்தரப் பிரதேச மாநில பாஜக அரசுக்கு எதிராக எழுந்துள்ள மக்களின் உணர்வுப் பேரலையில். யோகியின் அதிகாரத்தை பறித்து, அவரை வெளியேற்றும் என்பது உறுதியாகி வருகிறது. தொடர்ந்து ஒன்றிய அரசின் அதிகாரத்தில் மதச் சார்பற்ற, ஜனநாயக சக்திகளை அமர்த்த கட்டியம் கூறும் முடிவை உத்தரப் பிரதேசம் வழங்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

தொடர்புக்கு: **9443118544**



**தலித் இயக்கத் தலைவர்கள்**

## இரா.நல்லகண்ணுவை சந்தித்து பொங்கல் வாழ்த்து

தமிழர் திருநாள் பொங்கல் விழாவை முன்னிட்டு தலித் இயக்கத்தின் தலைவர்கள் புரட்சி தமிழகம் தலைவர் ஏர்ப்போட் மூர்த்தி, அகில இந்திய அம்பேத்கர் மக்கள் கழகம் தலைவர் மாமல்லன், குடிசை மக்கள் முன்னேற்ற கழக தலைவர் ராஜேந்திரன், ஏப்ரல் 14 இயக்கம் சசிக்குமார், டாக்டர் அம்பேத்கர் மன்ற மாநிலச் செயலாளர் எம்.வி.சேகர், காந்தி நகர் குடியிருப்பு தலைவர் கே.குப்புராஜ், குமார் ஆகியோர் ஜன. 15 அன்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் இரா.நல்லகண்ணு அவர்களை சந்தித்து புத்தாண்டு, பொங்கல் வாழ்த்துக்களை தெரிவித்து புத்தர் சிலையை பரிசாக அளித்தனர். இந்நிகழ்வின் போது தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாநிலச் செயலாளர் எஸ்.கே.சிவா, மாநில தலைமைக்குழு உறுப்பினர் லி.உதயகுமார் ஆகியோர் உடன் இருந்தனர்.

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 84 இதழ் 42

# வேலுநாச்சி, வ.உ.சி, பாரதி இங்கு இனியும் பிறப்பார்கள்!

குடியரசு தின அணிவகுப்பில் தமிழ்நாட்டு அலங்கார ஊர்திக்கு ஒன்றிய அரசு அனுமதி மறுத்துவிட்டது. கேரள, மேற்கு வங்க ஊர்தி களுக்கும் இடமில்லை. மூன்று முதல்வர்களும் பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளனர்.

பாதுகாப்புத் துறை முடிவு எடுக்கிறது, அரசுக்கும் அதற்கும் சம்பந்த மில்லை, அறிவாளிகளும் நடுநிலையாளர்களும் கொண்ட குழு தான் முடிவு எடுக்கிறது என்று ஒன்றிய அரசு கூறுகிறது. ஊர்தி யின் வடிவமைப்பை வரைபடமாகவும், முப்பரிமாண வடிவமா கவும் குழுவிடம் தரவேண்டுமாம். பார்த்து திருத்தங்களைச் சொல் வார்களாம். அவர்கள் மனநிறைவு அடையும் வகையில் மாற்றங் களைச் செய்வதே விதிமுறையாம்.

கேரளா அலங்கார ஊர்தியில், நாராயண குரு சிலை இடம்பெற் றது. அதை மாற்றி ஆதிசங்கரரின் உருவத்தை வைக்குமாறு குழு சொன்னதாம். சமூக சீர்திருத்தவாதி நாராயணகுருவை, சமயத் தலைவர் ஆதிசங்கரராக மாற்ற வேண்டும் என அதிகாரிகள் அரசுக்கு உத்தரவிடுவது, அப்பட்டமான அராஜகம் அல்லவா!

தமிழ்நாட்டு அலங்கார ஊர்தியில் இடம்பெற்றிருந்த உருவங்களில் பாரதியாரை தவிர, வ.உ.சிதம்பரனார், வேலு நாச்சியார், மருது சகோதரர்கள் ஆகியோரை யாருக்குமே தெரியாது என்று காரணம் கூறி அனுமதி மறுக்கப்பட்டதாம்.

தமிழ்நாட்டு முதல்வர் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில், "தமிழ் நாட்டின் பிரதிநிதி, மூன்று முறை வல்லுநர் குழு முன்பு ஆஜராகி, ஏழு வித வடிவங்களைப் பார்வைக்குத் தந்திருக்கிறார். முதல் தடவையிலேயே, மனநிறைவு ஏற்பட்டதாக அதிகாரிகள் சொல்லி யிருக்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டுக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டது ஆழ்ந்த ஏமாற்றத்தைத் தருகிறது. தாங்கள் தலையிட்டு ஊர்தியை சேர்த்துக் கொள்ள அனுமதியுங்கள்" என்று கோரியிருக்கிறார். பிரதமரோ மூத்த அமைச்சர்களோ பதில் தரும்முன்பே அதிகாரிகளும் அண்ணாமலையும் குதிக்கிறார்கள்.

ஒன்றிய அரசின் அதிகாரி, "இந்த மூன்று முதல்வர்களுக்கும் நேர்மறைத் திட்டமே கிடையாது. தவறான தகவல்களைப் பரப்பும் அந்தப் பழைய தந்திரத்தையே ஆண்டாண்டுகளாகப் பயன்படுத் துகிறார்கள்" என்று அரசியல் பேசுகிறார். கூட்டரசு தத்துவத்தை மோடி அரசு மதிக்கும் இலட்சணம் இதுதான். ஜனநாயக உணர்வுள்ள அனைவரும் இதைக் கண்டிக்க வேண்டும்.

2015ஆம் ஆண்டில், தமிழ்நாடு அரசின் அலங்கார ஊர்தியில், அன்றைய முதல்வர் ஜெயலலிதாவின் பிரமாண்ட உருவத்தின் காலடியில் நின்று அமெரிக்க அதிபர் பாரக் ஒபாமாவும், மக்கள் சீனக் குடியரசுத் தலைவர் ஜி ஜிங்பிங்கும் வணங்குவதாகப் படம் இருந்தது. அந்த ஊர்தி வெள்ளோட்டமும் விடப்பட்டது. சிறப்பு விருந்தினராக வந்தவர் பராக் ஒபாமாவேதான். அவர் கண்ணில் பட்டுவிடக்கூடாது என்றோ என்னவோ, கடைசி நிமிடத்தில் அதனை விலக்கினார்கள். அதுவும் மோடியின் ஆட்சியில்தான் நிகழ்ந்தது. முப்பரிமாண வரைபடங்களை, எந்தப் பேரறிவாளர் குழு அனுமதித்தது எனத் தெரியவில்லை.

ஆகச்சிறந்த, அற்புதமான விடுதலைப்போராட்ட வீரர்களைத் தந்த தமிழ்நாட்டுக்கு, 75வது குடியரசுதின அணிவகுப்பில் வாய்ப் பளிக்க வேண்டும் என்று, இங்கிருந்து சென்றுள்ள ஒன்றிய அமைச்சர் எல்.முருகன் குரல் தந்திருக்கலாம். வேலு நாச்சியார், கட்டபொம்மன் தொடங்கி தமிழ்நாட்டின் விடுதலை வீரர்களை பாஜககாரர்கள் அண்மையில் போற்றிப் பாராட்டுவதெல்லாம் வெறும் நடிப்புத்தான் என்பதை, ஒன்றிய அரசு இப்படித் தோலுரிப்பதையாவது குறைந்தபட்சம் தடுத்திருக்கலாம்.

ஆனால் அவர்களது பார்வை வேறு திசையில் செல்கிறது. விலை உயர்ந்த ஆடைகளை அணிந்து, நாடு நாடாக சுற்றுகிற ஒரு மன்னனும் அவரது அமைச்சருமாக தொலைக்காட்சி நாடகத்தில் இரு குழந்தைகள் நடித்தனர். அந்த அரசன் பிரதமர் மோடிதான் என உறுதிப்படுத்திய பாஜக மாநில தலைவர், இழிவுபடுத்தியதைப் பொறுக்க மாட்டோம் என்று அலறுகிறார். இல்லாத ஒன்றைச் சொன்னால் தானே இழிவு!

ஒளிபரப்புத் துறை துணை அமைச்சராக எல். முருகன் பொறுப் பேற்றபோது, இனி தமிழ்நாட்டில் உள்ள ஊடகங்களை கட்டுப்பாட் டுக்குள் கொண்டு வந்து விடுவோம் என முரசறைந்தவர் அவர்.

அந்த நிகழ்ச்சியை ஒளிபரப்பிய வடநாட்டுத் தொலைக்காட்சி இங்கு பிரபலமடைய பல ஆண்டுகளாக முயற்சித்து, இப்போதுதான் எல்லோரும் விரும்பிப் பார்க்கும் விஷயத்தைக் கண்டறிந்துள்ளது.

அந்த குழந்தைகள் நிகழ்ச்சி மீது அமைச்சர் எல்.முருகன் நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துள்ளார் என ஆனந்தக் கூத்தா டுகிறார் அண்ணாமலை. பாரதி வாக்கில் இது "சீச்சீ..சிறியர் செய்கை"

அனுமதி மறுக்கப்பட்ட அந்த அலங்கார ஊர்தி தமிழகம் முழு மையும் வலம் வரும் என்ற முதல்வரின் அறிவிப்பை உச்சி மீது வைத்து மெச்சுகிறோம். வேலுநாச்சியும், வஉசியும், பாரதியும் தமிழகத்தில் பிறந்து கொண்டே இருப்பார்கள்!




>> 01ம் பக்கத் தொடர்ச்சி

தனது கனல் மூட்டும் கவிதைகளாலும், கருத்தாயுதம் தரும் கட்டுரைகளாலும் எழுச்சியூட்டிய புரட்சியாளர்

மகாகவி பாரதியார் காலத்தை வென்று வாழ்பவர். இவர்களது தியாக வாழ்வை சித்தரிக்கும் ஊர்தி களுக்கு குடியரசு தின அணி வகுப் பில் இடமில்லை எனில் தமிழகம் கொந்தளிக்கும் என்பதை ஒன்றிய அரசு உணர வேண்டும். உடனடியாக தமிழ்நாடு அரசின் ஊர்திகள் அனுமதி அளிக்கும் அறிவிப்பை வெளியிட வேண்டும்

தமிழ்நாட்டையும், தமிழ்நாட்டு விடுதலைப் போராட்ட வீரர்களையும் அவமதிக்கும் ஒன்றிய அரசை இந் தியக் கம்யூனிஸ்ட் கட்சி வன்மை யாகக் கண்டிக்கிறது. ஒன்றிய அரசின் வன்மப் போக்கைக் கண்டித்து தமிழ்நாடு முழுவதும் கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்துமாறு கட்சி அமைப்புகளை கேட்டுக் கொள்வதுடன் இப்போராட்டத்தில் ஜனநாயக சக்திகள் ஒருங்கிணைந்து போராட முன் வர வேண்டும் என கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலா ளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார். இதன் அடிப்படையில் தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

### திருத்துறைப்பூண்டி

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் ஒன்றிய மோடி அரசை கண்டித்து இந்தியக் கம்யூனிஸ்ட்கட்சியின் தேசியக் குழு உறுப்பினர் கோ.பழனிச்சாமி எக்ஸ்.எம். எல்.ஏ. தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கே. உலகநாதன் எக்ஸ்.எம்.எல்.ஏ., க.மாரிமுத்து எம். எல்.ஏ., ஐ.வி.நாகராஜன், அ.பாஸ்கர் ஊ.ஒ. பெருந்தலை வர், வி.த. செல்வன் வி.சி.க., அய்யப்பன், கிருஷ்ணமூர்த்தி தி.க. ஆகியோர் கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு முன்னிலை வகித்தனர். ஆர்ப்பாட்டத்தில் 300 க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு ஒன்றிய அரசுக்கு எதிரான கண்டன முழக்கமிட்டனர்.

### கோவை

கோவையில் மாவட்ட செயலாளர் வி.எஸ்.சுந்தரம் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாநில பொருளாளர் எம்.ஆறுமுகம் ஆர்ப்பாட்டம் குறித்து விளக்கவுரையாற்றினார். கட்சியின் மாவட்ட துணை செயலாளர்கள் ஆர்.தேவராஜ், சி.சிவகாமி, மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் ஆர்.சுதர்சன், கே.எம். செல்வராஜ், எம்.குணசேகர், ஜே.ஜேம்ஸ், வழக்கறிஞர்கள் எஸ்.ராதாகிருஷ்ணன், கே.சுப்பிரமணியன், ஏ.ஐ.டி.யூ.சி. மாவட்ட கவுன்சில் பொதுசெயலாளர் சி.தங்கவேல், என்.செல்வராஜ், ஆர்.பாலகிருஷ்ணன், ப.பா.ரமணி, அஷ்ரப் அலி, கே.புருஷோத்தமன், வெ.வசந்தகுமார், கே.ரவீந்திரன், என்.கணேசன், ராபர்ட், ஜே.கலா, சி.நந்தினி, கலை அஸ்வினி உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

செந்தட்டிகாளை உள்பட பலர் கலந்து கொண்டனர். இராஜபாளையத்தில் நகர துணை செயலாளர் விஜயன் தலைமையில் நடைபெற்றது. ஸ்ரீவில்லிபுத்தூரில் வட்ட செயலாளர் பலவேசம் தலைமையில் நகர செயலாளர் மூர்த்தி, துணை செயலாளர் செல்வம் உள்பட பலர் கலந்து கொண்டனர். சத்திரப்பட்டியில் ஒன்றிய செயலாளர் முத்துமாரி தலை மையில் துணை செயலாளர்கள் இராமச்சந்திரன், ஜெயக்குமார், இளைஞர்மன்ற மோகன் உள்பட பலர் கலந்து கொண்டனர். சிவகாசியில் மாவட்ட பொருளாளர் சமுத்திரம் தலைமையில் வட்ட செயலாளர் ஜீவா, துணை செயலாளர் கலைவாசன், இளைஞர்மன்ற டிமிட்ரோவ், சுரேஷ்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

அருப்புக்கோட்டையில் மாநில குழு உறுப்பினர் செந்தில் குமார் தலைமையில் நடைபெற்றது. வட்ட செயலாளர் முனியசாமி, துணை செயலாளர் கரியமால், மீனவர்சங்க செல்வம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### மதுரை

இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் மதுரை மாநகர் மாவட்ட குழு சார்பில் பேச்சியம்மன் படித்துறையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநகர் மாவட்ட செயலாளர் எம்.எஸ். முருகன், ஏஐடியூசி மாவட்ட செயலாளர் எம்.நந்தாசிங், பி.எஸ்.என்.எல். சேது, மாவட்ட நிர்வாகிகள் இரா.முருகன் எம்.ஆர்.லோகநாதன், ஜனசக்தி என்.ஜீவா உட்பட பலர் கலந்துகொண்டனர்.

### மணப்பாறை

மணப்பாறை காமராஜ் சிலை அருகில் ஒன்றிய அரசை கண்டித்து நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட குழு உறுப்பினர் சௌக்கத்அலி தலைமை வகித்தார். ஆர்ப்பாட்டத்தை விளக்கி புறநகர் மாவட்ட துணைச் செயலாளர் பழனிசாமி, நகர செயலாளர் ஜனசக்தி உசேன், த.க.இ.பெ. மாவட்ட தலைவர் தங்கமணி உட்பட நிர்வாகிகள் கலந்துகொண்டு முழக்கமிட்டனர்.

### பரமக்குடி

பரமக்குடியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நகர் செயலாளர் என்.எஸ்.பெருமாள் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் என்.கே.ராஜன், எஸ்.பி.ராதா, கே.ஜீவா, முன்னாள் நகர் மன்றத் தலைவர் ராசி என்.போஸ், த.க.இ.பெ. மாவட்ட செயலாளர் ந.சேகரன், சிபிஎம் தாலுகா செயலாளர் தி. இராஜா உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

### சத்தியமங்கலம்

ஈரோடு வடக்கு மாவட்டம் சத்தியமங்கலத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு ஸ்டாலின் சிவக்குமார் தலைமை தாங்கினார். சத்தியமங்கலம் தெற்கு ஒன்றிய செயலாளர் எஸ்.சி.நடராஜ், பவானிசாகர் வடக்கு ஒன்றியச் செயலாளர் பி.ஏ.வேலுமணி, பவானிசாகர் தெற்கு ஒன்றிய செயலாளர் எஸ்.மகேந்திரன், வி.தொ.ச. மாவட்டச் செயலாளர் கே.முருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் மாநிலக்குழு உறுப்பினர்கள் பி.எல்.சுந்தரம் எக்ஸ்.எம்.எல்.ஏ, மோகன்குமார், வடக்கு மாவட்ட பொருளாளர் பி.என்.ராஜேந்திரன், ஏஐடியூசி பவானிசாகர் தொகுதி பொறுப்பாளர் தா.சந்திரன், உத்தண்டியூர் ஊராட்சி மன்றத் தலைவர் பூங்கொடி உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.




### விருதுநகர்

விருதுநகர் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. வத்திராயிருப்பில் மாநில நிர்வாககுழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ தலைமை வகித்தார். வட்ட செயலாளர் கோவிந்தன், த.வி.ச. சவுந்திரபாண்டியன், துணை செயலாளர் மகாலிங்கம் உள்பட பலர் கலந்து கொண்டனர். சேத்தூரில் மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி தலைமையில் இளைஞர்மன்ற கணேசமூர்த்தி, துணை செயலாளர் அய்யணன், நகர செயலாளர் எஸ்.ராஜா, வழக்கறிஞர் பகத்சிங் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

விருதுநகரில் மாவட்ட துணை செயலாளர் எஸ்.பழனிக் குமார் தலைமையில் மாநில குழு உறுப்பினர் பாலமுருகன், ஒன்றிய செயலாளர் சக்கணன், சாத்தூர் வட்ட செயலாளர் சாமிநாதன், நகர செயலாளர்கள் முத்துக்குமார், ஜான்ராஜா, ஏஐடியுசி பாண்டியன், மாதர் சங்க ரெஜினாமேரி உள்பட பலர் கலந்து கொண்டனர். ஆலங்குளத்தில் வட்ட செயலாளர் நடராஜன் தலை மையில் துணை செயலாளர் ஜெயபிரகாஷ்,

### சிவகிரி

தென்காசி மாவட்டம், சிவகிரியில் நகரச் செயலாளர் பி.பாலசுப்பிரமணியன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ராஜேந்திரன் முன்னிலை வகித்தார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் த.இசக்கித்துரை கண்டன உரையாற்றினார். ஏராளமான தோழர்கள் கலந்து கொண்டு ஒன்றிய அரசுக்கு எதிராக முழக்கமிட்டனர்.

தத்துவார்த்தம் 13

# வரலாற்றுப் பொருள்முதல்வாதம் 1. ஹெகல்



எஸ். தோதாத்ரி

**வரலாற்றுப் பொருள்முதல்வாதம் வரலாற்றைத் தீர்மானிக்கிறது. வரலாறு என்பது மனித குலத்தின் வளர்ச்சி பற்றியது. மனிதன் தோன்றி வளர்ந்து வரும் தன்மை பற்றியது அது. இதற்கு விதிகள் உண்டா? இல்லை என்பர் கருத்துமுதல்வாதிகள். உண்டு என்பர் மார்க்சிய வாதிகள். சரி, இந்த வரலாற்றை இயக்குவது எது? இதனை இயக்கு பவர்கள் யார்?**



ஒரு சாரார் கூறுகின்றனர், மனிதன் வாழும் பூகோளச் சூழல் அவன் வாழ்வைத் தீர்மானிக்கிறது என்று. இதில் உண்மை உண்டு. ஆனால் இது வரலாற்றை இயக்கும் திறன் உள்ளது அல்ல.

பூகோளச் சூழல் சில பழக்க வழக்கங்களை உருவாக்கும். உதாரணமாக சங்க காலத்தில் வாழ்ந்த குறிஞ்சி நில மக்கள் தேனும், தினைமாவையும் உண்டனர். இலை, தழைகளால் உள்ள ஆடை அணிந்தனர். இது பூகோளச் சூழலின் தாக்கம் ஆகும். மருத நில மக்கள் நெல் சோறு சாப்பிட்டனர். நெய்தல் நில மக்கள் மீன்களை உண்டனர். இவை பூகோளச் சூழ்நிலையால் ஏற்பட்ட வழக்கமாகும். பூகோளச் சூழல் இது போன்று பல வழக்கங்களை தோற்றுவிக்குமேயன்றி, சமுதாய அமைப்பிற்கு காரணமாக இரா. பூகோளச் சூழல் மனித வாழ்விற்கு தேவையான பொருள்களை மட்டும் தான் அளிக்க முடியும்.

அடுத்து வரலாற்றை இயக்குபவர்கள் தனிநபர்கள் என்ற கருத்து முன்வைக்கப் படுகிறது. அலக்ஸாண்டர் இந்தியாவின் மீது போர் தொடுத்தார். நந்தர்களது படைபலத்தை கேள்விப்பட்டு திரும் பிச் சென்றுவிட்டார். முகமது பின் துக்ளக் டெல்லியிலிருந்து தேவ கிரிக்கு தலைநகரை மாற்றினார். அவர் பைத்தியக்காரத் துக்ளக் என்று அழைக்கப்படுகிறார்.

கிருஷ்ண தேவராயர் தென்னிந்தியா முழுவதையும் அரசாண்டார். சேரன் செங்குட்டுவன் ஆரிய அரசர்களை வென்று இமயத் திலிருந்து கல் எடுத்து அவர் களைச் சுமக்கச் செய்து, அத னைக் கொண்டு வந்து கண்ணகிக்கு சிலை எடுத்தான். கரிகாலன் கல்லணை கட்டினான். இராஜராஜன் தஞ்சை ஆலயத்தை நிர்மாணித்தான்.


ஆர்க்காட்டை வென்றதால் ராபர்ட் கிளைவிற்கு ஆர்க் காட்டு வீரர் என்று பெயர். இப் படித்தான் நமக்கு வரலாறு கற்றுத் தரப்படுகிறது. இந்த அணுகுமுறையில் தனிநபர்கள், பெருவீரர்கள் வரலாற்றை உருவாக்குகிறார்கள் என்ற வாதம் முன்வைக்கப்படுகிறது. இது சரியான கருத்து அல்ல. இந்தத் தனிநபர்கள் எல்லோரும் வரலாற்று இயக்கத்தின் ஒரு பகுதியினர் மட்டுமே ஆவர். இவர்களால் சமுதாய அமைப்பை மாற்றவோ, தீர்மானிக்கவோ முடியாது. இவர்கள் இயக்கத்தின் போக்கில் தலைமை தாங்கி நிற்பார்கள். இவர்களுக்கு ஆதரவு இல்லை என்றால் மறைந்து விடுவார்கள்.

இந்தத் தனி நபர்களைப் பற்றிய விவரங்களை கூறுவது அரசியல் வரலாறு எனப்படும். இந்த அரசியல் வரலாறு மேல்மட்டத்தில் ஏற்படும் சில மாறுதல்களை மட்டுமே குறிப் பிடும். அடிப்படை மாறுதல்களை இது குறிக்காது. எனவேதான் நமது நாட்டில் ஒரு பழமொழி உண்டு. "ராமன் ஆண்டால் என்ன? ராவணன் ஆண்டால் என்ன? நமக்கு ஒன்றும் இல்லை" இது ஒரு விஷயத்தைச் சுட்டிக் காட்டுகிறது.

அரசியல் வரலாறு அடிப்படை வரலாற்றைப் பாதிப்பதில்லை என்பது அது. எனவே இந்த அரசியல் வரலாற்றில் பங்கு பெறும் தனிநபர்கள் சமுதாயத்தை மாற்றும் திறன் இல்லாதவர்கள் எனலாம்.

வரலாறு பற்றி மற்றொரு கொள்கை உள்ளது. கருத்துக்கள் சமுதாயத்தை இயக்குகின்றன என்பது அது. சமய வாதிகளும், கருத்துமுதல்வாதிகளும் இதனை முன்வைக்கின்றனர். உதாரணமாக ஹெகல் என்ற ஜெர்மானிய தத்துவவாதி முழுமுதற் கருத்து என்பதுதான் சமுதாய இயக்கத்திற்கு காரணமாக உள்ளது என்று கூறினார்.

இக்கருத்தானது தன்னை அபிவிருத்தி செய்து கொண்டே செல்கிறது. அது முழுமையடைகிறது. இந்த முழுமையான வடிவம்தான் அவர் காலத்தில் ஜெர்மனியில் இடம்பெற்ற முடியாட்சி என்பது. இதற்கு அப்பால் அது மாற்றம் இருக்கும் என்று அவர் கூறினார்.



**இது சமுதாயத்திற்கு வெளியே இருந்து ஒரு சக்தி அல்லது கருத்து சமுதாய மாறுதலுக்குக் காரணம் என்பதாகும். ஆனால் உண்மையில் கருத்துக்கள் சமுதாயத்தில் இருந்து தோன்றுபவை என்பதை இவர்கள் கவனிப்பதில்லை.**


வெள்ளைக்காரர்களது ஆதிக்கம் காரணமாகத்தான் இந்தியாவில் சுதந்திரம் என்ற எண்ணம் தோன்றியதே தவிர, சுதந்திரம் என்ற கருத்து தானாக தோன்றவில்லை. இது வெள்ளையர்களது ஆதிக்கத்திற்கு எதிரான குரலைக் கொடுத்தது. இதற்குப் பின்னால் இந்திய சமுதாயம் இருந்தது. இது விடுதலையை இயக்கியது.

சுதந்திரம் என்ற கருத்து அல்ல. இது சுதந்திரத்திற்கான போராட்டத்தை விரைவுபடுத்தியது எனலாம். சிலர் வரலாற்றை தற்செயல் நிகழ்ச்சிகளின் தொகுப்பாக காண்கின்றனர். இது விஞ்ஞான ரீதியான பார்வை அல்ல.

தொடர்புக்கு: **98947 83657**

# கொரோனாவும்-குருதிக்கொடையும்

**ஆக்சிஜன் தட்டுப்பாடு அதிகளவில் பேசப்பட் டாலும், தற்பொழுது அரசின் தீவிர முயற்சியின் காரணமாக, பல்வேறு உபகரணங்களின் மூலம் சரிசெய்யப்பட்டது. வைட்டமின் குறைபாடுகளை போக்க மாத்திரைகள் உள்ளன.**



ஆனால், கரோனா தொற்று காலத்திலும் பல்வேறு முக்கிய அறுவை சிகிச்சைகளுக்கு இரத்தம் அதிகளவில் தேவைப்படுகிறது. இரத்தத்திற்கு மாற்றுபொருள் **(Substitute)** இதுவரை கண்டுபிடிக்கவில்லை. மனிதனின் உடலில் இருந்து பெற்று தான் உயிர்களை காப்பாற்ற முடியும். கொடையாளர் ஒருமுறை அளிக்கும் இரத்தம் 4 மனித உயிர்களை காக்கும் திறன் உடையது, இரத்தம் என்பது நம் உடலில் ஓடக்கூடிய திரவம், நம் நுரையீரலில் இருந்து நாம் உயிர் வாழ்வதற்குத் தேவையான ஆக்சிஜன் வாயுவை நம் உடலில் உள்ள பல்வேறு பகுதிகளுக்கு எடுத்துச் செல்வதோடு, உடலில் உள்ள கழிவுப் பொருட்களை வெளியேற்றும் முக்கியப் பொருளாகும்.

**ரத்தப்பற்றாக்குறை சில கசப்பான உண்மைகள்**

ஆண்டு ஒன்றுக்கு, இந்திய நாட்டுக்கு, தேவையான, ரத்தம் 400 லட்சம் யூனிட். ஆனால் குருதிக்கொடையின் மூலம் கிடைப்பது, வெறும் 40 லட்ச யூனிட் மட்டுமே. ஒவ்வொரு 2 நொடிக்கும், ஏதேனும் ஒருவருக்கு ரத்தம் தேவைப்படுகிறது.

**குருதிக்கொடையாளர்களுக்கு ஏற்படும் நன்மைகள்**

மாரடைப்பு வருவது குறைகிறது, உடலில் உள்ள 500 கலோரிகள் கரைக்கப்படுகிறது, புதிய ரத்த அணுக்கள் உருவாகிறது, உடலில் உள்ள ஹீமோகுளோபின் அளவு (ரத்த அளவு), ரத்த அழுத்தம், உடல் எடை என பல பரிசோதனைகள், இலவசமாக, ரத்ததானத்திற்கு முன்பாக மேற்கொள்ளப்படுகிறது.

**யார் ரத்ததானம் செய்யலாம்?**

குறைந்த பட்சம் 45 கிலோ எடை உள்ளவர்கள், 18 முதல் 60 வயது ரத்த அழுத்தம் 100/140 எம்.எம். மேல் அளவு, 60/90 எம்.எம். கீழ் அளவு, ஹீமோகுளோபின் 12.5 கிராம் மேல் உடையவர்கள்.

**குருதிக்கொடையினால் எந்த பாதிப்பும் இல்லை ஏன்?**

உடலில் உள்ள ரத்த அளவு 6000 மி.லி. குருதிக் கொடையின் மூலம் 350 மி.லி. ரத்தம் மட்டுமே எடுக்கப் படுகிறது. 24 மணிநேரத்திற்குள், இழந்த 350 மி.லி ரத்தம் மீண்டும் உடலில் உற்பத்தியாகிவிடும்.

**அவசர ரத்த தேவைக்கு எப்படி, யாரை அணுகவேண்டும்?**

நமது வீட்டில் உள்ளவர்கள், திடீ ரென்று பாதிக்கப்படும்போது, குடும்ப உறுப்பினர்களாக உள்ள இளைஞர்கள், நெருங்கிய உறவினர்கள் மற்றும் நண்பர்கள் ரத்ததானம் வழங்கலாம். கடுமையான அவசர, அவசிய சூழ்நிலையின் காரணமாக, முதன் முதலாக குருதிக்கொடை புரியும் அரிய வாய்ப்பு குடும்ப உறுப்பினர்களுக்கு ஏற்படுகிறது. கடைசி வாய்ப்பாக மட்டுமே தொலைவில் உள்ள ரத்த வங்கியை அணுக வேண்டும்.

**குருதிக்கொடை பற்றி அறியாதவர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய செய்தி என்ன?**

இயற்கையாகவே, உடலில் உள்ள ஒருபகுதி ரத்தம் தொடர்ந்து அழிவடைந்து வருகிறது, பயனற்றுபோகும் ரத்தத்தை சகமனிதர்களுக்கு வழங்கி, 4 உயிர்களை காக்கலாம் என்ற எளிய அறிவியல் உண்மையை அறிந்து கொள்ளலாம்.

**வாழ்நாள் முழுவதும் சாதித்த உணர்வு ஏற்படுவது எப்போது?**

ஒரு குடும்பத்தில் ஒருவர் ரத்தப்பற்றாக்குறை காரணமாக உயிர் இழக்கும் சூழ்நிலை ஏற்படும்போது, அக்குடும்பத்தில் குறைந்த பட்சம் 6 குடும்ப உறுப்பினர்களை மனதளவில், உடலளவில் அதிகபாதிப்பை ஏற்படுத்தும். ஒருமுறை ஒருவர் வழங்கும் குருதிக்கொடை 4 உயிர்களை காக்கும் வலிமை உடையது. 4 உயிர்களை காப்பது மூலம், 24 குடும்ப உறுப்பினர்களின் மனங்களை காப்பாற்றிய உச்சகட்ட மனிதநேய கடமையை ஆற்றிய உணர்வு குருதிக்கொடையாளர்க்கு ஏற்படுகிறது. கொரோனா காலத்தில் அழைப்புக்கு காத்திருக்காமல், இளைஞர்கள் தாமாகவே ரத்தவங்கிக்கு சென்று குருதிக்கொடை வழங்க வேண்டும்.

**- இரா.எத்திராஜன்,** தொடர்புக்கு: **98404 85215**

# இந்தி மொழி திணிப்பை கைவிட வேண்டும்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வேண்டுகோள்

ஒன்றிய அரசின் தகவல் ஒலிபரப்பு துறை அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள வானொலி, தொலைக்காட்சி உள்ளிட்ட ஊடகங்களில் தமிழ்நாட்டில் நூற்றுக்கணக்கான செய்தியாளர்கள், ஒலி, ஒளி பதிவாளர்கள் பணியாற்றி வருகின்றார்கள்.

தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் பொதிகை மற்றும் வானொலி ஊடகங்களில் பணியாற்றி வரும் செய்தியாளர்கள் மிகக் குறைந்த ஊதியத்தில் நீண்டகாலமாக பணியாற்றி வருகிறார்கள். இவர்களில் இந்தி மொழி தெரிந்தவர்கள் மட்டுமே பணியில் நீடிக்கலாம் மற்றவர்கள் வெளியேறலாம் என்ற அறிவிப்பை வெளி யிட்டுள்ளது ஒன்றிய அரசு. இது இந்தி மொழி திணிப்பின் மோசமான செயலாகும். இதனை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது.

வானொலி, பொதிகை தொலைக்காட்சிகளில் பணியாற்றும் மாவட்ட அளவிலான நிருபர்கள், செய்தியாளர்கள், ஒலி, ஒளி பதிவாளர்கள் தமிழ் பேசும் மக்களிடம் தான் செய்திகளை சேகரிக்கிறார்கள். இவர்களுக்கு இந்தி மொழி தெரிந்திருக்க வேண்டிய கட்டாயமோ, அவசியமோ இல்லை. இவர்களிடமிருந்து செய்திகளை பெறுகிற தலைமை அலுவலகம் தேவையான மொழிகளுக்கு மாற்றம் செய்து கொள்ள முடியும். இந்த வாய்ப்பை உருவாக்குவதில் ஒன்றிய அரசு கவனம் செலுத்த வேண்டும். இதற்கு மாறாக இந்தி மொழி தெரியாத பணியாளர்களை பணிநீக்கும் முயற்சியை உடனடியாக கைவிட வேண்டும். அவர்கள் தொடர்ந்து நிரந்தர பணியாளர்களாக பணியாற்றவும், குறைந்தபட்ச ஊதியமும், இதர சலுகைகளும் வழங்கப்படுவதை ஒன்றிய அரசு உறுதி செய்ய வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது. இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.



# தோழர் ப.ஜீவானந்தம்

## 59 ஆவது ஆண்டு நினைவுநாள் நிகழ்ச்சி

**பிரிட்டிஷ் வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நாட்டின் விடுதலைக்காக போராடி சிறை சென்ற சுதந்திர போராட்ட வீரரும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை தமிழ்நாட்டில் வளர்த்தெடுத்த முதுபெரும்தலைவரும், இலக்கிய பேராசனுமான தோழர் ஜீவா அவர்களின் 59-வது ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி தமிழகம் முழுவதும் கடைபிடிக்கப்பட்டது.**

**வட சென்னை:** தோழர் ஜீவா அவர்களின் 59 வது நினைவு தினம் ஜனவரி 18 அன்று வட சென்னை மாவட்டம், தண்டையார்பேட்டை மணிக்கூண்டு அருகில் நடைபெற்றது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வடசென்னை மாவட்ட செயலாளர் எம்.எஸ்.மூர்த்தி தலைமை தாங்கினார். மூத்த தலைவர் நல்லகண்ணு அவர்கள் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி அவர் புகழ் குறித்து பேசினார். மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன் கொடியேற்றி வைத்து பேசினார். நிகழ்ச்சியில் மாநில நிர்வாக குழு உறுப்பினர் எஸ்.ஏழுமலை, மத்திய சென்னை மாவட்ட செயலாளர் பா.கருணாநிதி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எஸ். கண்ணன், முன்னாள் மாவட்டச் செயலாளர் சம்பத் உட்பட கட்சியின் மாவட்ட நிர்வாக குழு, மாவட்டக்குழு உறுப்பினர்கள், வட்டச் செயலாளர்கள் தொழிற்சங்க தலைவர்கள் மாணவர் இளைஞர் பெருமன்ற தலைவர்கள் என ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்

நிகழ்ச்சியில் தோழர் இரா.நல்லகண்ணு பேசியதாவது:

மக்களின் பிரச்சினைகளை ஜீவா என்றும் விட்டுக் கொடுத்தது இல்லை. அவருடைய பொது வாழ்வில் தொடக்க காலம் முதல் தாழ்த்தப்பட்டோர், பெண்கள் இரு சாராரும் சமத்துவ நிலை அடைய போராடி வந்தவர். நாட்டு விடுதலைக்காகவும், மக்கள் நல்வாழ்விற்காகவும் சிறை சென்ற தியாக சீலர் அவர். தனக்கென வாழாமல் பிறருக்குரியவராய் வாழ்ந்தவர். இலட்சிய வீரர், கொள்கை பிடிப்பில் உறுதி குலையாதவர்.

காந்தியவாதியாகத் தொடங்கி கோயில் நுழைவுப் போராட்டம், பின் சுயமரியாதை இயக்கத் தலைவராகி, சாதி ஒழிப்புப் போராட்டத்தில் சிறந்த முன்னோடியாக திகழ்ந்தவர். தொழிற் சங்கப் போராட்டங்களில் தொழிலாளர்களை சிறந்த முறையில் வழிநடத்தினார். பலமுறை காவல் துறையினரின் அடக்குமுறைக்கு ஆளானார். மொழி பற்றி கம்யூனிஸ்ட்டுகள் சிந்தனை அணுகுமுறை அறிவியல் பூர்வமானவை. அதேநேரத்தில் பிற மொழிகள் மீது விரோதம் கொண்டவர் அல்ல. மனித சமூகத்தின் வரலாற்றில் முக்கிய வளர்ச்சி கட்டமொன்றில் மொழி தேவையாகப் பிறக்கிறது. அது வரலாற்று உண்மையும் என்றார். தமிழ் பயிற்று மொழியாக இருக்க வேண்டும். எல்லாம் தமிழில் முடியும் என்னும் இயக்கத்தில் ஜீவா முன்னிலையில் இருந்தார்.

எல்லா கலைகளும் அறிவியல் உள்ளிட்ட எல்லாவற்றையும் தமிழ் மொழி மூலம் கற்பிக்கவும், கற்றிடவும் வேண்டும். இது முடியும் என்பதில் உறுதியாக நின்றவர் ஜீவா.

தான் மாணவப் பருவத்திலிருந்தே ஜீவாவைப் பார்த்து வருகிறேன். குமரியிலிருந்து மலை அடிவாரமாகவே திருநெல்வேலி வருவார். அப்பொழுது அவரது பேச்சில் ஈர்க்கப்பட்டவன். பின்னாளில் விவசாய சங்கத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கும்போது 1945ஆம் ஆண்டு ஜீவாவை வரவழைத்து இயக்கங்களை நடத்தி இருக்கிறேன்.

அவரது 56 ஆண்டு கால வாழ்வில் 40 ஆண்டுகாலம் பொதுவாழ்க்கை. இதில் 10 ஆண்டுகாலம் சிறை வாழ்க்கை என்றால் அவ்வளவு எளிதானது அல்ல. அந்த வதையை பட்டவர்களுக்குத் தான் தெரியும்.

ஐக்கிய தமிழகம் என்ற நூலை ஜீவா எழுதினார் அதில்

**வடவேங்கடம் தென்குமரி**
**ஆயிடைத் தமிழ் கூறும் உலகு**
(தொல்காப்பியம்)

**செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்**
**தேன் வந்து பாயுது காதினிலே எங்கள்**
**தந்தையர் நாடென்ற பேச்சினிலே ஒரு**
**சக்தி பிறக்குது மூச்சினிலே**
(பாரதியார்)

**தமிழன் என்றோர் இனமுண்டு**
**தனியே அவற்கொரு குணமுண்டு**
(நாமக்கல் கவிஞர்)

**தமிழுக்கும் அமுதென்று பேர் அந்தத்**
**தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர்**
(பாரதிதாசன்)

இத்தகைய கவிஞர்களின் கனவுகளை நனவாக்கும் திட்டத் திற்கு துணிவோடு இயங்கியவர். ஜீவாவின் ஐக்கிய தமிழகம் கோரிக்கைக்கு தமிழரசுக் கட்சியை நிறுவிய சிலம்புச் செல்வர் ஆதரித்தார். தமிழரசு மாத இதழை சிலம்புச் செல்வர் துவங்கியபோது அதை ஜீவா ஆதரித்தார்.

தமிழ்நாடு முழுவதும் பல பேருக்கு ஜீவா, ஜீவானந்தம் என்னும் பெயர்கள் உண்டு. இது ஜீவாவை நினைவு கூர்ந்து அவருக்கு சேர்க்கும் பெருமையாகும். இந்த நினைவு நாளில் அவரை நினைவு கூர்ந்து, தமிழ் மொழியைப் பாதுகாத்து மக்கள் நலனுக்காக தொடர்ந்து போராடுவோம் என்றார்.



**திருத்துறைப்பூண்டி**: திருவாரூர் மாவட்டம், திருத்துறைப் பூண்டியில் காமராஜர் சிலை அருகில் ஜீவா திருவுருவபடத்திற்கு மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. பெருமன்றத்தின் மாவட்ட செயலாளர் நீடா.சந்திரசேகரன் தலைமையில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்ச்சியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக்குழு உறுப்பினர் கோ.பழனிச்சாமி, கே.உலகநாதன் எக்ஸ்.எம்.எல்.ஏ., க.மாரிமுத்து எம்.எல்.ஏ., இரெ.ஞானமோகன், அ.பாஸ்கர் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர், பி.வி.சந்திரராமன், கே.ஆர்.ஜோசப், கே.ராஜா, கே.பாலு, எம்.முருகேசன், வி.த.செல்வன் மற்றும் ஏராளமான கலை இலக்கிய ஆர்வலர்கள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.




**கோவை:** கோவை ஜீவா இல்லத்தில் நிறுவப்பட்டுள்ள அமரர் ஜீவா சிலைக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் வி.எஸ். சுந்தரம் தலைமை தாங்கினார். மாவட்ட துணை செயலாளர் ஆர்.தேவராஜ், தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாவட்ட செயலாளர் ப.பா. ரமணி ஆகியோர் ஜீவாவின் நினைவுகள் குறித்து பேசினர். இதில் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் ஆர் சுதர்சன், கோயம்புத்தூர் லேபர் யூனியன் செயலாளர் ஆர். பாலகிருஷ்ணன், கந்தவேல், மதுக்கரை கே.தங்கராஜ் ஏ.அஸ்ரப் அலி, எம்.குணசேகர் கலை அஸ்வினி, ஏ.பி. மணிபாரதி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



**விருதுநகர்:** விருதுநகர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட அலுவலகத்தில் இலக்கிய பேராசான் ஜீவாவுக்கு மலரஞ்சலி செலுத்தி வீர வணக்கம் செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது. வட்ட செயலாளர் சக்கணன் தலைமை வகித்தார். மாவட்ட துணை செயலாளர் எஸ்.பழனிக்குமார், மாநில குழு உறுப்பினர் செந்தில்குமார், நகர செயலாளர்கள் முத்துக்குமார் , ஜான்ராஜா, சாத்தூர் வட்ட செயலாளர் சாமிநாதன், மாதர் சங்க மாரீஸ்வரி , இளைஞர்மன்ற மனோகரன், தவிச சண்முகையா உள்பட பலர் கலந்து கொண்டனர்.



**மதுரை:** மதுரை மாவட்ட ஐக்கிய பஞ்சாலை தொழிலாளர்கள் சங்கத்தில் ஜீவா நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது. இந்நிகழ்வில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநகர் மாவட்ட செயலாளர் எம்.எஸ். முருகன், ஏஐடியூசி பஞ்சாலை தொழிலாளர் சங்க தலைவர் கே.எஸ்.மணி,செயலாளர் ஆர்.முருகன் துணை செயலாளர் எம்.ஆர்.லோகநாதன் கட்டட சங்க தலைவர் இருளாண்டி மற்றும் ஜனசக்தி என்.ஜீவா,ச ந்துரு ஆகியோர் கலந்து கொண்டனர்.




**பரமக்குடி :** இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஜீவா நகர் கிளை, எமனேஸ்வரம் தெற்குப் பகுதி கிளை, பரமக்குடி கட்சி அலுவலகம் ஆகிய இடங்களில் இலக்கியப் பேராசான் ஜீவா நினைவு நாள் புகழஞ்சலி கூட்டம் நடைபெற்றது. இதில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நகரச் செயலாளர் என்.எஸ்.பெருமாள் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**மணப்பாறை:** மணப்பாறையில் தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றம் சார்பில் ஜீவாவின் திருவுருவ படத்திற்கு மலர் தூவி புகழ் அஞ்சலி நடைபெற்றது. த.க.இ.பெ. மாவட்ட தலைவர் தங்கமணி தலைமை வகித்தார். சிபிஐ புறநகர் மாவட்ட துணைச் செயலாளர் பழனிசாமி, நகர செயலாளர் ஜனசக்தி உசேன், மாவட்ட குழு உறுப்பினர்கள் சௌக்கத்அலி, பெருமாள், ரகமத்துனிஷா, ரவிச்சந்திரன், கணேசன், போக்குவரத்து கழக ஏ.ஐ.டி.யூ.சி. மாவட்ட செயலாளர் சுப்ரமணியன் உட்பட நிர்வாகிகள் மலர்தூவி புகழ் அஞ்சலி செலுத்தினர்.

**பாபநாசம் :** பாபநாசம் அரசு மருத்துவமனை அருகில் வைக்கப்பட்டிருந்த ப.ஜீவானந்தம் படத்திற்கு மாலையணிவித்து, பூத் தூவி மரியாதைச் செலுத்தப்பட்டது. இதில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பாபநாசம் ஒன்றியச் செயலாளர் சாமு. தருமராஜன், ஏஐடியூசி மாவட்டச் செயலாளர் தில்லைவனம், மாவட்டக் குழு குணசேகரன், ஒன்றியப் பொருளாளர் சேகர், ஒன்றியக் குழு பரம சிவம், ஜெகன்னாதன், திமுக பாபநாசம் ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர் தமிழ்வாணன், சுவாமி நாதன், சந்திரன் உள்பட பங்கேற்றனர்.



**தஞ்சை:** தஞ்சாவூர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகம் முன்பு மாவட்ட செயலாளர் முத்து உத்திராபதி தலைமையில் ஜீவாவின் நினைவு தின நிகழ்ச்சி நடைபெற்றது. மாநகரச் செயலாளர் ஆர்.பி.முத்துக்குமரன், மாவட்ட குழு உறுப்பினர் வெ.சேவையா, தி.கோவிந்தராஜன், ஏஐடியுசி மாவட்ட துணை செயலாளர் துரை.மதிவாணன், ஓய்வு பெற்றோர் சங்க பொதுச் செயலாளர் பி.அப்பாத்துரை மற்றும் எஸ்.மனோகரன், ராஜமன்னன், ஆர். செந்தில்நாதன், பி.செல்வம், எஸ்.தியாகராஜன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



**திருச்சிமாநகர்:** திருச்சி மாநகர் தில்லைநகர் 56வது வார்டு கிளை செயலாளர் சுரேஷ் முத்துசாமி தலைமையில், ராஜ்குமார், நாகராஜ், துளசி கிருஷ்ணன் முன்னிலையில் மாவட்டக்குழு உறுப்பினர் சத்யா அனைவரையும் வரவேற்று பேசினார்.

மாநில நிர்வாகக் குழு முன்னாள் உறுப்பினர்எம். செல்வராஜ் கட்சிக் கொடி ஏற்றினார். மாநகர் மாவட்ட செயலாளர் திராவிடமணி ஜீவாவின் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். திருச்சி மாவட்ட ஏஐடியுசி பொதுச் செயலாளர் க. சுரேஷ் நிகழ்ச்சிக்கு வந்திருந்த அனைவருக்கும் ஜீவா படம் பொறித்த கைப்பைகளை அனைவருக்கும் வழங்கினார். நிர்வாகக் குழு உறுப்பினர் சிவா, மாவட்டக்குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

திருச்சி மாவட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அலுவலகத்தில் ஜீவாவின் திருவுருவப் படத்திற்கு கட்சியின் மாநில கட்டுப்பாட்டு குழு தலைவர் வழக்கறிஞர் வையாபுரி, மற்றும் குணசேகரன் மணிவேல், ஆர்.ஏ. கோவிந்தராஜ், கிருஷ்ணன் மற்றும் தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் சிவசூரியன் நிர்வாக குழு உறுப்பினர்கள் அண்ணா துரை, சண்முகம், பொன்னுதுரை அலுவலக செயலாளர் அன்பழகன் உள்ளிட்டோரும் பங்கேற்று மலர்தூவி மரியாதை செலுத்தினர்

**மதுராந்தகம்** : செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் ஒன்றியத்தில் இந்திய கம்யூனிஸ்டு கட்சி சார்பில் மெய்யூர் கிளையில் ஜீவா நினைவுதினம் பா.மணிகண்டன் தலைமையில் நடைபெற்றது. இளைஞர் பெருமன்றம் காஞ்சிபுரம் மாவட்ட தலைவர் கேவி.சேகுவேராதாஸ் பங்கேற்று மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்த நிகழ்வில் கிளை செயலாளர் செ.இன்பரா, சந்திரமோகன், பரத்குமார், சஞ்சை இரா.புத்தர் மற்றும் முன்னணி தோழர்கள் பங்கேற்றனர்.

# சங்கே முழங்கு!



## மோடியைச் சாடுகிறது பி.எம்.எஸ்.



– டி.எம்.மூர்த்தி

“தொழிலாளர்களுக்கு உதவ வேண்டும் எனும் சிந்தனை துளியும் இல்லை” ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் தொழிற்சங்கப் பிரிவான பாரதிய மஸ்தூர் சங் (பி.எம்.எஸ்.) பொதுச் செயலாளர் பினாய் குமார் சின்கா 7.1.2022ல் பிரதமர் மோடிக்கு ஒரு கடிதம் எழுதி இருக்கிறார். “அரசுக்கு ஆக்கபூர்வமான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்ற தத்துவத்தை(!) பி.எம்.எஸ். பின்பற்றி வருகிறது. நாங்கள் கடுமையான எதிர்வினைகள் ஆற்றாமல், பேசுவதன் மூலமாகவே பிரச்சினைகளுக்கு தீர்வு காண முயன்றோம். இதற் காகவே உங்களையும் அமைச்சர்களையும் சந்திக்க முயன்றோம். ஆனால் தொழிலாளர்களுக்கும் உதவ வேண்டும் என்ற சிந்தனைப் போக்கு துளியேனும் உங்கள் அரசிடம் இல்லை என்பதைப் புரிந்து கொண்டோம். எனவே உங்கள் அரசின் கொள்கைகளுக்கு எதிராக போராடுவதைத் தவிர எங்களுக்கு வேறு வழியில்லை” என்று அந்த கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

இப்படி ஒரு முடிவுக்கு வந்த பின்னரும் அதற்கு நப்பாசை போக வில்லை. “இப்போதும் ஒரு பேச்சுவார்த்தைக்கு அரசு அழைத்தால் அதற்கு ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம். ஊழலும் லஞ்சமும் நிறைந்த அதிகார வர்க்கத்தையும், தன்னலப் பற்று மிகுந்த ஆலோசகர்களையும் விட்டு அரசு விலகி வராவிட்டால், எமது சங்கம் போராட்ட நடவடிக்கைகளில் இறங்குவதில் எவ்வித சந்தேகமும் இல்லை’ என்றும் கடிதத்தில் கூறியுள்ளார்.

அதேநேரத்தில் பிஎஸ்என்எல், எம்டிஎன்எல் ஆகியவற்றை சீரமைக்க அரசு எடுத்த நடவடிக்கைகளை பாராட்டுவதாகவும், ஆனால் பொதுத்துறை நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்தல், வங்கிகள் இணைப்பு, காப்பீட்டுத் துறையில் தனியாரை ஊடுருவச் செய்தல், பாதுகாப்பு தொழிற்சாலைகள் மற்றும் ரயில்வேயை கார்ப்பரேஷன்களாக மாற்றுதல் ஆகியவற்றைத் தம்மால் ஏற்க இயலாது என தெரிவிக்கிறார்.

“நிட்டி ஆயோக் அமைப்பிற்கு தொலைநோக்குப் பார்வை இல்லை; எதிர்மறை அணுகுமுறையே உள்ளது. சமூகப் பொருளாதாரத் துறைகளில், மேலைநாட்டு மோகம் கொண்ட ஒருதலைப் பட்சமான அறிவாளிகள் நிட்டி ஆயோக்கை நடத்துகிறார்கள். இந்திய எதார்த்தத்துடன் இவர்களுக்குத் தொடர்பே இல்லை. அரசுக்கு தவறான தகவல்களைத் தந்து, மேம்பாட்டு இலக்குகளை அரசாங்கம் எட்டுவதிலிருந்து விலக்கி, இந்தியாவின் சமூகப் பொருளாதார நலன்களை வேட்டையாடிக் கொண்டிருக்கிறார்கள்’.

இதற்கு அரசாங்கத்திடமிருந்து பதில் வராவிட்டால் வருகிற பிப்ரவரி மாதத்தில் எதிர்கால நடவடிக்கைகளை திட்டமிட போவதாக பி.எம்.எஸ். பொதுச்செயலாளர் தன்னிடம் கூறியதாக இந்து ஆங்கிலஇதழ் எழுதியிருக்கிறது.

மோடி அரசின் கொள்கைகளை எதிர்த்துப் போராடுகிற மற்ற சங்கங்கள் அரசியல் செய்வதாகவும், தான் மட்டுமே ஆக்க பூர்வமான தொழிற்சங்கம் என்றும் பி.எம்.எஸ். இதுவரை தம்பட்டம் அடித்து வந்திருக்கிறது. பொதுத்துறை நிறுவனங்கள், பாதுகாப்புத் தொழிற்சாலைகள், ரயில்வே, வங்கிகள் இன்னும் ஒன்றிய அரசு சார்ந்த நிறுவனங்களில் ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்தி தனது தொழிற்சங்கத்தை ஆர்எஸ்எஸ் நுழைத்தது. இந்த நிறுவனங்கள் ஆபத்துக்கு உள்ளாகும் பொழுதில், பி.எம்.எஸ். வேண்டுமானால் பேச்சுவார்த்தை நடத்துவதாக பம்மாத்து செய்யலாம். ஆனால் பி.எம்.எஸ்.ஸைச் சார்ந்த தொழிலாளர்கள் மற்ற தொழிற்சங்கங்களோடு சேர்ந்து வேலைநிறுத்தம் உள்பட அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்கிறார்கள்.

காங்கிரஸ் ஆட்சியின்போது, தொழிலாளர்களுக்கும் மக்களுக்கும் விரோதமாக அரசு எடுத்த நடவடிக்கைகளைக் கண்டித்து, ஏஐடியூசி சிஐடியு அமைப்புகளோடு சேர்ந்து ஐஎன்டியூசி, பி.எம்.எஸ். உட்பட அனைத்து தொழிற்சங்கங்களும் ஒன்றுபட்டு போராடின. ஆனால் பிஜேபி ஆட்சி வந்ததும் பி.எம்.எஸ்., தொழிற்சங்க கூட்டமைப்பிலிருந்து விலகிப் போராட்டங்களின் மீது பழி தூற்றியது.

பிப்ரவரி 23, 24 தேதிகளில் நடைபெற இருக்கும் பொது வேலை நிறுத்தத்திற்கான ஆயத்தம் சூடுபிடித்துள்ள நிலையில், பி.எம்.எஸ். இந்தக் கடிதத்தை பகிரங்கமாக வெளியிடுவதன் காரணம் என்ன?

தொழிலாளர்களிடம் இருந்து தனிமைப்பட்டு விட்டதை உணர்ந்து, நாங்களும் கண்டிக்கிறோம் என நாடகம் ஆடலாம்.

கார்ப்பரேட்டுகளுக்காகவே அரசாங்கத்தை நடத்திக் கொண்டிருக்கும் மோடியிடம், மிரட்டுவது போல நடித்து தொழிலாளர்களுக்கு பல நலன்களை வாங்கித் தந்து விட்டோம் என ஏதாவது சொல்லி தொழிலாளர்களை திசைதிருப்ப முயலலாம்.

தாங்கள் தனியாக போராடப் போவதாக அறிவிப்பதன் மூலம், மற்ற அனைத்து தொழிற்சங்கங்கள் நடத்தும் போராட்டங்களில் தன்னியல்பாக பி.எம்.எஸ். ஊழியர்கள் பங்கேற்று வருவதைத் தடுக்கலாம். எதைச் செய்தாலும் பி.எம்.எஸ்.ஸையும், மோடியையும் தொழிலாளர்கள் நம்பப் போவதில்லை.



ஏ.இ.பாலுசாமி

# என்னதான் நடக்கிறது எல்லையில்?

**இந்திய – சீன எல்லைப் பகுதியில், சீனா படைகளைக் குவித்து வருகிறது. ராணுவ குடியிருப்புகளை கட்டியுள்ளது. இந்தியக் கட்டுப்பாட்டில் உள்ள அருணாச்சலப் பிரதேசத்தில் சுமார் 82 இடங்களை சொந்தம் கொண்டாடுகிறது.**

ஜம்மு–காஷ்மீர் உட்பட உலகில் உள்ள முஸ்லிம்களை பாதுகாத்திட, எந்தவித தீவிரவாத தாக்குதல்களையும் நடத்த தயார் என்கிறது ஆப்கன் குழுக்கள். காஷ்மீரில், தாலிபன்கள், பாகிஸ்தான் தீவிரவாதிகளின் ஊடுருவல்கள் அதிகரித்துள்ளன.

சீனா உடனான நட்புறவை வலுப்படுத்திட, இந்தியாவில் இருந்து 50 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள, கொழும்பு, யாழ்ப்பாண பகுதிகளை 999 ஆண்டுகளுக்கு சீனாவிற்கு குத்தகைக்கு விட்டுள்ளது இலங்கை.

இந்திய வடகிழக்கு பிரதேசமான நாகலாந்தில் எல்லையோர பாதுகாப்பு படையினர் அப்பாவி பொதுமக்களை சுட்டதில் 14 பேர் மரணம். இதனால் அசாம், மணிப்பூர், மேகாலயா, மிசோரம் பகுதிகளில் அரசுகளுக்கு எதிராக மக்கள் கொந்தளிப்பு, காஷ்மீரின் சிறப்பு அதிகாரம் 370ஐ மோடி பறித்ததால், தினசரி கொந்தளிப்பு, துப்பாக்கிச்சூடு என கலவர பூமியாகி வரும் காஷ்மீர் எல்லைப் பகுதிகள் எரிந்து கொண்டுள்ளன. என்னதான் செய்கிறார் மோடி?

இந்திய – சீன எல்லை லடாக் பகுதியில் சீனா ஒரு லட்சம் ராணுவ வீரர்களை குவித்துள்ளது. கல்வான் மோதலில் 20 இந்திய ராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். தற்போது சீனா 700க்கும் அதிகமான கிராமங்களை எல்லைப் பகுதியில் உருவாக்கி, மக்களை குடியமர்த்தி வருகிறது.

ராணுவம் விரைந்து இந்திய எல்லையை அடைய லடாக் பாங்காக்கில் புதிய பாலம் ஒன்றை கட்டி உள்ளது. போருக்கு முந்தைய இடங்களுக்குத் திரும்பிச் செல்ல மறுக்கிறது. இரு நாட்டு உயர் அதிகாரிகள் மட்டத்தில் 13 முறைகள் பேச்சுவார்த்தை நடத்தியும் சுமூக முடிவு ஏதும் எட்டப்படவில்லை. சீனா அக்டோபர் 2021 ல் புதிய எல்லை சட்டம் ஒன்றை இயற்றி உள்ளது. இச்சட்டம் ஜனவரி 2022 முதல் அமலுக்கு வந்துள்ளது. நேரு, சூ என் லாய் காலத்தில் போடப்பட்ட எல்லை தொடர்பான ஒப்பந்தத்தை புதிய சட்டம் நிராகரிக்கிறது. புதிய சட்டத்தின்படி புதிய எல்லைகளை சீனா வரையறுத்துள்ளது. இதனால் இந்தியப் பகுதிகளில் சில சீனாவின் கட்டுப்பாட்டில் சென்றுள்ளன.




இந்தியாவை கலக்காமலேயே புதிய சட்டம் இயற்றப் பட்டுள்ளது. இந்த திட்டத்தின் படி இந்தியா வட பகுதியை சுற்றி பாகிஸ்தான் ஆக்கிரமித்துள்ள காஷ்மீர் பகுதி வழியாக பாகிஸ்தானை இணைக்கும் சுற்றுச் சாலை ஒன்றை சீனா அமைத்துள்ளது.

நமது நாட்டின் அருணாச்சலப் பிரதேசத்தை தீர்வு செய்யப் படாத தாவாவில் உள்ள பிரதேசமாக சீனா அறிவித்துள்ளது. அருணாச்சல பிரதேசத்தின் 67 இடங்களில் 2017லும், தற்போது 15 இடங்களையும் தனது இடமாகக் கொண்டு புதிய பெயர்களை சீனா சூட்டியுள்ளது. வரைபடத்திலும் இவற்றை சீனப் பகுதியாக காட்டியுள்ளது. அடுத்து ஆப்கானிஸ்தான் நிலை. ஆகஸ்ட் 2021 ல் அமெரிக்கப் படைகள் ஆப்கானிஸ்தானை விட்டு வெளி யேறின. தலிபான் தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டிற்கு அந்நாடு வந்துள்ளது. பல்வேறு தீவிரவாத குழுக்களின் கையில் ஆட்சி அதிகாரம் சென்றுள்ளது.

சீனா, ரஷ்யா, பாகிஸ்தான், ஈரான் போன்ற நாடுகள் புதிய அரசை அங்கீகரித்துள்ளன. இந்தியா இன்னும் ஒரு முடிவிற்கு வரவில்லை. இந்திய தூதரகம் அங்கு செயல்பட முடியாமல் பூட்டுப் போடப்பட்டு விட்டது.

தாலிபான் தீவிரவாத குழுக்களுள் சில உலகின் முஸ்லிம்களை பாதுகாத்திட (காஷ்மீர் முஸ்லிம்கள் உட்பட) எவ்வித தீவிரவாத தாக்குதல்களையும் நடத்துவோம் என அறைகூவல் விடுத்துள்ளன. உறவு சீர்கெட்ட நிலையிலும் இந்தியா ஐ.நா.வின் வேண்டுகோளுக்கிணங்க உணவுப்பொருட்களையும், கொரோனா தடுப்பு மருந்துகளையும் அனுப்பியுள்ளது.

ஜம்முகாஷ்மீரில் இன்று அதிகமாகி உள்ள வன்முறைகளுக்கு ஆப்கானிஸ்தானில் உள்ள தீவிரவாதக் குழுக்களும் ஒரு காரணமாகும் என அரசியல் வல்லுனர்கள் கணிக்கின்றனர்.

இந்திய நாடு பிரிவினையான நாள் தொட்டு பகைமை உணர்வுடன் நடந்து கொள்ளும் நாடு பாகிஸ்தான். நமது காஷ்மீர் இந்தியாவின் பிரிக்க முடியாத ஒரு பகுதி என்ற உண்மையை அன்றுதொட்டு இன்றுவரை ஏற்க மறுக்கும் நாடு பாகிஸ்தான். ஆட்சியாளர்கள் மாறினாலும் காஷ்மீர் பற்றி மாறாத கொள்கையுடைய நாடு இந்நாடு.

எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை ஏவிவிடும் நாடு இந்நாடு. தாலிபான்கள் ஆட்சி வந்தபிறகு தீவிரவாதிகளின் ஊடுருவல் அதிகமாகியுள்ளது. ஜம்மு – காஷ்மீர் சிறப்பு அந்தஸ்து பிரிவு 370ஐ மோடி அரசு பறித்ததால் பதட்டம் அதிகரித்துள்ளது. காஷ்மீரில் அதானி, அம்பானி நிலங்களை வாங்கிக் குவிக்க, ரியல் எஸ்டேட் நடத்த, மோடி –அமித்ஷா உதவி வருகின்றனர்.

இந்தியா அமெரிக்காவிடம் நெருக்கம் காண்பிக்கும் போதெல்லாம், பாகிஸ்தான் சீனாவுடன் நெருங்குகிறது. 1971 இல் இந்தியா, பாகிஸ்தானில் இருந்து பிரித்து பங்களாதேசை தனி நாடாக்கிய கோபமும் தணியாமல் உள்ளது.

இந்தியாவின் பாதுகாப்பு கேந்திரமான பகுதி ஜம்மு காஷ்மீர் மாநிலம் ஆகும். ஜம்மு காஷ்மீர் பிரச்சனை ஐ.நா. சபையில், பல நாட்களாக விவாதிக்கப்பட்டு வரும் பிரச்சினையாகும். அதன் சிறப்புத் தன்மை அறியாது, மோடி அரசு அதன் சிறப்பு அந்தஸ்து 370, 35ஏஐ பறித்தது. சட்டம் ஒழுங்கை நிலைநாட்டிட ஒரு லட்சத்திற்கு அதிகமான பாதுகாப்புப் படை வீரர்களை அரசு அங்கு அனுப்பியுள்ளது. அம் மாநிலத்தின் முக்கிய அரசியல் கட்சி தலைவர்கள், முன்னாள் முதல்வர்கள் வீட்டு சிறைகளில் ஆண்டுக்கணக்கில் அடைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் குக்கார் என்ற கூட்டணி ஒன்றை அவர்கள் அமைத்து காஷ்மீருக்கான தனி அந்தஸ்தை மீண்டும் வழங்கிட குரல் கொடுத்து போராடி வருகிறார்கள். மோடி அரசால் அமைதியை நிலைநாட்ட முடியவில்லை. குண்டு வெடிக்காமல் நாள் கழிந்தது இல்லை.

இன்று வரை இந்தியாவுடன் நட்பு நாடாக இருந்து வந்த இலங்கை, தற்போது சீனாவுடன் நெருக்கமாகி வருகிறது. வர்த்தகம், கட்டுமானத் துறைகளில் இலங்கையில் சீனாவின் முதலீடுகள் பல மடங்கு அதிகரித்துள்ளது. யாழ்ப்பாணம், கொழும்பு பகுதிகளில் புதிய திட்டங்களை தொடங்கிட சீனாவிற்கு இலங்கை 999 வரு டங்களுக்கு கேந்திரமான இடங்களை குத்தகைக்கு விட்டுள்ளது. அவ்விடங்கள் இந்திய எல்லையில் இருந்து 50 கிலோமீட்டர் தொலைவில் உள்ளவையாகும். இந் திய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையும் என அரசியல் வல்லுனர்கள் கூறுகிறார்கள்.

சீனாவின் முதலீடுகளை இலங்கையின் யாழ்பாண தமிழர்கள் அமைப்பும் எதிர்த்து வருகின்றன. இந்தியாவின் வடகிழக்கு பிரதேசம் நாகாலாந்து, இங்கு இந்திய எல்லை பாதுகாப்பு படை வீரர்கள் சமீபத்தில் பொதுமக்களை சுட்டதில் 14 பேர் கொல்லப்பட்டார்கள். நாகலாந்து, அசாம், மணிப்பூர், அருணாசலப் பிரதேசம், மேகாலயா, மிசோரம் ஆகியவை நம் எல்லைப்பகுதியில் உள்ளவையாகும். அவ்வப்போது தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு ஆட்படும் பகுதிகளாகும். சட்டம் ஒழுங்கை பராமரிக்க எல்லை பாதுகாப்பு படை வீரர்களுக்கு சிறப்பு அதிகாரம் வழங்கும் சட்டம் 1958லிருந்து 69 ஆண்டுகளாக நடைமுறையில் இருந்து வருகிறது.

**யாரையும் விசாரணை செய்யவும், கைது செய்யவும், சுடவும் இச்சட்டம் வழிவகுக்கிறது. இதனால் அப்பாவி மக்கள் பலர் கொல்லப்படுகின்றனர். இச்சட்டத்தை வாபஸ் பெறக் கோரி வடகிழக்கு மாநில மக்கள் தெருவில் இறங்கி இன்று போராடி வருகிறார்கள். மோடி அமித்ஷா மௌனம் காக்கிறார்கள்.**

எல்லைப்புற நாடுகளின் பகை உணர்வு நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டு வருகிறது. 2014 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த மோடி அனைத்து நாடுகளுக்கும் அதானியின் தனி விமானத்தில், விதவிதமான விலை உயர்ந்த உடைகளை அணிந்து உலா வந்தார். தலைவர்களோடு கட்டிப்பிடித்து உறவாடினார். ஆனால் உறவு மேம்பட உருப்படியாக ஒன்றுமே செய்யவில்லை. நாட்டின் இறையாண்மை, எல்லை பாதுகாப்பு சார்ந்த பிரச்சினைகளில் மோடி மௌனம் காக்கிறார்.

இந்தியா உலக நாடுகளின் நிகழ்வுகளை தீர்மானிக்கக் கூடிய சக்தியாக திகழ்ந்த காலங்கள் உண்டு. இந்திய – சீன ஒப்பந்தம், இந்திய – சோவியத் யூனியன் ஒப்பந்தம், இந்திய – இலங்கை ஒப்பந்தம், இந்தியா – பங்களாதேஷ் நட்புறவு உடன்படிக்கை, இந்தியா – கியூபா நட்புறவு, இந்தியா – பாகிஸ்தான் ஒப்பந்தம் என பல நாடுகளுடன் நட்புறவோடு இந்தியா விளங்கிய காலங்கள் உண்டு.

ஆனால், மோடியின் ஆட்சியில் இந்தியா இன்று தனிமைப்பட்டு நிற்கிறது. ஒரு வரலாற்றின் மூலம் அரசுகளின் எழுச்சியையும், வீழ்ச்சியையும் அறியலாம். நல்ல ஆட்சியாளர்களிடம் நாட்டின் வளர்ச்சியை அளவிடலாம். மோடியின் ஆட்சி காலம் நாட்டின் வீழ்ச்சி காலம் என்பதை வரலாறு கூறுவது உறுதி.

தொடர்புக்கு: 7338920584



ம.இராதாகிருஷ்ணன்




**தற்போது இந்திய நாடு கார்ப்பரேட் முதலாளித்துவ வளர்ச்சி, வகுப்புவாதம், சாதி அடிப்படைவாதம் ஆகிய மூன்று சவாலான பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. பாஜக அரசு பொறுப்பேற்ற பின்னர் இம்மூன்றும் முன்னை விட மிகக் கொடூரமானதாக மாறியிருக்கிறது. இந்த முக்கூட்டு இந்திய சமூகத்தின் கட்டமைப்பையே அழித்துவிடும் அபாயத்தில் நாடு சிக்கி இருக்கின்றது.**

இந்தப் பேரபாயங்களை நாம் எதிர்கொள்ளும் போது, நமது முன்னோர்கள் இத்தகைய பிரச்சினைகளை எதிர்கொண்ட விதம் குறித்து தேடுகிறோம். அந்த அனுபவங்களில் இருந்து நாம் பாடம் கற்கிறோம். நாம் கடந்த கால அனுபவங்களை கற்றுக் கொள்ளும் போது உத்வேகம் பெறுகிறோம். தற்போதைய பிரச்சனைகளை எதிர்த்துப் போராட நம்மை கூர் தீட்டிக் கொள்கிறோம்.

அந்த வகையில் வரலாற்றின் பக்கங்களில் நமக்கு ஒரு பெயர் கிடைக்கிறது. அந்த முன்னோடியின் பெயர் நாராயண் மேகாஜி லோகாண்டே (Narayan Meghaji Lokhande) ஆகும். அவர் 'இந்தியாவின் தொழிற்சங்க தந்தை' எனப் போற்றப்படுகிறார். மகாராஷ்டிர மாநில அரசின் தொழிலாளர் கல்வி நிலையத்திற்கு (Institute of Labour Studies) அவரது பெயர் சூட்டப்பட்டுள்ளது.

பின்னாளில் இந்திய பிரதமராக இருந்த குல்சாரிலால் நந்தா, பம்பாய் மாகாண அரசின் தொழிலாளர் துறை அமைச்சராக இருந்தபோது, 1947 ஆம் ஆண்டு இந்தக் கல்வி நிலையம் துவங்கப்பட்டது, 2005 ஆம் ஆண்டு ஒன்றிய அரசு அவரை பெருமைப்படுத்தி தபால் தலை வெளியிட்டது, அவர் வாழ்ந்த காலத்திலேயே பிரிட்டிஷ் ஆட்சி அவருக்கு ராவ் பகதூர் பட்டம் வழங்கியது,

தொழிற்சங்கத் தலைவர், சாதிய முறை எதிர்ப்புப் போராளி, வகுப்புவாத எதிர்ப்புப் போராளி, பத்திரிகையாளர், பிராமணரல்லாத மக்களை பொருளாதார, சமூகநீதி அடிப்படையில் அணி திரட்டிய தலைவர் என பன்முகத் தன்மை கொண்டவராக லோகாண்டே திகழ்ந்தார்.

1848 ஆம் ஆண்டு மகாராஷ்டிராவில் உள்ள புனே மாவட்டத்தில் உள்ள கன்ஹெர்சரில் ஃபுல்மாலி சமூகத்தைச் சேர்ந்த ஏழைக் குடும்பத்தில் பிறந்தார்.

மாண்டவி டெக்ஸ்டைல்ஸ் மில்லில் பணிபுரிந்த போது புல்மாலிஸ் இயக்கத்தின் நிறுவனரும், சமூக செயற்பாட்டாளருமான ஜோதிபா பூலே அவர்களோடு தொடர்பு கொண்டார்.

சாவித்திரிபாய் பூலே நடத்திய மாலை நேர பள்ளியில் பஞ்சாலைகளின் குழந்தை தொழிலாளர்களும், தொழிலாளர்களும் கல்வி கற்க ஏற்பாடு செய்தார்.

ஜோதிபா புலே அவர்கள் 1873 ஆம் ஆண்டு 'சத்திய சோதக் சமாஜ்' (சத்தியம் தேடுபவர்களின் சங்கம்) இயக்கத்தை உருவாக்கினார். புரோகித மறுப்பு திருமணங்களை ஊக்குவிப்பதும், குழந்தைகளை படிக்க வைப்போம் என்று உறுதிமொழி ஏற்கும் மணமக்களுக்கு மணம்புரிந்து வைப்பதுமான பணிகளை சத்திய சோதக் இயக்கம் மேற்கொண்டது.

"சமத்துவத்தை நேசிப்பவர் எவராயினும் சத்திய சோதக் சமாஜ உறுப்பினராகலாம்". இந்த அமைப்பில் 1874 ஆம் ஆண்டு உறுப்பினராக இணைந்து கொண்ட லோகாண்டே, ஜோதிபா புலே அவர்களுக்கு அடுத்த நிலையில் முக்கிய தலைவராக திகழ்ந்தார். வெளிப்படையாகவே ஜோதிபா பூலே அவர்களின் வாரிசு என்றே அவர் கருதப்பட்டார்.

1877 ஆண்டு ஜனவரியில் பூனேயிலிருந்து சத்திய சோதக் இயக்கத்தின் சார்பில் 'தீனபந்து' (ஏழைகளின் நண்பன்) என்ற பெயரில் வாராந்திர மராத்திய இதழ் தொடங்கப்பட்டு கிருஷ்ணராவ் பாண்டும் பாலேகர் அவர்களால் 1880 ஏப்ரல் வரை நடத்தி வரப்பட்டது. தீனபந்து இதழ் நிதிச் சிக்கல் காரணமாக மும்பைக்கு மாறியது. 1880 ஆம் ஆண்டு லோகாண்டே இந்த பத்திரிகையை ஏற்று நடத்த தொடங்கினார்.

அதனைத் தொடர்ந்து இந்தியாவின் முதல் தொழிலாளர் வார இதழாக 'தீனபந்து' திகழ்ந்தது. லோகாண்டே பொறுப்பேற்ற பின்னர் நகர்புற, கிராமப்புற தொழிலாளி வர்க்கத்தின் கோரிக்கைகளையும், சமூக நீதியை ஆதரித்தும், விவசாயிகளின் பிரச்சனைகளை முன் வைத்தும், தொழிலாளர் விவசாயிகள் ஒற்றுமையை வலியுறுத்தி, வகுப்புவாதத்திற்கு எதிராக, மதநல்லிணக்கம் பேணி இந்து முஸ்லிம் ஒற்றுமையை வலியுறுத்தியும் தீனபந்து வெளிவந்தது. 1897ல் லோகண்டே மரணம் அடையும் வரை இந்த இதழை தொடர்ந்து நடத்தினார். 1884 ஆம் ஆண்டில் இதனுடைய விற்பனை 1,650 பிரதிகளாக அதிகரித்தது. அன்றைய சூழலில் மிக அதிகமான பிரதிகளை கொண்டு பம்பாயிலிருந்து வெளிவந்த திலகரின் கேசரி இதழுக்கு அடுத்த இடத்தை தீனபந்து பிடித்தது.

பஞ்சாலையில் பணிபுரிந்து வாழ்ந்த அனுபவம், அந்த ஆலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் அவல நிலையைப் பற்றிய நேரடி அனுபவத்தை கொடுத்தது. 1874 ஆம் ஆண்டு இங்கிலாந்திலுள்ள தொழிலாளர்களுக்காக பிரிட்டிஷ் அரசாங்கம் தொழிற்சாலை சட்டம் இயற்றியது. இதனைத் தொடர்ந்து இந்தியாவிலும் அத்தகைய சட்டம் வேண்டும் என அன்றைய ஊடகங்கள் பல எழுதி வந்தன. பஞ்சாலைகளில் பணிபுரியும் பெண்கள், குழந்தைகள் நலனில் அக்கறை கொண்டு பணிபுரிந்து வந்த பார்சி இனத்தின் தலைவர்களில் ஒருவரான எஸ்.எஸ்.பெங்காலி அவர்கள் தலைமையிலான சட்ட வரைவுக்குழு 1881 இல் தொழிற்சாலைகள் சட்டத்தை உருவாக்கித் தந்து, இந்தியாவின் முதல் தொழிற்சாலைகள் சட்டம் பிறந்திருந்தது.

1881 தொழிற்சாலைகள் சட்டத்தின் பல்வேறு குறைகள் நீக்கப்பட வேண்டுமென தொழிலாளர்கள் விரும்பினர். இத்தகைய சூழ்நிலை தொழிலாளர்களை சங்கமாக அணிதிரட்ட வாய்ப்பாக அமைந்தது. 1884 செப்டம்பர் 23 அன்று பரேலில் நடைபெற்ற தொழிலாளர்களின் கூட்டத்தில் "பம்பாய் மில் ஹேண்ட்ஸ் அசோசியேசன்" என்ற பெயரில் இந்தியாவின் முதல் தொழிற்சங்கத்தை லோகாண்டே நிறுவினார்.

சங்கம் துவங்கிய கூட்டத்திலேயே கீழ்காணும் தீர்மானங்களை நிறைவேற்றினர். 1) ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும்

# கோயில்மனைகளில் குடியிருப்போரின் கோரிக்கைகளை அரசு நிறைவேற்ற வேண்டும்

## கோவில்மனையில் குடியிருப்போர் சங்கம் கோரிக்கை

தமிழ்நாடு கோவில் மனையில் குடியிருப்போர் சங்கத்தின் தலைவர் வி.அ.பாலசுப்பிரமணியன், பொதுச் செயலாளர் வை.சிவபுண்ணியம், பொருளாளர் எஸ்.ஏழுமலை ஆகியோர் தலைமைச் செயலாளரும், நியாயவாடகை நிர்ணயம் அலுவல் குழு தலைவருமான வெ.இறையன்பு அவர்களுக்கும் மற்றும் குழு உறுப்பினர்களுக்கும் அனுப்பியுள்ள மனுவில் கூறியுள்ளதாவது:

"நமக்கு நாமே", "ஸ்டாலின்தான் வாராரு விடியல் தரப் போறாரு", நிகழ்ச்சிகளில் கோயில் மனைகளில் குடியிருப்போரின் பிரச்சனைகளை கேட்டறிந்து, தம்ஆட்சியில் இப்பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்படும் என்று உறுதியளித்ததை நடைமுறைப்படுத்தும் வகையிலும், கோயில்மனையில் குடியிருப்போருக்கு 2016 ல் பல மடங்கு வாடகையை உயர்த்தி அறிவித்ததில் உள்ள குளறுபடிகளை களையவும், 34ஏல் விதிமுறைகளை வகுக்க, நியாய வாடகை நிர்ணயம் அலுவல் குழுவினை அமைத்த, தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும், அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அவர்களுக்கும் தமிழ்நாடு கோவில் மனையில் குடியிருப்போர் சங்கத்தின் சார்பாக மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்வதுடன், குழுவினை முழுமனதுடன் வரவேற்கிறோம்.


கோயில்மனைகளில் குடியிருப்போர் வாடகை சம்பந்தப்பட்ட பிரச்சனைகளுக்கு தீர்வு காண அமைக்கப்பட்டுள்ள குழுவில் கோயில்மனைகளில் குடியிருப்போரின் கருத்துக்களை பிரதிபலிக்க குடியிருப்போர் சங்கத்திற்கு பிரதிநிதித்துவம் அளிக்காதது, இயற்கை நியதிகளுக்கு புறம்பானது, எனவே கோயில்மனை குடியிருப்போரின் பிரதிநிதிகளுக்கும், பிரதிநிதித்துவம் அளிக்க வகைசெய்யவேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கிறோம்.

கோயில்மனைகளில் குடியிருப்போரும், கடைகள் வைத்திருப்போரும் இன்று, நேற்று வந்தவர்கள் இல்லை. தலைமுறை, தலைமுறையாக இங்கு வாழ்ந்து வருபவர்கள். இவர்களுக்கு தற்போது குடியேறியவர்கள் போல் வாடகை நிர்ணயிக்க, 2004 ல் புகுத்தப்பட்ட சட்டப்பிரிவு 34ஏ– ல் உள்ள குறைபாடுகளை கவனத்தில்கொண்டு, அதன் குறைகளை நிவர்த்தி செய்யும்விதமாக அப்போதைய முதல்வர் கலைஞர் அவர்களால் வெளியிடப்பட்டு, அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு நடைமுறையில் இருந்துவரும் 456/2007 – 298/2010 அரசாணைகளில் உள்ள விதிமுறைகளை இந்த குழு கவனத்தில் கொள்ளவேண்டும்.

பட்டா இடங்கள் ரூ.100க்கும் ரூ.200 க்கும் விலைபோன அந்த கால கட்டத்தில் அதற்குகூட வழியில்லாமல், வருடத்திற்கு 6 ரூபாய், 12 ரூபாய் குத்தகை என்பதினால் கோயில் இடங்களில் குடியிருக்க வந்தவர்கள் இவர்கள். கரடு, முரடாக, குண்டும், குழியுமாக இருந்த கோயில் நிலத்தை தங்கள் சொந்த சிலவில் சீர்படுத்தி, செம்மைப்படுத்தி வாழ்விடமாக மாற்றி தங்கள் சொந்த செலவில் வீடு, கடை கட்டி குடியேறியவர்கள்.

கோயில் இருக்கும் பகுதியில் உள்ள கோயில் இடத்தின் அளவுள்ள பகுதிக்கு தனியார் வசூலிக்கும் வாடகையை போன்று கோயில் இடத்திற்கும் ஒப்பீடு செய்வது ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல. ஏனெனில் தனியார் அவருக்கு சொந்தமான இடத்தில், அவரால் கட்டப்பட்ட வீட்டில், அவர் குடி தண்ணீர்வசதி, கழிவுநீர் வசதி, மின் இணைப்பு என அனைத்தும் ஏற்படுத்திக்கொடுத்திருக்கிறார். மேலும் அதற்குண்டான வரிகளையும் அவரே செலுத்துகிறார். எனவே, மனைமட்டுமே சொந்தமான கோயில் மனைகளுக்கு வாடகை நிர்ணயம் செய்யும்போது இதை கவனத்தில்கொள்ள வேண்டும்.

மனைகளை மட்டுமே குடியிருப்போருக்கு வீடு கட்டிக்கொள்ள ஒதுக்கியதால் அந்த மனைகளுக்குபகுதி, முறையில் பசலிகணக்கில் வசூலிக்கப்பட்டு வந்தது. நாளாவட்டத்தில் அது சதுர அடி கணக்கில் மாத வாடகையாக மாற்றப்பட்டுவிட்டது. மனை மட்டுமே கோயிலுக்கு



**விஞ்ஞான தொழில்நுட்ப புரட்சியின் பாய்ச்சலை மனிதகுலம் முழுவதற்கும் பயன்படுத்தி முன்னேற்றம் அடைவது விஞ்ஞான சோசலிச சமுதாயத்தில் மட்டுமே சாத்தியமாகும்.**
**– ஏங்கல்ஸ்**




முழுநாள் விடுமுறை அளிக்க வேண்டும். 2) ஒவ்வொரு வேலை நாளிலும் நண்பகலில் அரை மணிநேரம் ஓய்வு வேண்டும். 3) காலை 6.30 மணி முதல் சூரிய அஸ்தமனம் வரையிலான நேரம் வேலை நேரம் ஆக வேண்டும். 4) ஒவ்வொரு மாதமும் 15ஆம் தேதிக்குள் ஊதியம் வழங்க வேண்டும் 5) பணியிடத்தில் விபத்து ஏற்பட்டால் குணமாகும்வரை முழு ஊதியத்துடன் விடுமுறை வழங்க வேண்டும். ஊனமுற்றால் வாழ்வாதாரத்திற்கு தகுந்த ஏற்பாடுகள் வேண்டும்.

இக்கோரிக்கைகள் அடங்கிய மனுவில் 5500 தொழிலாளர்கள் கையொப்பமிட்டு தொழிற்சாலைகள் ஆணையத்திடம் சமர்ப்பித்தனர். இதனை அறிந்த மில் முதலாளிகள் தொழிலாளர்களின் வேலைப்பளுவை இரண்டு மடங்காக உயர்த்தினர். இந்த சூழலில் 1885 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் ஆணையம் தனது அறிக்கையை அரசுக்கு அளித்தது. அது தொழிலாளர்கள் கோரிக்கைகளை ஏற்காமல் மவுனம் சாதித்தது.

1890ஆம் ஆண்டில் சந்தையில் துணிக்கான தேவை குறைந்து வருகிறது என்று காரணம் காட்டி ஒவ்வொரு வாரமும் இரண்டு நாட்கள் ஆலையை மூடுவது என பஞ்சாலை முதலாளிகள் முடிவு செய்தனர். இந்த தன்னிச்சையான முடிவுக்கு எதிராக 1890 ஏப்ரல் 24 ஆம் தேதி அன்று மும்பை மகாலட்சுமி ரேஸ் கோர்ஸ் மைதானத்தில் பத்தாயிரத்துக்கும் அதிகமான தொழிலாளர்கள் திரண்ட மாபெரும் கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் பம்பாய் மட்டுமல்லாமல் அருகில் உள்ள சூரத், அகமதாபாத், சோலாப்பூர், நாக்பூர் உள்ளிட்ட பல பகுதி தொழிலாளர்களும் பங்கேற்றனர். இந்த கூட்டம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வது என்று தீர்மானம் இயற்றியது. பம்பாய் மட்டுமல்லாமல் மற்ற பகுதிகளிலும் இரண்டு நாள் வேலை நிறுத்தம் நடைபெற்றது.

அரசாங்கம் பணிந்தது. தொழிற்சாலை ஆணையம் தொழிலாளர்களின் கோரிக்கைகளை காது கொடுத்து கேட்க தயாரானது.

**ஆணையத்தில் லோகாண்டே தொழிலாளர் பிரதிநிதியாக தனது வாதங்களை எடுத்து வைத்தார். இதைத்தொடர்ந்து உணவு இடைவேளை, வேலை நேரம் போன்ற கோரிக்கைகள் ஏற்கப்பட்டன. வார விடுமுறை ஏற்கப்படவில்லை. 1890 ஜூன் 10ஆம் தேதி அன்று பம்பாய் மாநகரம் மீண்டும் ஒரு மாபெரும் போராட்டத்தை சந்தித்தது. பல்லாயிரம் பெண் தொழிலாளர்களும் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர். இந்த பின்னணியில் பம்பாய் மில் முதலாளிகள் வார விடு முறையை ஏற்றுக்கொண்டனர். ஞாயிற்றுக்கிழமை விடு முறை அல்லது வார விடுமுறை நமக்கு இப்படித்தான் கிடைத் தது. லோகாண்டே அவர்களின் தலைமையில் பம்பாய் மில் ஹேண்ட்ஸ் அசோசியேசன் தொழிலாளர்களின் வீரம் செறிந்த போராட்டத்தின் விளைவாக, 1890 ஜூன் 10 ஆம் தேதி முதன் முதலாக (ஞாயிற்று கிழமை) வார விடுமுறை கிடைத்தது.**

1891 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டத்தின் விதிகளை உருவாக்குவதிலும் லோகண்டே பங்கு குறிப்பிடத்தகுந்தது. 1892 ஜனவரி முதல் இந்த சட்டம் நடைமுறைக்கு வந்தது. 10க்கும் மேற் பட்ட தொழிலாளர்கள் பணிபுரியும் தொழிற்சாலைகள் அனைத்துக்கும் இது பொருந்தும். பணியிடத்தில் காற்றோட்டமான, சுகாதாரமான சூழ்நிலையை இந்த சட்டம் உறுதி செய்கிறது. 9 வயதுக்கு கீழ் உள்ள குழந்தைகள் வேலை செய்வதை தடைசெய்கிறது. 9 முதல் 14 வயதுள்ள குழந்தைகளுக்கு 9 மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு 11 மணி நேர வேலை மற்றும் மாதத்திற்கு 4 நாட்கள் விடுமுறை வழங்குகின்றது.

லோகாண்டேவைப் பொருத்தவரை தொழிற்சங்கத்தை சமூக பிரச்சனைகள் மற்றும் அநீதிகளுக்கு எதிராகப் போராடும் ஒரு அமைப்பாகவே பார்த்தார். பொருளாதார முன்னேற்றமும், சமூகநீதியும் தொழிலாளர் ஒற்றுமையின் இரட்டை அம்சங்களாக அவர் கருதினார்.

முடிதிருத்தும் தொழிலாளர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் துப்புரவு தொழிலாளிகள் போன்ற ஓரங்கட்டப்பட்ட தொழிலாளர்களையும் அணி திரட்டினார். துப்புரவுத் தொழிலாளர்களுக்காக "மும்பை காம்கர் யூனியன்" என்ற துப்புரவு தொழிலாளர் சங்கத்தை நிறுவினார். இதே பெயரில் இன்றைக்கும் இந்த சங்கம் உயிர்ப்புடன் செயல்பட்டு வருகிறது.

இந்தியாவில் முதல் பெண் தொழிலாளர்களின் கூட்டத்தையும் அவரே நடத்தினார். 1895 மார்ச் 25 அன்று பம்பாயில் உள்ள ஜேக்கப் மில் வளாகத்தில் இக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தின் முடிவில் சம வேலைக்கு சம ஊதியம், வாரம் தோறும் ஊதியத்துடன் கூடிய விடுமுறை, 8 மணி நேர வேலை நாள் உள்ளிட்ட கோரிக்கைகளை முழங்கி பெண் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பெண் தொழிலாளர்களை இவ்வாறு அணிதிரட்டியதால் அவர்கள் தேச விடுதலைப் போராட்டத்திலும் ஈடுபட உந்து சக்தியாக இருந்தது.

1893 ஆம் ஆண்டில் பம்பாய் மாகாணத்தில் பசு பாதுகாப்பு இயக்கம் என்ற பெயரில் பாலகங்காதர திலகர் மற்றும் அவரது ஆதரவாளர்களால் வகுப்புவாத அடிப்படையில் மக்களை பிளவு படுத்துவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. நான்கு நாட்கள் மராட்டிய மாநிலமெங்கும் வன்முறை தீ பற்றி எரிந்தது. 80 பேர் உயிரிழந்தனர். 700க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். உழைக்கும் மக்களின் உடைமைகள் சூறை யாடப்பட்டன. எப்போதும் போலவே பம்பாயின் சேரிகளில் வசித்து வந்த இந்து, முஸ்லிம் சமூகங்களை சேர்ந்த உழைக்கும் மக்களும், புலம்பெயர் தொழிலாளர்களும் வெகுவாக பாதிக்கப்பட்டனர். சத்யசோதக் இயக்கம் மற்றும் பம்பாய் மில் ஹேண்ட்ஸ் அசோசியேசனின் முழு பலத்தையும் கொண்டு, இந்து, முஸ்லிம் ஒற்றுமையின் அவசியத்தை உணர்த்தி மதநல்லிணக்க பிரச்சாரத்தை லோகாண்டே முன்னெடுத்தார். அறுபதாயிரத்திற்கும் மேற்பட்ட இந்து முஸ்லிம் மக்கள் பங்கேற்ற மாபெரும் மதநல்லிணக்க ‘ஒற்றுமை விழா’ பேரணியை பம்பாயில் நடத்த லோகாண்டே மிக முக்கிய பங்கு வகித்தார்.

பசு பாதுகாப்பு இயக்கத்தின் வகுப்புவாத அடிப்படையிலான முன்னெடுப்பு முறியடிக்கப்பட்ட நிலையில் தான் 1894 ஆம் ஆண்டு இன்றைக்கும் ஒரு வகுப்புவாத பதட்டத்தை உருவாக்கி வரக்கூடிய விநாயகர் சதுர்த்தி விழாவை திலகர் கையிலெடுத்தார். பிரிட்டிஷ் காலனி அரசாங்கம் பாலுறவுக்கு இசைவு தெரிவிப்பதற்கான பெண்களின் வயதை 10 லிருந்து 12 ஆக உயர்த்தி சட்டம் இயற்றியது. திலகர் தலைமையிலான பழமைவாதிகள் இந்த மசோதாவுக்கு எதிராக போராடினர். ஆனால் லோகாண்டேயின் தலைமையிலான சத்திய சோதக் சமாஜ் மசோதாவுக்கு ஆதரவாக மக்களை அணி திரட்டியது.

பம்பாய் நகரம் 1896ஆம் ஆண்டில் பிளேக் மற்றும் பஞ்சம் எனும் இரட்டை பேரழிவால் பாதிக்கப்பட்டது. எப்போதும் போலவே தொழிலாளி வர்க்கம் பஞ்சம் மற்றும் பிளேக் ஆகிய கொடுமைகளில் கடுமையாக பாதிக்கப்பட்டது. லோகாண்டே சத்திய சோதக் இயக்கம் சார்பில் பிளேக் நோயால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மருத்துவ உதவி அளிக்க மருத்துவமனையைத் தொடங்கி செயல்படுத்தினார்.

நோய்த்தொற்று காலத்தில் உழைக்கும் மக்களுக்கு உதவ இடையறாது பாடுபட்டார். அதன் விளைவாக அவரையும் பிளேக் நோய் ஆட்கொண்டது. இக்கொள்ளை நோய் தாக்குதலில் 1897 பிப்ரவரி 9 அன்று மரணம் அடைந்தார்.

லோகாண்டே பிராமணரல்லாத உழைக்கும் மக்கள் சாதி அனைத்தையும் ‘மராத்தா, என்ற அடையாளத்தின் மூலம் இணைக்க முயன்றார். உற்பத்தியில் நேரடியாக ஈடுபடும் தொழிலாளர்களுக்கும், உற்பத்தி சாதனங்களை கட்டுப்படுத்தும் முதலாளிகளுக்கும் இடையே தொழிலாளர்களுக்கு ஆதரவாக பம்பாய் மில் ஹேண்ட்ஸ் அசோசியேசன் மூலம் களம் கண்டார்.

பம்பாய் கலவரத்திற்கு பின்பு இந்துமுஸ்லிம் தொழிலாளர்களை வெற்றிகரமாக ஒருங்கிணைத்து வகுப்பு வாதத்திற்கு எதிரான வர்க்க ரீதியான அணிதிரட்டலில் வெற்றிகண்டார். ஜோதிபா பூலே மற்றும் கிருஷ்ணராவ் பாலேகருடன் இணைந்து விவசாயிகள் தொழிலாளர்களை ஒருங்கிணைக்கும் நடவடிக்கைகளிலும் முழுமையாக ஈடுபட்டார். வகுப்புவாத பிரச்சனைக்கு இது ஒன்றே உறுதியான பதில்.

தொடர்புக்கு: **85248 67888**

சொந்தம், அதில் கட்டப்பட்டுள்ள வீடு குடியிருப்போரால் கட்டப்பட்டது, எனவே மனைப்பகுதிக்கு வருடத்திற்கு பகுதியாக/ குத்தகையாக மட்டுமே வசூலிக்கவேண்டும், அதில் கோயில் வீடுகட்டி வாடகைக்கு விட்டிருந்தால் சதுரடிகணக்கில் வாடகை வசூல்செய்யலாம். மனை மட்டுமேயானதால் பழையபடி பகுதி/ குத்தகை முறையில் மட்டுமே பசலி கணக்கில் வசூல் செய்யுமாறு விதிமுறைகளை வகுக்க வேண்டும்.

கோயில்மனைகளில் குடியிருப்போர், தாங்கள் வசிக்கும் வீட்டின் சிறுபகுதியில் தங்களின் வாழ்வாதாரத்திற்காக, சிறு கடை ஒன்று அமைத்துள்ளதை, அல்லது ஒரு பகுதியை குடியிருப்புக்கு வாடகைக்கு விட்டிருப்பதை, சுட்டிக்காட்டி, அந்த இடத்திற்கு வணிக பயன்பாட்டிற்கான வாடகையாக நிர்ணயிப்பதை தவிர்க்க விதிமுறைகளில் மாற்றம் வேண்டும்.

கோயிலுக்கு சொந்தமில்லாத, எவராலும் தானமாக வழங்கப்படாத கிராமநத்தம், குடிக்காணி போன்ற இடங்களில் குடியிருப்போர் திருக்கோயில்களுக்கு விளக்கு ஏற்றக்கூட வழியில்லாத அந்தக் காலங்களில் விளக்கேற்றுவதற்காக கோயில் இருந்த பகுதியில் வசித்தவர்களிடம் விளக்கு ஏற்ற எண்ணை வாங்குவதற்காக மாதம் 1 (ஒரு) ரூபாய் வசூலித்து விளக்கேற்றி வந்தார்கள், நாளடைவில் இது வாடகையாக கோயில் பதிவேடுகளில் பதியப்பட்டு, தற்போது கோயிலுக்கு மாதாமாதம் பணம் செலுத்தியதாலேயே இவர்கள் வசித்த இடங்களுக்கு கோயில் உரிமை கொண்டாடுகிறார்கள் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

நிலவழிகாட்டுமதிப்புஎன்பதுநிலத்தைபரிவர்த்தனைசெய்யும்போது பயன்படக்கூடியது.மற்ற நேரத்தில் இது உபயோகமில்லாதது **(Dead value)** என்று கூறலாம். இது உயர்ந்தாலோ அல்லது குறைந்தாலோ அதில் குடியிருப்போருக்கு எந்த பயனும் விளைவிக்கபோவதில்லை. எனவே பத்திரப்பதிவு துறையிலிருந்து பெறப்படும் இந்த வழிகாட்டு மதிப்பை நியாய வாடகை நிர்ணயம் செய்யும் போது அடிப்படையாக கொள்வது தவிர்க்கப்படவேண்டும்.

பல இடங்களில் கோயில்மனை குடியிருப்போருக்கு கூட்டுப் பட்டா வழங்கப்பட்டுள்ளதால் (கோயிலுக்கும், குடியிருப் போருக்கும் சேர்ந்து) இவர்களுக்கு ஏற்றபடி வாடகை நிர்ணய விதிமுறைகளில் மாற்றம் கொள்ள வேண்டும். நியாய வாடகை நிர்ணயகுழுவினர் மேற்குறிப்பிட்ட கருத் துக்களை கவனத்தில்கொண்டு தமிழ்நாடு முழுதும் பரவியுள்ள ஏழை, எளிய, நடுத்தர குடும்பங்களைச் சார்ந்த கோயில்மனை குடியிருப்போர்/ கடைகள் வைத்திருப்போரின் வாழ்வாதாரம் பாதிக்காத வகையில் நியாய வாடகை நிர்ணய விதிமுறைகளை வகுக்க வேணுமாய் மிகவும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு கோரிக்கை மனுவில் கூறியுள்ளனர்.


# நூறு நாள் வேலைதிட்ட தொழிலாளர்களுக்கு ஊதிய பாக்கி வழங்கக் கோரி ஆர்ப்பாட்டம்




திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றிய அலுவலக முன்பு தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் மாவட்ட துணை செயலாளர் கே.ராஜா, ஒன்றிய தலைவர் வி.ஜவகர் ஆகியோர் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அனைத்து ஊராட்சிகளிலும் நூறு நாள் வேலை வழங்க வேண்டும். வேலை செய்துள்ள அனைத்து தொழிலாளர்களுக்கும் உடன் ஊதியம் வழங்க வேண்டும். காலை 7 மணிக்கு வேலை தொடங்க வேண்டும். பயோமெட்ரிக் முறையில் கையெழுத்து யிட வேண்டும் என்ற முறையை மாற்றி 9 மணிக்கு வேலை தொடங்க வேண்டும். நூறு நாள் வேலையை 200 நாட்களாக உயர்த்தி வழங்க வேண்டும். தின ஊதியமாக ரூ.600 வழங்கிட வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே. உலகநாதன், க.மாரிமுத்து எம்.எல்.ஏ., சங்க மாவட்ட செயலாளரும், ஒன்றியக்குழு தலைவருமான அ.பாஸ்கர் ஆகியோர் கோரிக்கைகளை விளக்கி பேசினர்.

ஆர்ப்பாட்டத்தில் கட்சியின் ஒன்றிய செயலாளர் கே.பாலு சங்கத்தின் பொறுப்பாளர்கள் கே.விஜயா, கே.ஜீவானந்தம், சரோஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.



**லாப நோக்கு ஒன்றையே குறியாகக் கொண்ட முதலாளித்துவம்
உழைப்புச் சக்தியை விலை பொருள் ஆக்கி மூலதனம் குவிப்பதால்
வேலையில்லா திண்டாட்டம் வேலையில்லா பட்டாளம் நிரந்தரமாகிறது.
- மார்க்ஸ்**

## வகுப்புவாத சக்திகளை அரசியல் அதிகாரத்திலிருந்து அகற்ற

# தைத் திருநாளில் உறுதி ஏற்போம்!

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தமிழ்நாடு மாநிலக்குழு தைத்திருநாள் வாழ்த்துக்கள்

“ஆடிப்பட்டம் தேடி விதை” என்ற முதுமொழி மரபில் உழவர் பெருமக்கள் “தை பிறந்தால் வழி பிறக்கும்” என்ற தன்னம்பிக்கை ஊட்டும் தைத் திருநாள் தமிழர் வாழ்வோடு கலந்து நிற்கும் கலாச்சாரத் திருநாளாகும்.

நாடோடிகளாக அலைந்து, திரிந்து, வேட்டையாடி வாழ்ந்த மனித சமூகம், உழவுத் தொழில் செய்து, வாழ்விடங்கள் அமைத்து. நிலையான வாழ்வை தொடங்கிய, ஆரம்ப நிலை வேளாண் சமூகம் இயற்கையை வணங்குவதில் உருவான பண்பாட்டு திருவிழா.

மனித உழைப்போடு, கால் நடைகளின் உழைப்பையும் இணைத்து, விதைக்கும் பரப்பளவை விரிவு படுத்துவதில், உற்பத்தியை பெருக்குவதில் வெற்றி கண்ட சமூகம் நிலைத்த வாழ்வுக்கு உயிர் கொடுக்கும் உழைப்புக்கு பொங்கலிட்டு நன்றி கூறி மகிழ்ந்திரும் இன்பத் திருநாள். .

கால வளர்ச்சியில் விஞ்ஞானம் வியக்கத்தக்க வளர்ச்சி பெற்றிருக்கும் இந்தக் காலத்திலும் வழிவழியான கலாச்சார திருவிழாவாக தைத் திருநாள் கொண்டாடப்படுகிறது.

“பழையன கழிதல், புதியன புகுதல் வழுவல; கால வகை யினானே” என்கிறது நன்நூல் இதன் படி மார்கழி கடைசி நாளில் பயனற்ற கருவிகளையும், பொருள்களையும் மாற்றி விட்டு, புதுப் பானை, புது அரிசி, செங்கரும்பு, மஞ்சள் என உழைப்பில் விளைந்த புதுப் பொருட்களை கொண்டு பொங்கல் படைத்து மகிழ்வை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இந்த ஆண்டு உழுவடை நிலத்தின் உரிமை காக்கும் போராட்டத்தில் உழவர் பெருமக்கள் மாபெரும் வெற்றி கண்டுள்ளனர். கார்ப்பரேட் சக்திகளுக்கு ஆதரவான மூன்று வேளாண் வணிக சட்டங்களையும் பாஜக ஒன்றிய அரசு திரும்பப் பெற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

உத்தரப் பிரதேசம் லக்கிம்பூர் கேரியில் ஒன்றிய அரசின் உள்துறை இணை அமைச்சரின் மகன் போராடிய விவசாயிகள் மீது கார்களை ஏற்றிப் படுகொலை செய்த கொடூரம் ஏற்படுத்திய அதிர்ச்சி அலை அடங்கவில்லை.

அரசியல் அமைப்பின் அடிப்படையான மதச்சார்பற்ற பண்பும், ஜனநாயக வாழ்வு நெறிமுறைகளும் சிதைக்கப்பட்டு, தனி நபர் மையப்பட்ட சர்வாதிகாரம் கட்டமைக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவ மழை இயல்பான அளவைக் காட்டிலும் பல மடங்கு பெரு மழையாக பெய்ததால், விளைந்த நெற்பயிர்களையும், நடவு செய்த தாளடி நெற்பயிர்களையும் இழந்து நிற்கும் விவசாயிகள் துயரக் கண்ணீர் வடிக்கிறார்கள். அரசு கட்டிக் கொடுத்த வீடுகளையும், வேலை வாய்ப்புகளையும் இழந்து நிற்கும் விவசாயத் தொழிலாளர்கள் ரொக்கப் பண உதவியை எதிர்பார்க்கின்றனர்.

மேட்டு நில சாகுபடியும் வட கிழக்கு தொடர் கனமழையால் பெருமளவு அழிந்து போயுள்ளது.

அரசியல் தளத்தில் மாநில உரிமைகளையும், மக்கள் நலனையும் பலி கொடுத்து, ஒன்றிய அரசிற்கு விசுவாச சேவகம் புரிந்த, சுயநல ஆதாயம் தேடிய ஆட்சியினை ஜனநாயக முற்போக்குக் கூட்டணியால் அகற்றப்பட்டு, திமு கழகம் ஆட்சி அமைத்துள்ளது.


கோவிட் 19 நோய்த்தொற்றின் மூன்றாம் அலைப் பரவலும், ஒமிக்ரான் நோய்த்தொற்றும் அச்சுறுத்தும் காலத்தில், முன் களப்பணி ஏற்று முதலமைச்சர் ஆற்றும் பணி நம்பிக்கையூட்டுகிறது.


சமதர்ம, சுயமரியாதை இயக்கங்கள் கட்டமைத்த சமூக நீதிப் பாதையினை அழித்தொழிக்கும் “நீட்” தேர்வை, தேசியக் கல்விக் கொள்கையினை முறியடிக்க, வகுப்பு வாத சக்திகளை அரசியல் அதிகாரத்தில் இருந்து வெளியேற்ற உறுதி ஏற்போம். தொழிலாளர், விவசாயிகள் நலன் பேணும், மாநில உரிமைகளை மீட்டெடுக்கும் ஜனநாயகப் பாதையில் அணிவகுப்போம் எனக் கூறி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு உறுதி ஏற்று, தமிழ்நாட்டில் வாழ்ந்து வரும் அனைவருக்கும் தைத் திருநாள் மற்றும் உழவர் திருநாள் வாழ்த்துக்களைத் தெரி வித்துக் கொள்கிறது. இவ்வாறு மாநிலக் குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

---

## தந்தை பெரியார் - டாக்டர் அம்பேத்கர்

# விருது பெறுவோர்களுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வாழ்த்து





முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் சீரிய தலைமையில் தமிழ் நாடு அரசு உருவாக்கிய தந்தை பெரி யார் மற்றும் டாக்டர் அம்பேத்கர் விருதுகள், சமூகநீதிக்காக பாடுபட்டு வரும் பெருமக்களுக்கு ஆண்டு தோறும் பொங்கல் திருநாளில் வழங் கப்படுகிறது.

2021 ஆண்டுக்கான விருது பெறுவோர் தேர்வு செய்யப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளனர். இதன்படி மேனாள் நீதிநாயகம் (ஓய்வு) கே. சந்துரு அவர்கள் “டாக்டர் அம்பேத்கர்” விருதுக்கும், திராவிட இயக்க ஆய் வாளரும், சிறந்த எழுத்தாளருமான க.திருநாவுக்கரசு அவர்கள் “தந்தை பெரியார்” விருதுக்கும் தேர்வு செய் யப்பட்டு, அறிவிக்கப்பட்டுள் ளனர்.

அடுத்தடுத்து வரும் எல்லாத் தலை முறைகளும் திராவிட இயக் கம் குறித்து அறிய முற்படும் போது ஆய்வாளர் க.திருநாவுக்கரசு அவர் களின் படைப்புகளையும், ஆவணத் தொகுப்புகளையும் கற்றுணர்வது இன்றியமையாத் தேவையாகும். காலங்காலமாக சமூக ஒடுக்கு முறையை எதிர்கொண்டு வாழ்ந்து வரும் பட்டியல் பழங்குடியினர், பட்டியல் சாதியினர் சமூகத்தின் வாழ் வுரிமைக்காக கல்லூரியில் பயிலும் காலத்தில் களப் போராட்டத்தை முன்னெடுத்த மாணவர் கே.சந்துரு, வழக்கறிஞர் பணியில் சட்டப் போராட் டமாக உயர்த்தி முன்னேறினார். அவரது நேர்மையும், வெளிப்படை அணுகுமுறையும், சார்பற்ற நடுநிலை யும் அவரை நீதி நாயகமாக உயர்த் தியது.

மாண்பமை நீதிமன்றத்தில் ஏறக் குறைய ஒரு லட்சம் வழக்குகளை விசாரித்து தீர்ப்பளித்து சாதனை படைத்துள்ளார். இவர் வழங்கிய தீர்ப்புகளில் என்றென்றும் சுடர்விட்டு பிரகாசித்து வழிகாட்டும் தீர்ப்புகளும் அடங்கியுள்ளன.

தந்தை பெரியார் மற்றும் டாக் டர் அம்பேத்கர் விருதுகள் பொருத்த மான பெருமக்களிடம் சேர்ந்து, பெருமைக்கும் பெருமை சேர்க்கும் வகையில் அமைந்துள்ளது.

விருது பெறும் பெருமக்கள் க. திருநாவுக்கரசு மற்றும் நீதி நாயகம் கே.சந்துரு (ஓய்வு) இருவருக்கும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு இதய பூர்வ வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

---

## நகைக் கடன்கள்

# தள்ளுபடி நிபந்தனைகள் தளர்த்தப்பட வேண்டும்

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வேண்டுகோள்

“கூட்டுறவு வங்கிகளில் 5 சவரன் வரையான நகைக் கடன்கள் தள்ளுபடி செய்யப்படும் என திமுகழகம் சட்ட மன்ற தேர்தலில் உறுதியளித்தது.

கொரோனா நோய்த்தொற்று பர வல் நெருக்கடி காலத்தில் சாதாரண மக்களும், அடித்தட்டு பிரிவினரும் தங்கள் கைகளில் இருந்த அற்ப சொற்ப நகைகளை அடகு வைத்து வாழ்க்கை நெருக்கடிகளை சமா ளித்து வந்தனர். இவர்களுக்கு கடன் தள்ளுபடி உறுதிமொழி பெரும் நம்பிக்கை ஏற்படுத்தியது. ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சட்டப் பேரவையில் 13.09.2021 ஆம் தேதி நகைக் கடன் தள்ளுபடி அறிவிப்பை வெளியிட்டார். அதில் நகைக்கடன்கள் குறித்து, பகுப்பாய்வு செய்து.நிபந்தனைகள் விதித்து, கடன் தள்ளுபடி பெறுவதற்கான தகுதிகள் நிர்ணயித்துள்ளதாக தெரிவித்தார். இதன்படி கடன் தள்ளுபடியால் அரசுக்கு 6 ஆயிரம் கோடி ரூபாய் செலவாகும் என்றும் அறிவித்தார்.

தமிழ்நாடு முழுவதும் 48 லட்சத்து 84 ஆயிரத்து 726 நகைக் கடன்களை பரிசீலித்து, அதில் 35 லட்சத்து 37 ஆயிரத்து 693 நகைக் கடன்கள் தள் ளுபடி பெற தகுதி இல்லாதவைகள் என அறிவிக்கப்பட்டன. அதாவது நகைக் கடன்களில் 72 சதவீதத்துக்கும் அதிகமாக கடன்கள் தள்ளுபடி இல்லை என்ற நிலை ஏற்பட்டுள்ளது. அதாவது 48 லட்சத்து 84 ஆயிரத்து 726 நகைக் கடன்களில் 10 லட்சத்து 18 ஆயிரத்து 66 கடன்கள் மட்டுமே தள்ளுபடி செய்யப்படும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. முந்தைய ஆட்சி காலத்தில் கடன் வழங்கு வதிலும், பெறுவதிலும் தவறு நடந்திருப்பதை கண்டறிந்து தடுக்கப்பட வேண்டும் என்பதில் இரண்டு கருத்துக்கு இட மில்லை. அது உறுதியாக மேற்கொள் ளப்பட வேண்டும். அதேசமயம் ஏஏஒய் குடும்ப அட்டை பெற்றுள்ள, வறுமைக் கோட்டுக்கும் கீழே வாழும் குடும்பங்கள் நகைக்கடன் தள்ளுபடி பெற தகுதியில்லை என்று அறி வித்திருப்பதை அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

பரம ஏழையாக இருந்தாலும் சிரமப்பட்டு சேமித்து, கொஞ்சமாவது நகை வாங்குவதும் அணிவதும் தமிழர் பண்பாடு என்பதை அரசு கருத்தில் கொண்டு, ஏஏஒய் குடும்ப அட்டைதாரர் குடும்பங்களுக்கும் 5 சவரன் வரையான நகைக் கடன்களை தள்ளுபடி செய்யும் வகையில் புதிய அரசாணை வெளியிட வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு, தமிழ் நாடு அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது. இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

---

# காவல்துறை அத்துமீறல் தொடர்வது தடுக்கப்பட வேண்டும்

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வேண்டுகோள்

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம் கருப்பூரைச் சேர்ந்த மாற்றுத் திறனாளி ஏ.பிரபாகரன் (45), இவர் மனைவியுடன் கருப்பூரில் வசித்து வருகிறார். இவரையும், இவரது மனைவி அம்சலாவையும் நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் காவல்துறையினர் விசாரணைக்காக அடித்து, இழுத்துச் சென்றுள்ளனர்.

பிரபாகரன் அம்சலா தம்பதியை அழைத்துச் சென்ற காவல்துறையினர் தனியிடத்தில் வைத்து கடுமையாக சித்தரவதை செய்து திருட்டு வழக்கை ஏற்கும்படி நிர்பந்தித்துள்ளனர். காவல்துறையின் கடுமையான தாக்குதலில் பிரபாகரன் ஆணுறுப்பு சிதைக்கப்பட்டு, உயிராபத்தான நிலையில் பல்வேறு குற்றப்பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து, நாமக்கல் கிளைச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இங்கு அவரது உடல்நிலை படுமோசமானதால் சேலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டு, அங்கு பரிதாபகரமாக மரணமடைந்துள்ளார்.

கடந்த ஆட்சி காலத்தில் சாத்தான் குளம் காவல் நிலையத்தில் நடந்த கொடூரம், இப்போது சேந்தமங்கலம் காவல்துறையால் நடத்தப்பட்டுள்ளது. காவல்துறையின் அதிகார அத்துமீறல் தொடர்வதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வன்மையாக கண்டிக்கிறது.

இந்த சம்பவம் வெளி வந்தவுடன் சில காவலர்கள் மீது தற்காலிக பணிநீக்கம் என்ற மென்மையான நடவடிக்கை மேற்கொண்டிருப்பது போதுமானது அல்ல. அவர்கள் மீது கொலை வழக்கு பதிவு செய்து, அவர்களை உடனடியாக கைது செய்ய வேண்டும் என கட்சி வலியுறுத்துகிறது.

பிரபாகரன் அம்சலா ஆகியோர் மீது போடப்பட்ட வழக்கை திரும்பப் பெற்று, அவரது மறுவாழ்வுக்கு உதவ வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு, தமிழ்நாடு அரசை வலியுறுத்துவதுடன், காவல்துறையின் அதிகார அத்துமீறல்களை தடுக்கும் நெறிமுறைகள் உருவாக்கப்பட வேண்டும் என வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

---

# முதலமைச்சர் நடவடிக்கைக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நன்றி

சேலம் மாவட்டம் ஓமலூர் வட்டம், கருப்பூரில் வசித்து வரும் மாற்றுத் திறனாளி ஏ. பிரபாகரனும், அவரது மனைவியும், நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் காவல்துறையால் கைது செய்யப்பட்டு, சித்தரவதை செய்ததில் மாற்றுத் திறனாளி ஏ.பிரபாகரன் உயிரிழந்தார் என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இது தொடர்பாக அரசு தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உட்பட அரசியல் கட்சிகளும், அமைப்புகளும் வேண்டுகோள் விடுத்தன.

இதனைத் தொடர்ந்து மாற்றுத் திறனாளி ஏ.பிரபாகரன் மரணம் குறித்த வழக்கு விசாரணையை காவல்துறையின் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு மாற்றியும், பிரபாகரன் குடும்பத்தின் மறுவாழ்வுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 10 லட்சம் வழங்கவும் மாண்புமிகு முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

முதலமைச்சர் விரைந்து நடவடிக்கை மேற்கொண்டதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வரவேற்கிறது. நன்றி தெரிவித்து கொள்கிறது. மனித உரிமைகள் பேணுவதில் முதலமைச்சர் காட்டும் அக்கறையை காவல்துறை உணரும் என நம்புகிறோம்.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

# நியூ ஏஜ் எஸ். துரைராஜ் மறைவு

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்

சமூக அக்கறை கொண்ட பத்திரிகை யாளர் நியூ ஏஜ் எஸ்.துரைராஜ் (70) ஜன. 15 அன்று திருச்சியில் உள்ள அவரது மகள் வீட்டில் காலமானார் என்ற துயரச் செய்தி அறிந்து அதிர்ச்சியுற்றோம்.

திருச்சி பொன்மலை ரயில் தொழி லாளி குடும்பத்தில் 1951 ஆகஸ்ட் 10 ஆம் தேதி பிறந்தவர். இடதுசாரி இயக்கத்திலும், தொழிற்சங்க இயக்கத்திலும் பொன்மலை ரயில்வே தொழிலாளர்கள் செலுத்தியுள்ள பங்கு மகத்தானது. உரிமைப் போராட்டக் களமாக திழந்த பொன்மலையில் பிறந்த எஸ். துரைராஜ் சிறுவயதிலேயே இடதுசாரி சிந்தனையால் ஈர்க்கப்பட்டவர். போராட்டக் குணம் பெற்றவர்.

பள்ளிக் கல்வி முடித்து தாவரவியலில் இளங்கலை பட்டமும், தமிழில் முதுகலைப் பட்டமும் பெற்றவர். கல்லூரிக் கல்வியின் போது அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தில் இணைந்து செயல்பட தொடங்கியவர். இறுதி மூச்சிருந்த வரை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் தொடர்பில் இருந்தவர்.

1970களில் புதுடெல்லியை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வந்த சென்டிரல் நியூஸ் ஏஜென்சியின் சென்னை செய்தியாளராக களப் பணியை துவக்கியவர். நியூ ஏஜ், பேட்ரியாட், லிங்க் போன்ற ஆங்கில வார இதழ்களின் சென்னை செய்தியாளராக பரந்துபட்ட அளவில் செயல்பட்டவர்.

நியூஸ் டுடே, தி இந்து ஆங்கில தினசரிகளில் முதுநிலை செய்தியாளராக பணியாற்றினார். பின்னர், "பிரண்ட் லைன்" ஆங்கில சஞ்சிகையின் சிறப்பு செய்தியாளராக பணிபுரிந்தார்.

நாற்பது ஆண்டுகளுக்கும் மேலான ஊடகப் பணியில் தேசியத் தலைவர்களோடும், மாநில அரசியல் கட்சித் தலைவர்களோடும் பழகும் வாய்ப்பைப் பெற்றவர். தோழர் எஸ்.துரைராஜ் எழுதிய செய்திக் கட்டுரைகள் உழைக்கும் மக்களின் உணர்வை பிரதிபலிக்கும். நாட்டின் ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டுக்கும் குரல் கொடுக்கும். சாதி, மதவெறி சக்திகளுக்கு எதிரான போர்க் குரலாக ஒலிக்கும். அவரது இழப்பு எளிதில் ஈடு செய்ய இயலாத பேரிழப்பாகும். சில மாதங்களாக புற்றுநோயால் அவதிப்பட்டு வந்த எஸ். துரைராஜ், சிகிச்சை பலனின்றி வீடு திரும்பிய நிலையில் காலமானார். தோழர் எஸ். துரைராஜ் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரைப் பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு ஆறுதலை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.



### கலை இலக்கியப் பெருமன்றம் இரங்கல்

உழைப்பாளிகள், விவசாயிகள், தலித்துகள் மற்றும் பழங்குடியினர் பிரச்னைகளை முன்னணி இதழ்களில் எழுதி வந்த, சிறந்த மக்கள் இதழாளர் எஸ்.துரைராஜ் (71) திருச்சியில் ஜன. 15 அன்று காலமானார்.

தொடக்கத்தில் படிக்கும் காலத்தில் மாணவர் பெருமன்றத்தில் செயல்பட்டவர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் 'சென்ட்ரல் நியூஸ் ஏஜென்சி' என்ற ஆங்கில செய்தி நிறுவனத்திலும், 'நியூ ஏஜ்' ஆங்கில இதழிலும் பணியாற்றியவர். தொடர்ந்து 'பிடிஐ' செய்தி நிறுவனம், 'நியூஸ் டுடே' மாலை நாளிதழ், 'தி ஹிந்து' நாளிதழ் மற்றும் 'பிரண்ட் லைன்' ஆகியவற்றில் தமிழ்நாடு முழுவதும் பணியாற்றியவர். 'ஜனசக்தி', 'தாமரை ஆகிய இதழ்களின் வளர்ச்சிக்கு பெரும்பங்காற்றினார். பத்திரிகையாளர் சங்கங்களில் பொறுப்பு வகித்தவர். 'சஞ்ஜிகை', 'காலமும் கருத்தும்' ஆகிய இலக்கிய, தத்துவார்த்த இதழ்களில் பதிப்பாசிரியராகப் பொறுப்பேற்று வெளியிட்டு வந்தவர். மொத்தத்தில் 'மக்கள் இதழாளராக' வாழ்ந்து மறைந்த தோழர் எஸ். துரைராஜ் அவர்களுக்கு தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற மாநிலக் குழு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் தலைவர் சி.சொக்கலிங்கம், பொதுச் செயலாளர் இரா.காமராசு, பொருளாளர் ப.பா.ரமணி ஆகியோர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளனர்.

## இந்த வார தம்பிக்குறள்

### 55. திகைக்க வாழ்

**ஆறாத் துயரம்வந் தாலும் மனமழிந்து**
**பேராது வாழ்வதாம் வாழ்வு.**

தாங்கிக் கொள்ள இயலாத அளவு பெருந் துன்பம் வந்தாலும்கூட, மனம் கலங்கிடக் கூடாது. நிலையில் சோர்ந்து விடக் கூடாது. நிலைபெயராமல் வாழ்வதே சிறந்த வாழ்வாகும்.

**நகைக்கவே வாழ்வது வாழ்வில மாற்றான்**
**திகைக்கவே வாழ்வது வாழ்வு.**

பிறர் எள்ளி நகையாடும்படி வாழ்வது நல்ல வாழ்க்கை ஆகாது. (பல துன்பத்திலும் கூட) பிறர் வியப் படையும்படி நிலைத்து வாழ்வதே வாழ்க்கையாகும்.

## வாசகர் டுவிட்



ஆசிரியர் ஜனசக்தி,

இரா.முத்தரசன் அவர்களின் கட்சிக் கடிதம் படித்தேன். என்ன சொல்லாடல் வியாந்து போனேன். பொங்கல் திருவிழாவை வர்ணித்திருப்பது என் நினைவுகளை கடந்த காலத்திற்கு இழுத்துச் சென்றது. என்னுடைய இனிமையான நினைவுகளை பொங்கல் திருவிழா மூலம் முத்தரசன் அவர்கள் மீட்டு வந்தார்கள். உழைப்பின் விழா சிறக்க வாழ்த்துக்கள்

– ஞா.சிவகாமி, போரூர்.

### கண்ணீரை வரவழைத்த கட்சிக் கடிதம்

இந்த வார ஜனசக்தி இதழில், மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் அவர் களின் கட்சி கடிதம் படித்தேன். முன்னுதாரணங் களை பின்பற்றுவோம் என்ற தலைப்பில், அவர் எழுதியுள்ள விசயங்கள், 2021ஆம் ஆண்டு நம்மை எப்படியெல்லாம் உலுக்கி எடுத்தது, தோழர்கள் தா.பா., வி.ராஜ மோகன், ஆர். சுசீலா, படுகொலை செய்யப் பட்ட தோழர் நடேச.தமிழார்வன் ஆகியோரை இழந்த ஆண்டு இது, என்று தொடங்கிய அவரது கடிதம், இயற்கை பேரிடரால் ஏற்பட்ட துன்பங்களை விவரித்து, அதற் கான தீர்வுகளை கோரிக்கைகளாக முன் வைத்து விட்டு, நம்முடைய கட்சியிலே முன்னுதாரணமாக திகழ்த தோழர் ஜீவா தொடங்கி தோழர் சிவகிரி தங்கவேலு,தோழர் டாக்டர் வே. துரைமாணிக்கம் ஆகியோரின் தூய்மை யான அரசியல் வாழ்க்கையும், அவர் களின் வாரிசுகளின் இன்றைய நேர்மையான வாழ்க்கை யையும் விவரித்த முறை என்னை உலுக்கியது. கண்களில் நீர் வழிய படித்து முடித்தேன்.

இந்த கடிதம், கட்சி உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் கண்டிப்பாக படிக்க வேண்டிய கடிதம். இப்படிப்பட்ட கடிதங்கள் தான் ஜனசக்தி வீடு தோறும் கொண்டு செல்ல வேண்டும் என்ற நமது கட்சியின் நோக்கத்தை புரிய வைக்கிறது.எனவே, தோழர்கள் அனைவரும் ஜனசக்தியை வாங்கி கட்சி கடிதத்தை கண்டிப்பாக படித்து முடியுங்கள்.

நன்றி! நன்றி!! நன்றி!!!

**எஸ்.அழகுமுத்து பாண்டியன்**

# மனித உரிமை அமைப்புகளை மிரட்டுவதை நிறுத்துக!

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்




பாஜக ஒன்றிய அரசு கருத்துரிமை பறிப் பதிலும், மனித உரிமைகள் மறுப்பதிலும் வரம்பற்று செயல்பட்டு வருகின்றது.

அமலாக்கத்துறை, மத்திய புலனாய்வுத் துறை, தேசிய புலானாய்வு முகமை, வருமான வரித்துறை என அரசியலமைப்பு அதிகாரம் பெற்ற அமைப்புகளை அத்துமீறி பயன்படுத்தி வருகிறது.

இதன் தொடர்ச்சியாக மனித உரிமை கோரிக் கைகளில் தலையிட்டு, செயல்பட்டு வரும், மதுரை மக்கள் கண்காணிப்பு அலுவலகத்தில் மத்திய புலானாய்வுத் துறை அதிகாரிகள் சோதனை நடத்தியுள்ளனர்.

மக்கள் கண்காணிப்பகம் 1985 ஆம் ஆண்டு முதல் மனித உரிமைகள் பாதுகாக்கவும், பட்டியலின மக்கள் மற்றும் பழங்குடியினர் வாழ்வுரிமைக்காகவும் சட்டப்பூர்வு நடவடிக் கைகளை மேற்கொண்டு வருகிறது.

குறிப்பாக வீரப்பன் தேடுதல் வேட்டையில் நடந்த காவல்துறையின் அத்துமீறலை வெளிக் கொண்டு வந்ததிலும், செம்மரக் கடத்தல் என்ற பெயரில் தமிழ்நாட்டு தொழிலாளர்கள் கொல்லப்பட்ட சம்பவத்திலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவியதிலும் மக்கள் கண்காணிப் பகம் பெரும் பங்காற்றியுள்ளது.

மேலவளவு முருகேசன் படுகொலை வழக்கில் குற்றவாளிகள் தண்டிக்கப்படவும், பாப்பட்டி, கீரிப்பட்டி உள்ளாட்சி தேர்தல் ஜனநாயக உரி மைகள் பாதுகாக்கவும் குரல் கொடுத்து வந்தது.

மதவெறி, சாதிவெறி சக்திகளுக்கு எதிரான கருத்துகளை அணி திரட்டும் பணியில் ஈடுபட்டு வரும் மக்கள் கண்காணிப்பகம் சர்வதேச அமைப்புகள் பலவற்றின் பாராட்டுதல்களையும் பெற்றுள்ளது.

இந்த தொண்டு நிறுவனத்தின் நடவடிக்கை களை முடக்கும் நோக்கத்துடன் மத்திய புலா னாய்வுத் துறை சோதனை நடந்தியுள்ளது ஆழ்ந்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

அயல்நாடுகளில் நன்கொடை பெறுவது தொடர்பான கணக்குகள் ஆய்வு செய்து, விதி மீறல்கள் எதுவும் இல்லை என்பதை அறிந்தும், சிபிஐ சோதனை நடத்தி இதன் மூலம் மதுரை மக்கள் கண்காணிப்பு நிறுவனத்தை முடக்க முயல்வதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு மிக வன்மையாக கண்டிக்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

# செவ்வணக்கம்



**தோழர். ம.அ. அண்ணாமலை**
**வயது 90**

தோழர். ம.அ.அண்ணாமலை கடந்த 6.01.2022 அன்று இயற்கை எய்தினார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.


| மகன்கள் : | மகள்கள் : |
|---|---|
| அ. ராஜன்சின்னையன் | அ. ஞானமணி |
| அ. செந்தில்குமார் | அ. தேவி |
| அ. அருளானந்தம் | அ. கலைச்செல்வி |
| அ. வரதராஜன் | |

மற்றும்

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி**

மருதூர் கிளை, இராமநாதபுரம், கோவை.

Mob : 80981 60545



மலையாளி இன மக்களை பழங்குடியினராக அங்கீகரிக்க

## கே.சுப்பராயன் எம்.பி.யிடம் கோரிக்கை மனு

பர்கூர் மலைப்பகுதியில் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சிக்கு வந்திருந்த, திருப்பூர் நாடாளுமன்ற தொகுதி உறுப்பினர் கே.சுப்பராயன் அவர்களை, தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்கத்தின் மாநில சங்க பொருளாளர் கடம்பூர்.ராமசாமி, கடம்பூர் அழகேசன் ஆகியோர் சந்தித்து, பர்கூர் மலைப்பகுதி மற்றும் ஈரோடு மாவட்டத்தில் வாழும் மலையாளி இன மக்களை பழங்குடியினராக அங்கீகரிக்க நடவடிக்கை மேற்கொள்ள வலியுறுத்தினர்.

## தோழர் பி.எஸ்.இராமலிங்கம் தாயார் மறைவு



காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் சி.பி.ஐ. தொகுதிக் குழு துணை செயலாளரும், விவசாய தொழிலாளர் சங்கம் உள்ளிட்ட பல பொறுப்புகளில் உள்ள பி.எஸ். இராமலிங்கம் அவர்களின் தாயார் எஸ். ரங்கநாயகி அம்மாள், (வயது 65) பெருக்கரணை கிராமத்தில் இயற்கை எய்தினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டக் குழு சார்பாக அவர்கள் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பவானியில் ஏஐஒய்எப் உழவர்தின கொடியேற்று விழா

அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் பவானி நகரில் தமிழ் உழவர்தின கொடியேற்று விழா நடைபெற்றது. பவானி நகரில் 8 மையங்களில் நடைபெற்ற நிகழ்வில் நகர தலைவர் பி.முகமது அலி தலைமை வகித்தார். நகர செயலாளர் எஸ்.தாமோதரன் முன் னிலை வகித்தார்.சிபிஐ ஈரோடு வடக்கு மாவட்ட செய்லாளர் டி.ஏ.மாதேஸ்வரன், நகர செயலாளர் ப.மா.பாலமுருகன், மாவட்டக்குழு உறுப்பினர்கள் கே.சந்திரசேகர், எல்.சிவராமன், ஒன்றிய செயலாளர் கே.எம். கோபால், இளைஞர் பெருமன்ற நிர்வாகிகளான மாவட்ட செயலா ளர் எம்.ஆர்.சுரேஷ்குமார், நகர துணை செயலாளர் பி.பிரபாகரன், நகர துணை தலைவர் எம்.பாலசுப்பிரமணியன், நகர பொருளாளர் சி.முனியப்பன், மாவட்டக்குழு உறுப்பினர்கள் பி.கே.ஜீவா, எஸ். ராஜதுரை, உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டு கொடியேற்றினர்.




## சாலையோர வியாபாரிகள் கொடியேற்று விழா

சேலம் மாவட்ட ஏஐடியூசி சாலையோர வியாபார தொழிலாளிகள் சங்கத்தின் திருவள்ளுவர் கே.வி.எஸ். மார்கெட் மற்றும் திருவள்ளுவர் சிலை அபீப் தெரு பழைய புத்தக கடை கோட்டை ஆகிய கிளைகளின் கொடியேற்று பெயர்ப்பலகை திறப்பு விழா மாவட்ட பொது செயலாளர் எம்.ஷாநவாஸ்கான் தலைமையில் நடைபெற்றது.

சங்கத்தின் மாநில செயலாளர் எம்.என்.ராமசந்திரன் கொடியை ஏற்றி வைத்தார்.மாவட்ட தலைவர் ஏ.மோகன் பெயர் பலகையை திறந்து வைத்தார். ஏஐடியூசி மாவட்ட பொது செயலாளர் எம்.முனுசாமி மாவட்ட துணை தலைவர் பி.பரமசிவன் மாவட்ட பொருளாளர் எஸ்.சம்பத் சங்கத்தின் மாவட்ட பொருளாளர் எம்.முகமது மீரா மாவட்ட துணை தலைவர் ஏ.நூர்தின் மாவட்ட செயலாளர்கள் எஸ்.வேல்முருகன் பா.தினேஷ் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினார். கிளை தோழர்கள் கலந்து கொண்டனர்.

## ஆதித்யாவர்தனஸ்ரீ 30வது நினைவு தினம்

தியாகி தோழர் ஆதித்யாவர்தனஸ்ரீ அவர்களின் 30ஆவது நினைவு அஞ்சலி கூட்டம் கிருஷ்ணகிரி மாவட்டம், கெலமங்கலம் அனுசோனை என்ற கிராமத்தில் விவசாய சங்க மாநில துணைத்தலைவர் எம்.இலமையா மற்றும் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் மாநிலச் செயலாளர் க.பாரதி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டக்குழு தோழர்கள், இளைஞர்கள், மாணவர்கள், மாதர் சங்கம் நிர்வாகிகள், தோழர்கள் பங்கேற்றனர்.

பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு ஏக்கருக்கு

# ரூ.30 ஆயிரம் வழங்கக் கோரி விவசாயிகள் சாலை மறியல்

### ஆயிரக்கணக்கானோர் பங்கேற்பு

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் பி.எஸ். மாசிலாமணி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது:

பருவமழை வழக்கத்தைவிட 80 சதம் கூடுதலான நிலையிலும், வளிமண்டல சுழற்சியாலும் பொழிந்த பெருமழையால் பல இடங்களில் வெள்ளமாக பெருக்கெடுத்து மக்களின் அன்றாட வாழ்வு நிலைகளை, குடியிருப்புகளை வேளாண் பயிர்களை பெருமளவு பாதித்தது.

இந்நிலையில் தமிழக முதல்வர் நேரில் வந்து பார்வையிட்டு தமிழக அரசின் சார்பாக நிவாரண அறிவிப்பை வெளியிட்டார். இந்த நிவாரணம் ஏற்பட்ட இழப்பிற்கு ஈடாகாது என தமிழகம் முழுவதும் கடந்த 14 டிசம்பர் அன்று ஆர்ப்பாட்டங்கள் நடத்தி தமிழக முதல்வருக்கு கோரிக்கை மனுக்கள் அனுப்பப்பட்டது.

இந்த நிலையில் தமிழக அரசு மத்திய அரசிடம் கேட்டிருந்த தேசிய பேரிடர் நிதியை இதுவரையிலும் வழங்காத மத்திய அரசை கண்டித்து உடன் வழங்க வலியுறுத்தியும், குறுவை அறுவடை பாதிப்பிற்கு ஏக்கருக்கு ரூ.30,000, இளம் தாளடி மற்றும் சம்பா பாதிப்புற்ற பயிர்களுக்கு ஏக்கருக்கு ரூ. 30,000, மனித உயிரிழப்புக்கு 10 லட்சம், கால்நடைகள் உயிர் இழப்புக்கு உரிய நிவாரணம், வேலை வாய்ப்பு வருமானத்தை இழந்த விவசாய தொழிலாளர் குடும்பங்களுக்கு ரூபாய் பத்தாயிரம் வழங்கிட வலியுறுத்தியும் காவிரி பாசன மாவட்டங்களில் கடந்த 4ஆம் தேதி முதல் பாதிக்கப்பட்ட வட்டாரங்களில் தொடர் சாலை மறியல் போராட்டம் நடத்திட தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் அறிவித்தது. அதனடிப்படையில் தொடர்ந்து மறியல் போராட்டம் வெற்றிகரமாக நடந்தது.

திருவாரூர் மாவட்டத்தில் கோட்டூர், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை, வலங்கைமான், கொரடாச்சேரி, திருவாரூர், மாவூர், கூத்தாநல்லூர் ஆகிய மையங்களில் நடந்தது. நான்காயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் இதில் பங்கு கொண்டனர்.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் திருமருகல், ஏனங்குடி, திருப்புகலூர், நடுக்கடை, கீவளூர், தேவூர், நாகப்பட்டினம், தாணிக்கோட்டகம், தகட்டூர், மருதூர் தெற்கு, கருப்பம்புலம், கீழையூர், தலைஞாயிறு ஆகிய மையங்களில் நடந்தது. இதில் மூவாயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கு கொண்டனர். மயிலாடுதுறை மாவட்டத்தில் சீர்காழி, கொள்ளிடம், செம்பனார்கோவில், குத்தாலம் ஆகிய மையங்களில் நடந்தது இதில் 1000க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

தஞ்சாவூர் வடக்கு மாவட்டத்தில் தாராசுரம், பாபநாசம், அம்மாபேட்டை ஆகிய மையங்களில் நடந்தது. 1000க்கும் மேற்பட்டோர் இதில் பங்கு கொண்டனர்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் ஆகிய மையங்களில் நடந்தது.500க்கும் மேற்பட்டோர் பங்கு கொண்டனர். அனைத்து மையங்களிலும் இப்போராட்டத்தில் பங்கு கொண்டவர்களை காவல்துறை கைது செய்தது. ஒமிக்ரான் தாக்குதல் காரணம் கொண்டு எல்லோரையும் உடன் விடுதலை செய்தது. நாகப்பட்டினம் மற்றும் தஞ்சையில் மட்டும் கைது செய்து திருமண அரங்கில் வைத்து மாலையில் விடுவிக்கப்பட்டனர்.

கடலூரில் 200க்கும் மேற்பட்டோர் பங்கு கொண்ட ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அனைத்து மையங்களிலும் போராட்டத்தை நடத்திட காவல்துறை அனுமதி மறுத்து கடிதம் கொடுத்தது. இருந்தும் மீறி இந்தப் போராட்டம் மிக வெற்றிகரமாக நடத்தப்பட்டது. இதனால் காவல்துறை அனைத்து மையங்களிலும் பங்கு கொண்டவர்கள் மீது வழக்கு போட்டுள்ளது.

## ஏ.ஐ.டி.யூ.சி. உள்ளாட்சித்துறை தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்

அரியலூர் நகராட்சி, ஜெயங்கொண்டம் நகராட்சி, உடையார் பாளையம் பேரூராட்சி மற்றும் கிராம ஊராட்சிகள் உள்ளடங்கிய உள்ளாட்சித்துறையில் பணிபுரியும் நிரந்தர மற்றும் ஒப்பந்த, சுய உதவிக்குழு துப்புரவு தொழிலாளர்கள், மேல்நிலை நீர் தேக்க தொட்டி இயக்குபவர்கள், தூய்மை காவலர்கள் ஆகிய தொழிலாளர்கள் தங்களது பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஏ.ஐ.டி.யூ.சி. உள்ளாட்சித் துறை தொழிலாளர் சங்கம் சார்பாக மாவட்ட தலைநகர் அரியலூரில் அண்ணா சிலை அருகில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. உள்ளாட்சித்துறை ஏஐடியூசி சம்மேளன மாநில செயலாளர் டி. தண்டபாணி தலைமையேற்று சிறப்புரை ஆற்றினார். ஜெயங்கொண்டம் நகராட்சி தம்பி சிவம்,திருமானூர் சிபிஐ செயலாளர் ஆறுமுகம் உட்பட 200க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இதில் கொரோனா முன் களப் பணியாளர்களுக்கு மூன்று மாத கால ஊக் கத்தொகையாக அரசு அறிவித்த ரூ.15,000 உள்ளாட்சித் துறை சுகாதாரத் தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## ஒன்றிய மோடி அரசைக் கண்டித்து பிப்ரவரி 23, 24 - பொது வேலை நிறுத்தம்

### ஈரோடு மாவட்டத்தில் வெற்றிகரமாக்க அனைத்துச் சங்க கூட்டத்தில் முடிவு

அனைத்து தொழிற்சங்கங்களின் ஈரோடு மாவட்ட நிர்வாகிகள் கூட்டம் ஈரோட்டில் சிஐடியு மாவட்ட அலுவலகத்தில் ஏஐடியுசி மாவட்டத் தலைவர் எஸ்.சின்னசாமி தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் சிஐடியு மாவட்டத் தலைவர் எஸ்.சுப்ரமணியன், பொன்.பாரதி, எல்பிஎப் மாவட்டச் செயலாளர் சே.கோபால், செ.தங்கமுத்து, ஜி.ரவிச்சந்திரன், எச்எம்எஸ் மாவட்டத் தலைவர் டி.எம்.குமாரசாமி, ஐஎன்டியுசி மாவட்ட துணைத் தலைவர் கே.அழகேசன், எம்எல்எப் மாவட்ட துணைச் செயலாளர் ஜே.எபினேசர், ஏஐடியுசி மாவட்டக்குழு உறுப்பினர் பி.வீரமுத்து உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பிப்ரவரி 23, 24 தேதிகளில் பொது வேலை நிறுத் தத்தை ஈரோடு மாவட்டத்தில் பெரும் வெற்றி பெறச் செய்வது, தேவையான போது மீண்டும் கூடி திட்டமிடுவது எனவும் தீர்மானம் இயற்றப்பட்டது.

சிபிஐ கோரிக்கையை ஏற்று

## அம்மாப்பேட்டையில் சந்தைக்கு இடம் ஒதுக்கீடு

பாபநாசம் அருகே அம்மாபேட்டை பேரூராட்சி சார்பில் பொங்கல் பண்டிகையின் போது கரும்பு, வாழை, மஞ்சள் விற்பனை செய்வதற்கு சந்தை ஒதுக்குவது வழக்கமான ஒன்றாகும். இந்த வருடம் சந்தை அமைப்பதற்கான எந்த விதமான நடவடிக்கையும் எடுக்காமல் பேரூராட்சி நிர்வாகம் இருந்து வந்தது.

இந்த நிலையில் கரும்பு, வாழை, மஞ்சள் உள்ளிட்டவற்றை விற்பனை செய்ய சந்தை அமைத்து தரக்கோரி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் 10 ந் தேதியன்று அம்மாபேட்டை பேரூராட்சி அலுவலகம் முன்பு விவசாயிகள் கரும்புடன் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவது என்று முடிவு செய்யப்பட்ட நிலையில் அம்மாபேட்டை பேரூராட்சி நிர்வாகம் சார்பில் கரும்பு, வாழை, மஞ்சள் போன்றவற்றை விற்பனை செய்திட ஏதுவாக சந்தை அமைக்கும் பணியை மேற் கொண்டது.

இப் பணியை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றியச் செயலர் ஆர்.செந்தில்குமார், நகரச் செயலாளர் கே. ராஜாராமன், தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் ஒன்றியச் செயலாளர் எம்.வெங்கடேஷ், ஒன்றிய நிர்வாகி எஸ்.திருநாவுக்கரசு உள்ளிட்டவர்கள் பார்வையிட்டனர்.

## வே.பழனிசாமியின் பாத்தாம் ஆண்டு நினைவு அஞ்சலி

சேலம் மாவட்டம் நங்கவள்ளி அருகே தாசகாப்பட்டியில் மறைந்த கம்யூனிஸ்ட் மூத்த தலைவர் வே.பழனிசாமியின் பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி கூட்டம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றிய செயலாளர் பழ.ஜீவானந்தம் முன்னிலையில் நடைபெற்றது..

இந்த நினைவேந்தல் கூட்டத்திற்கு கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் மோகன், மாநில குழு உறுப்பினர்கள் ராஜேந்திரன், பரமசிவம் மற்றும் தங்கவேல், கிருஷ்ணன் உள்ளிட்டோர் மாலை அணிவித்து மரியாதை செய்து நினைவு அஞ்சலி செலுத்தினர்.

# கிருஷ்ணகிரி மருத்துவக் கல்லூரி திறப்பு விழா

## டி.ராமச்சந்திரன் எம்.எல்.ஏ. பங்கேற்பு




கிருஷ்ணகிரி மாவட்டம், போலுப்பள்ளி கிராமத்தில், காணொளி மூலம் பாரத பிரதமர் மற்றும் தமிழக முதலமைச்சர் ஆகியோரால் திறந்து வைக்கப்பட்ட மருத்துவ கல்லூரி திறப்பு விழாவில், கைத்தறி மற்றும் துணிநூல் அமைச்சர் அவர்களுடன், தளி சட்டமன்ற உறுப்பினர் டி.இராமச்சந்திரன் கலந்து கொண்டு குத்து விளக்கு ஏற்றி வைத்தார்.

# கோடை குறுவை நெல் சாகுபடி செய்வதில்லை

## தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் பாராட்டு

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் பி.எஸ். மாசிலாமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் வட்டம், அய்யம் பேட்டை, சோனாப்பேட்டை, புள்ளவராயன்குடிகாடு, செட்டிசத்திரம்ஆகிய கிராம விவசாயிகள் கூடி எடுத்துள்ள முடிவு என்பது வரவேற்கத்தக்கது.

கோடைகாலத்தில் நிலத்தடி நீரை உறிஞ்சி மூன்றாவது போகமாக சாகுபடி செய்து வருகிற குறுவை நெல் பயிர் சாகுபடியை நடப்பாண்டு முதல் செய்வதில்லை என்ற முடிவு எடுத்துள்ளதை தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பில், சங்கத்தின் பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி, மாவட்ட பொருளாளர் கே. ராவணன், ஒன்றிய தலைவர் கே. பாரதிமோகன், செயலாளர் எஸ்.ஏ. டேவிட் ஆகியோர்களுடன் நேரடியாக சென்று அந்த விவசாய சங்க பொறுப்பாளர்களுக்கு சால்வைகளை அணிவித்து பாராட்டினார்.

ஏனெனில் இந்த செயல் அவர்களுக்கான நலன் மட்டுமல்ல சமூகத்திற்கான தேவையும் அவசியமும் ஆகும்.

கோடைக்கால குருவை சாகுபடி என்பது பிப்ரவரி மாதம் முதல் மே மாதம் வரை நடைபெறும். இக்காலத்தில் ஆற்று நீர்பாசனம் இல்லாத நிலையில் நிலத்தடி நீரை மட்டுமே எடுத்து சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இந்த சாகுபடிக்கு நிலத்தடி நீரை அளவுக்கு அதிகமாக எடுத்து வருவதால் நிலத்தடிநீர் மட்டம் மேலும் மேலும் இறங்கி வரும் நிலையில் மேலும் கூடுதல் ஆழத்தில் நீர்மூழ்கி மோட்டார்களை பயன்படுத்தி தண்ணீர் எடுக்கப்பட்டு வருவதால் நில நீர் உப்பு நீராகவும், கேடு விளைவிக்கும் தாதுக்களை கொண்டதாகவும் மாறி வருகிறது. இதனால் குடிப்பதற்கான குடிநீரும் பல இடங்களில் தட்டுப்பாடு ஏற்பட்டு வருகிறது.

இந்த கோடை குருவை அறுவடைக்கு பின் வழக்கமான குறுவை சாகுபடி செய்து அறுவடை செய்யும் காலத்தில் பொழியும் தென்மேற்கு பருவ மழையால் அறுவடையாகும் நெல் ஈரப்பதம் கூடுதலாகிறது. இதனால் விவசாயிகளுக்கும், கொள்முதல் செய்யும் அரசுக்கும் இழப்பை ஏற்படுத்துகிறது. மூன்று போகம் நெல் சாகுபடி செய்கிறபோது. தொடர்ந்து தண்ணீர் வயல்களில் தேங்கி இருப்பதால் மண் வளம் குன்றி விடுகிறது. நுண்ணூட்ட பற்றாக்குறை ஏற்படுகிறது. இந்த சாகுபடிக்கான மின்சாரம் கூடுதல் பயன்பாட்டால் அரசுக்கும் இழப்பு ஏற்படுகிறது. எந்த ஒரு சாகுபடிக்கும் இடையே இடைவெளி என்பது அவசியமாகும். இதற்கு வாய்ப்பு இல்லாது தொடர் நெல் சாகுபடி என்பது எதிர்கால பல்வேறு சூழலுக்கு பொருத்தமானதல்ல. எனவே இது தவிர்க்க முடிவு எடுத்ததை வரவேற்பதுடன், மற்ற பகுதிகளிலும் இதை பின்பற்றிட வேண்டிய அவசியம் உள்ளது.

தமிழ்நாடு அரசும் மாற்றுப் பயிர் சாகுபடிக்கான திட்டமிடலை வேகப்படுத்தி வரும் சூழலில், முன்மாதிரியாக செயல்பட முடிவு செய்துள்ள இந்த விவசாயிகளை தளரவிடாது ஊக்கப்படுத்திட இந்த விவசாயிகள் விரும்பும் தீவனச் சோளம் விதைகளை வேளாண்துறையும், மாவட்ட நிர்வாகமும் மானியத்தில் கொடுத்து மறு சாகுபடிக்கு பயன்படுத்தி உழவு செய்யும் வாய்ப்பளிக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

# தோழர் அண்ணாமலை மறைவு கே.சுப்பராயன் எம்.பி. அஞ்சலி

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தோழர்களில் ஒருவரான தோழர் மாவோ அண்ணாமலை (வயது 90) கடந்த 6 ம் தேதி இயற்கை எய்தினார்.

தகவலறிந்து கோவை வந்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணை செயலாளர் கே.சுப்பராயன் எம்.பி. அண்ணாமலையின் உருவப் படத்திற்கு அஞ்சலி செலுத்தினார். அவருடன் கோவை மாவட்ட செயலாளர் வி.எஸ். சுந்தரம், மாவட்ட துணை செயலாளர் ஆர்.தேவராஜ், மத்திய மண்டல செயலாளர் கே. இரவீந்திரன் ஆகியோரும் அஞ்சலி செலுத்தினர். முன்னதாக கட்சியின் மாநில பொருளாளர் எம். ஆறுமுகம் உள்ளிட்ட தோழர்கள் அண்ணாமலையின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.



தோழர் அண்ணாமலை கோவையில் மில் தொழிலாளியாக தனது வாழ்க்கையைத் துவக்கினார், சாரதா மில், ராஜலட்சுமி மில் ஆகிய மில்களில் ஏ.ஐ.டி.யூ.சி. சங்க கிளை செயலாளராக இருந்துள்ளார். கோவை மாநகரம் ராமநாதபுரம் மருதூர் கட்சி கிளை செயலாளராக நீண்ட காலம் பணியாற்றியுள்ளார்.

# குறுஞ்சாங்குளம் தலித் மக்கள் பொங்கல் விளையாட்டுக்கு தடை

## தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தினரை தடுத்த போலீசார்

தென்காசி மாவட்டம், குருவிகுளம் ஒன்றியம், குறுஞ்சாகுளம் கிராமத்தில் தலித் மக்கள் பொங்கல் விளையாட்டு போட்டிகள் நடத்த காவல்துறை தடை விதித்துள்ளது. காலங்காலமாக நடைபெறும் தலித் மக்கள் விளையாட்டு திடல் உயர் சாதியினர் உரிமை கொண்டாடியதால் போலீசார் 144 தடை உத்திரவு பிறப்பித்துள்ளனர்.

ஏற்கனவே இத் திடலில் சாமிசிலை வைப்பது சம்பந்தமாக 1992 மார்ச் மாதம் 4 தலித்துகள் படுகொலை செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. தகவலறிந்து தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் சார்பில் மாநில துணை தலைவர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, விருதுநகர் மாவட்ட செயலாளர் எஸ்.பழனிக்குமார், தென் மண்டல செயலாளர் சுகுமாரன், வழக்கறிஞர் லி.பகத்சிங் ஆகியோர் நேரில் சென்று விசாரிக்க சென்றனர். குறுஞ்சாங்குளம் செல்லும் வழியில் காவல்துறை தடுத்து நிறுத்தி 144 தடை உத்தரவு உள்ளதால் கிராமத்திற்குள் செல்ல கூடாது எனவும், விரைவில் விளையாட்டு போட்டிகள் நடத்த எற்பாடு செய்வதாகவும், நான்கு நாட்களுக்குள் நிலைமை சரியான பிறகு வர வேண்டும் என கூறினர். காவல்துறை துணை கண்காணிப்பாளர், தலைவர் இரா.நல்லகண்ணு அவர்களிடமும் பொதுச்செயலாளர் மு.வீரபாண்டியன் அவர்களிடமும் கைபேசியில் பேசி தற்போது அமைதி நிலவுவதாகவும், விரைவில் விளையாட்டு போட்டிகளை நடத்த திட்டமிடுவதாகவும் கூறினார்.

அப்பொழுது தகவலறிந்து குறுஞ்சாங்குளம் ஜேக்கப், வழக்கறிஞர் விவேகானந்தன் ஆகியோர் நேரில் வந்து தற்போதுள்ள நிலைமைகளை விளக்கிக் கூறினர்.

அதனடிப்படையில் காவல் துறையின் வேண்டுகோளை ஏற்று குழுவினர் திரும்பினர்.

### ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் சார்பில்

# கொரோனா விழிப்புணர்வு முகாம்

தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம், உளுந்தூர் பேட்டை வட்ட மருந்து விற்பனையாளர் சங்கம், தமிழ்தேச தொழிலாளர் சங்கம், கலாம் பசுமை இயக்கம் மற்றும் அட்டோ, கார் டாட்டா ஏசி வாகன தொழிலாளர் சார்பில் கொரோனா விழிப்புணர்வு நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு சிபிஐ ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் மாவட்ட செயலாளர் மா. வெங்கடேசன் தலைமை வகித்தார்,

திருநாவலூர் ஊராட்சி ஒன்றியம் பெருந்தலைவர் சாந்தி இளங்கோவன், காவல் ஆய்வாளர் சீனுவாசன், பெற்றோர் ஆசிரியர் கழகம் தலைவர் ப.பத்பநாபன், அரசு வழக்கறிஞர் சி.ஆர்.வெங்கடேசன், செம்மனந்தல், மேட்டத்தூர், சேந்தமங்கலம் ஆகிய ஊராட்சி மன்ற தலைவர்கள் கலந்து கொண்டனர்.

# ஏஐடியூசி தூய்மைப் பணியாளர் சங்கம் துவக்கம்

ஏஐடியூசி ஊராட்சி தூய்மைப் பணியாளர் பாதுகாப்பு சங்கம் நாச்சிகுறிச்சி கிளை அமைப்பு கூட்டம் சி.ஜெயபால் தலைமையில் சோமரசம்பேட்டையில் உள்ள ஏஐடியுசி தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் ஏஐடியுசி கட்டட தொழிலாளர் சங்க தமிழ்நாடு மாநில குழு உறுப்பினர் எம்.ஆர்.முருகன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தேர்வு நடைபெற்றது. கவுரவத் தலைவராக எம்.ஆர். முருகன், தலைவராக சி.ஜெயபால், துணைத் தலைவராக ஆர்.சக்திபாய், செயலாளராக பி.வளர்மதி, துணைச் செயலாளராக எஸ்.முத்தழகு, பொருளாளராக எஸ்.ராணி ஆகியோர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

தூய்மை பணியாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியமாக ரூ.18 ஆயிரம் உயர்த்தி வழங்க வேண்டும், தமிழக அரசு கொரனோ காலத்தில் அறிவிக்கப்பட்ட நிவாரணம் ரூ.15,000 த்தை வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# பவானி ரேஷன் கடையில் பொங்கல் பரிசு தொகுப்பு

திருப்பூர் நாடாளுமன்ற தொகுதி உறுப்பினர் கே.சுப்பராயனின் தொகுதி வளர்ச்சி நிதியில் கட்டப்பட்ட நியாயவிலை கடை பவானி பழனிபுரம் பகுதியில் செயல்பட்டு வருகிறது. இந்த நியாயவிலைக் கடையில், தமிழ்நாடு அரசின் பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஈரோடு வடக்கு மாவட்ட செயலாளர் டி.ஏ.மாதேஸ்வரன், நகர செயலாளர் ப.மா. பாலமுருகன், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் எஸ்.கந்தசாமி, நகரக்குழு உறுப்பினர் இ.சண்முகசுந்தரம் ,திமுக 13 வது வார்டு நிர்வாகி சரவணன் ஆகியோர் பொங்கல் தொகுப்பை பயனாளிகளுக்கு வழங்கி துவக்கி வைத்தனர்.

# ஆண்டிபட்டி நகர மாநாடு

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆண்டிபட்டி நகர மாநாடு தா.பாண்டியன் நினைவு அரங்கத்தில் பா.அண்ணாமலை தலைமையில் நடைபெற்றது. ரமணி கட்சி கொடியினை ஏற்றினார். மாநாட்டினை தொடங்கி வைத்து மாவட்ட செயலாளர் கி.பெருமாள் உரையாற்றினார். மாவட்ட செயற்குழு உறுப்பினர் வே.பரமேஸ்வரன், ஒன்றிய செயலாளர் பிச்சைமணி மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். மாநாட்டில் நகரச் செயலாளராக க.முனீஸ்வரன், துணை செயலாளராக அண்ணாமலை, பொருளாளராக அன்பு செல்வம் ஆகியோர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

# கட்சி கோரிக்கை நிறைவேற்றம்

நாகர்கோவில் மாநகரத்திற்கு உட்பட்ட சாலை சந்திப்புகளில் நிறுவப்பட்டுள்ள சூரிய ஒளியில் இயங்கும் போக்குவரத்து சிக்னல் இரும்பு கம்பங்களின் கீழ்பகுதி துருப்பிடித்து கீழே விழக்கூடிய நிலையில் உள்ளது. குறிப்பாக மீனாட்சிபுரம் தளவாய் தெரு சந்திப்பில் நிறுவப்பட்டுள்ள சூரிய ஒளியில் இயங்கும் இரும்பு கம்பம்65% துருப்பிடித்து அபாயகரமாக உள்ளது.

எந்த நேரத்திலும் அவை கீழே விழுந்து மக்களுக்கு அபாயம் ஏற்படும் நிலையில் உள்ளது என்ற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கோரிக்கையை பரிசீலித்து நடவடிக்கை எடுத்த அலுவலர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். இவ்வாறு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநகரச் செயலாளர் ஆர்.இசக்கிமுத்து தெரிவித்துள்ளார்.

# சாலையை சீர்படுத்தக் கோரி மனு: விரைந்து சீர்படுத்தப்பட்ட சாலை

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், நல்லூர் ஊராட்சிக்கு உட்பட்ட எம்.ஜி.ஆர்.நகர், வி.ஜி.தெரு, வி.பி.சிங் நகர், நேரு தெரு, வீரபாண்டி நகர், சிவந்தி ஆதித்தனார் நகர் பகுதிகளில் மழை காலங்களில் சாலைகளில் தேங்கிய மழைநீரை இதுவரை அகற்றவில்லை. இதனால் பொதுமக்கள் சாலையில் ஓடும் சாக்கடையில்தான் நடந்து செல்லும் அவல நிலை உள்ளது.

எனவே சாலையை சீர்படுத்த வேண்டும் எனக் கோரி சோழவரம் வட்டார வளர்ச்சி அலுவலரை சந்தித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திருவள்ளூர் மாவட்டச் செயலாளர் கே.கஜேந்திரன், கட்சி கிளை செயலாளர் கே.போஸ், கே.குமரேசன், விவசாய தொழிலாளர் சங்கத் தலைவர் எஸ்.கருப்பசாமி, ஆர்.பஞ்சநாதன் ஆகியோர் மனு அளித்தனர். சோழவரம் வட்டார வளர்ச்சி அலுவலரின் உத்தரவின் பேரில் சாலை உடனடியாக சீர் செய்யப்பட்டது.

# செருப்புகளின் அதிகாரம் அரசியல்

அரசன் வீட்டுக் கோழிமுட்டை குடியானவன் வீட்டு அம்மிகல்லையும் உடைக்கும் என்பார்கள். அதிகாரத்திற்கு அவ்வளவு வலிமை உள்ளது. சிவன் கழுத்தில் இருக்கிற போது பாம்புகள் கூட கருடனை பார்த்து சௌக்கியமா? என்று கேட்கலாம். அதிகாரம் இருந்தால் செருப்பும் சிம்மாசனம் ஏறும். செருப்புகளின் அதிகாரம் அரசியல் என்கிற இந்த நூலை எஸ். கணேசன் எழுதி இருக்கிறார். சாதிய ஏற்றத்தாழ்வுகள் ஆழமாக உள்ள தமிழ் சமூகத்தில் புழங்கு பொருட்கள் மீதான தடைகளை மேல்சாதியினர் உருவாக்கினார் அவற்றுள் காலணியும் ஒன்று. தோல் பொருட்களை பார்ப்பனர்கள் தீட்டாக பார்த்தனர். ஏனென்றால் மாட்டு தோளிலிருந்து செருப்பு தைப்பதால் தீட்டாக பார்த்தனர். சில பிராமண ஆன்மீகவாதிகள் மரக்கட்டையால் ஆன செருப்புகளை பயன்படுத்தியுள்ளனர். காலணி அணிவது மனிதனுக்கு பாதுகாப்பானது. அப்படியிருந்தும் காலணி மீது இவ்வளவு வெறுப்பு




ராமாயணத்தில் ராமன் காட்டுக்குச் சென்ற போது அவன் செருப்பு சிம்மாசனத்தில் வீற்றிருந்த கதையை கேள்விப்படுகிறோம். இப்படித்தான் செருப்புகளின் அதிகார அரசியல் ஏற்படுகிறது. ஏழைகளிடத்திலே எகிறுகின்றவர்கள்.பணக்காரர்களிடத்தில் பம்முகிறார்கள். சாதிய ஏற்றத்தாழ்வுகள் இதிலிருந்து ஆரம்பமாகிறது. 1939 ஆம் ஆண்டு மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் தான் முதன்முதலாக ஆலயப் பிரவேசம் முழுமையாக நடைபெற்றது. இந்தப் போராட்டம் நடைபெற காரணம் நாராயணகுரு தான். பல புரட்சிகரமான மாற்றங்களை செய்தவர் நாராயணகுரு. அதைப்போன்றே தந்தைப்பெரியார், கே. பி. ஜானகி அம்மாள், வைத்தியநாதய்யர், ப.ஜீவானந்தம், பி.இராமமூர்த்தி, என். எம். ஆர். சுப்பராமன், மாஜினி, ஐ மாயாண்டி பாரதி போன்றவர்கள் நடத்திய போராட்டங்கள் எல்லாம் மகத்தான போராட்டங்கள். உழைப்பவனை தாழ்த்தப் பட்டவன் என்கிறார்கள். உழைக்காத பிராமணனை உயர்ந்தவன் என்கிறார்கள் இது என்னய்யா நியாயம் என்கிற கேள்வியை எழுப்பியுள்ளார் நூலாசிரியர். உழைக்காதவனக்கு உண்பதற்கு உரிமையில்லை. அப்படி இருக்க இவன் யார் ஜாதிகளைப் பிரிக்க? செருப்பு அணியக்கூட தடை விதிக்கும் ஒரு நாடு என்றால் அது இந்தியா தான். வேறு எந்த நாட்டிலும் இந்த கொடுமையெல்லாம் கிடையாது. உழைப்பவர்கள் இல்லையென்றால் இந்த உலகம் இயங்காது என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று இந்நூலில் வலியுறுத்துகிறார். இது சிறு நூல் என்றாலும் சிந்தனையைத் தூண்டும் நூல். அனைவரும் அவசியம் வாங்கிப் படிக்கவும் **– சமரன்**

**நூலாசிரியர் : எஸ். கணேசன்**
**வெளியீடு : சண்முகம் பதிப்பகம், 4,முருகன் காம்பௌண்ட், சோழன் தெரு, மருதுபாண்டி நகர், மதுரை–625002, பேச:9786389946**
**பக்கங்கள் : 48 விலை : ரூ.20**

நூல் நயம்

# உழைக்கும் மக்களின் போர்முரசு எஸ். ஜி. முருகையன்

தஞ்சை தரணியில் உழைக்கும் மக்களையும், ஒடுக்கப்பட்ட மக்களையும் அநீதிக்கு எதிராக ஒன்று திரட்டிய மகத்தான தலைவர் தலைவர் எஸ்.ஜி.முருகையன் அவர்களைப்பற்றி அ.பாஸ்கர் அவர்கள் தொகுத்துள்ள நூல் தான், உழைக்கும் மக்களின் போர்முரசு எஸ் ஜி முருகையன் எனும் இந்நூல். ஊராட்சி மன்ற தலைவராக பத்தாண்டுகள், ஒன்றிய பெருந்தலைவராக பத்தாண்டுகள், நாடாளுமன்ற உறுப்பினராக இரண்டு ஆண்டுகள் என பதவி வகித்த போதும் இவருக்கென்று ஒரு வங்கிகணக்கு கூட இல்லை என்பது இன்றைய அரசியல் உலகில் மிகப்பெரும் ஆச்சரியம் ஆகும். உள்ளாட்சி பதவிகளில் இட ஒதுக்கீடு இல்லாத சமயத்தில் கோட்டூர் ஒன்றிய பெருந்தலைவராக ஒரு பட்டியலினத்தவரை தேர்ந்தெடுத்த பெருமை கம்யூனிஸ்டுகளை சாரும், அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்தான் எஸ் ஜி முருகையன் அவர்கள். இவர் ஒன்றிய பெருந்தலைவராக இருந்தபோது மன்னார்குடியில் இருந்து முத்துப்பேட்டை வரை பாமணி ஆற்றங்கரை ஓரத்தில் இருந்த 48 கிராம மக்களுக்கு பயன்படும் வகையில் மக்களைத் திரட்டி சிரமதான பணியின் மூலமாக சாலை அமைத்துக் கொடுத்தார் என்பது ஒரு வரலாற்றுச் செய்தி.





மாவட்ட ஆட்சியர் வேத நாராயணன் அவர்கள் "தங்களை குறைத்து மதிப்பிட்டு விட்டேன். தாங்கள் ஒரு மிகச் சிறந்த செயல் வீரர் என்பதை நிலைநாட்டி விட்டீர்கள்" என்று கூறியிருக்கிறார். ஆளைப் பார்த்து எடை போடும் உலகத்தில் தன் சாதனையால் தனது தகுதியை நிரூபித்திருக்கிறார் எஸ். ஜி. முருகையன் அவர்கள். இவர் நாகை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த போது, அதுவரை இயங்காமல் இருந்த நாகப்பட்டினம் துறைமுகத்தைப் இயங்க வைத்து அதன் மூலம் இலங்கை, சிங்கப்பூர், மலேசியா,மியான்மர் உள்ளிட்ட நாடுகளுக்கு கப்பல் சேவை செயல்பட வழிகாட்டியுள்ளார். தஞ்சையில் உழைக்கும் மக்களை அணி திரட்டிய பி.சீனிவாசராவ், சிவராமன்,வாட்டாக்குடி இரணியன், களப்பால் குப்பு,அம்பலப்பட்டு ஆறுமுகம், மணலூர் மணியம்மை, ஏம்.எம் கோபு, எம்.காத்தமுத்து, கோட்டூர் ராசு, மீனாட்சி சுந்தரம்மால் போன்ற தியாகிகள் வரிசையில் வைத்து என்றும் நினைவில் போற்றக்கூடிய மாவீரர் இவர். நாளும் பொழுதும் மக்களுக்காக உழைத்த அந்த நல்லவரை ஒரு நச்சு அரவம் நள்ளிரவில் தீண்டி விட்டது. ஆம்! மக்கள் தலைவனை ஒரு மாபாவி கொன்றுவிட்டான். குமுறிய உள்ளத்தோடு கட்சித் தலைவர்களும், தோழர்களும் பேசியதை, எழுதியதை தொகுத்து உழைக்கும் மக்களின் போர்முரசு எஸ். ஜி. முருகையன் என்கிற இந்த நூலை கொண்டு வந்திருக்கிறார் அ. பாஸ்கர். இந்நூலை அழகுற அச்சிட்டு நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் வெளியிட்டுள்ளது. இதனை அனைவரும் அவசியம் வாங்கிப் படிக்க வேண்டும். **– இன்சுவை பாரதி**

**நூலாசிரியர் : அ. பாஸ்கர்**
**வெளியீடு : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் நிறுவனம் 41b, சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை-50, போன்: 044 26251968**
**பக்கங்கள் : 108 விலை : ரூ.100**

சுழலும் உலகம்

செய்தித்தொகுப்பு: அருண் அசோகன்

# பிரேசில் அதிபர் தேர்தலில்



## இடதுசாரி வேட்பாளர் லூலா டிசில்வாவுக்கு வெற்றி வாய்ப்பு அதிகம்

### கருத்துக்கணிப்பில் தகவல்

இந்த ஆண்டு அக்டோபர் மாதம் 2 ஆம் நாள் பிரேசில் நாட்டில் அதிபர் தேர்தல் நடைபெற உள்ளது. இதையொட்டி 'குவஸ்ட் அட்வைசரி' என்ற அமைப்பு நடத்திய கருத்துக் கணிப்பு முடிவுகள் கடந்த 12 ஆம் நாள் வெளியிடப்பட்டது. அந்நாட்டின் முன்னாள் அதிபரும், தொழிலாளர் கட்சியைச் சார்ந்த லூலா டிசில்வா 45 சதவிகித வாக்குகளைப் பெறுவார் என்று இந்தக் கருத்துக்கணிப்பில் கூறப்பட்டுள்ளது. அதிபர் தேர்தலில் அவருக்கு கடும் போட்டியை உண்டாக்கக் கூடியவராகக் கருதப்படும் தற்போதைய அதிபர் போல்சோனரோ 23 சதவிகித வாக்குகளைப் பெறுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இரண்டாம் சுற்று தேர்தல் நடைபெறும் பட்சத்தில், லூலா டிசில்வா 50 சதவிகிதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று அதிபராகும் வாய்ப்பு அதிகம் உள்ளது என இந்தக் கருத்துக்கணிப்பு தெரிவிக்கிறது.

# அணு ஆயுதப் போர் வேண்டாம், ஆயுதப் போட்டி வேண்டாம்

## ஐ.நா. பாதுகாப்பு சபையின் நிரந்தர உறுப்பு நாடுகள் கூட்டறிக்கை

பன்நெடுங்காலத்திற்கு முன் அணிசேரா நாடுகளும், கம்யூனிஸ்ட் நாடுகளும் அணு ஆயுதப் போர் மற்றும் ஆயுதப் போட்டிக்கு எதிராகக் குரல் எழுப்பி வந்தார்கள் என்பதை அனைவரும் அறிவர்.

அண்மையில், ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் நிரந்தர உறுப்பு நாடுகள் உள்ளிட்ட சில வல்லரசு நாடுகள் அணு ஆயுதப் போர் மற்றும் ஆயுதப் போட்டிக்கு எதிராகவும், அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவது கூடாது என்ற நோக்கத்திற்காகவும் ஒன்று திரண்டன. இது ஒரு வரவேற்கத்தக்க நடவடிக்கை ஆகும்.

முதல் முறையாக, சீனா, பிரான்ஸ், ரஷ்யா, அமெரிக்கா மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகள் இணைந்து ஜனவரி 3 ஆம் நாள் அன்று, அணு ஆயுதப் போர் கூடாது என்றும், ஆயுதப் போட்டி கூடாது என்றும், அணு ஆயுதக் கருவிகளைப் பயன் படுத்துவதில்லை என்று கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டன.நாடுகளுக்கிடையே அணு ஆயுதப் போரைத் தவிர்ப்பதும், அது போன்ற இராணுவ அபாயங்களைக் குறைப்பதும் தங்களின் பிரதான பொறுப்பு என்று பிரகடனப்படுத்தும் ஐந்து நாட்டுத் தலைவர்களும், அத்தகையதொரு போரில் எவரும் வெற்றிபெற முடியாது என்பதை தாங்கள் உறுதிபட நம்புவதோடு, அத்தகையதொரு போர் ஒருபோதும் நடைபெறக் கூடாது என்று அந்தக் கூட்டறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

அணு ஆயுதப் பிரயோகம் மிகக் கொடிய விளைவுகளை உண்டாக்கக்கூடிய ஆற்றல் உடையது என்பதால், அவற்றின் இருப்பு தொடரும் வரையிலும், அவை பாதுகாப்பு நோக்கங்களுக்காக மட்டுமே பயன்பட வேண்டும்.

இதுபோன்ற ஆயுதங்களின் பரவல் மேலும் அதிகரிக்காமல் தடுக்கப்பட வேண்டும் என்பதில் தாங்கள் உறுதியான நம்பிக்கைக் கொண்டிருப்பதாக ஐ.நா. பாதுகாப்பு சபையின் நிரந்தர உறுப்பு நாடுகளாக உள்ள இந்த ஐந்து நாடுகளும் கூறியுள்ளன.

அணு ஆயுத அச்சுறுத்தல் பற்றி விரிவாக ஆலோசிக்க வேண்டியதின் முக்கியத்துவம், அணு ஆயுதப் பரவல் தடுப்பு, ஆயுதக் கட்டுப்பாடு மற்றும் ஆயுதங்கள் அழிப்பு தொடர்பான இருதரப்பு மற்றும் சர்வதேச அளவிலான ஒப்பந்தங்கள் மற்றும் உறுதிமொழிகளை நிறைவேற்றுவது ஆகியவை குறித்து அந்த அறிக்கையில் மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அனைத்து நாடுகளுக்கும் நிலைத்த பாதுகாப்பை உறுதிப்படுத்தக்கூடிய அணு ஆயுதமற்ற உலகம் என்னும் இறுதி இலட்சியத்தை அடைவதற்கான ஒரு உகந்த சூழலை உருவாக்கிட அனைத்து நாடுகளுடன் இணைந்து பணியாற்றுவதற்கான விருப்பத்தை ஐந்து நாடுகளும் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இராணுவ மோதல்களைத் தவிர்க்கவும், ஸ்த்திரத் தன்மையை வலுப்படுத்தவும், பரஸ்பர புரிதல் மற்றும் நம்பிக்கையை அதிகப்படுத்துவதற்குமான இருதரப்பு மற்றும் சர்வதேச மட்டத்திலான அணுகுமுறையைத் தொடர்ந்திட வேண்டும் என்ற நோக்கத்தை அணு ஆயுதங்களைக் கொண்டுள்ள ஐந்து நாடுகளும் தெரிவித்துள்ளன.

ஒவ்வொரு நாட்டின் பாதுகாப்பு நலன்கள் மற்றும் பிரச்சனைகள் குறித்து பரஸ்பரம் புரிந்து கொண்டு, மதிப்பளித்து, ஆக்கப்பூர்வமான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள இந்நாடுகள் உறுதிபூண்டுள்ளன என்று கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி நிகழ்வில்

# அமெரிக்க அரசியல்!

நடப்பு ஆண்டின் குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் (பீச்சிங் 2022 ) சீனாவில் நடைபெறவுள்ள நிலையில், மனித உரிமைகள் சார்ந்த பிரச்சனைகள் என்ற பெயரில் இந்த விளையாட்டுப் போட்டிகளை அரசியல் ரீதியாக புறக் கணிக்கப் போவதாக அமெரிக்கா கடந்த மாதம் அறிவித்தது.

அமெரிக்காவின் இந்த நகர்வு முற்றிலும் அரசியல் உள்நோக்கம் கொண்டதாகும். விளை யாட்டு வீரர்களின் வருங்காலத்தைப் பலியிட்டு, அதன் மூலமாக, குறுகிய சுயலாபத்தை ஈட்டிக் கொள்வதற்காக சீனா மீது அடிப்படை ஆதாரமற்ற குற்றச்சாட்டை அமெரிக்கா சுமத்தியுள்ளது. இது போன்ற சூழ்ச்சிகள் உலகம் முழுவதிலும் உள்ள விளையாட்டு வீரர்கள், ரசிகர்கள் மற்றும் ஆர்வலர்களின் பொதுவான விருப்பங்களுக்கு எதிரானவை ஆகும். ஒலிம்பிக் சாசனத்தின் உன்னதமான இலட்சியத்தின் மீது தொடுக்கப்பட்ட தாக்குதல் ஆகும். 2015 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஒரு பரந்துபட்ட பிரதிநிதித்துவ வாக்கெடுப்பு மூலமாக, சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி 2022 ஆம் ஆண்டு ஒலிம்பிக் விளையாட்டுப் போட் டிகளை நடத்த பீச்சிங் நகரைத் தெரிவு செய்தது.

எவ்வித பாகுபாடுகளும் இன்றி நடைபெறும் விளையாட்டுப் போட்டிகள் மூலமாக ஒரு சிறந்த உலகை உருவாக்கப் பங்களிப்பு செய்திடல் வேண்டும் என்பதே ஒலிம்பிக் விளையாட்டு இயக்கத்தின் நோக்கம் ஆகும். முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு உலகம் மிகப்பெரும் சவால்களைச் சந்தித்து வரும் இந்தச் சூழலில், விளையாட்டுப் போட்டிகள் மூலம் சமாதான சகவாழ்வை முன்னிறுத்தும் ஒலிம்பிக் இயக்க நோக்கத்திலும் நஞ்சைக் கலக்கும் அமெரிக்க அரசியல் முயற்சிகள் கண்டனத்துக்குரியதாக இருக்கிறது.

கலை இலக்கியப் பூங்கா



எஸ்.காசிவிஸ்வநாதன்

# ஜீவாவும் இலக்கியமும்



**பாரதிக்குப் பின் இலக்கிய உலகம் அண்ணாந்து பார்த்தது ஜீவானந்தத்தை தான். பொது வுடமைவாதியான ஜீவா தமிழ் இலக்கிய உலகில் முத்திரை பதித்தார்.**

56 ஆண்டுகளே வாழ்ந்த ஜீவா 1907 ம் ஆண்டு பிறந் தார். மானுட சிந்தனை கண்ட உயர் சித்தாந்தமான மார்க் சிய அறிவியலை ஏற்றுக்கொண்டு கடந்து வந்த பாதைகள் மிகுந்த கவனத்திற்குரியது.

சொரிமுத்து என்ற இயற்பெயர் பெற்ற ஜீவானந்தம் தனித்தமிழ் இயக்க காலத்தில் உயிர்இன்பன் என பெயரை மாற்றிக்கொண்டார். இளம் வயதிலேயே பொதுமைக் கருத் துகள் கொண்டவராக இருந்ததால் ஜாதி எதிர்ப்பு போராட் டம் நடத்தினார். இது தன்னலமற்ற போராட்டத்திற்கு அஸ்தி வாரமாக அமைந்தது.

தாழ்த்தப்பட்ட சிறுவர்களுக்கு பள்ளிகள் நடத்துதல் ‘உண்மை விளக்க நிலையம்’, ‘காந்தியடிகளால் பாராட்டப் படுவதல்’ இந்திய தேசிய காங்கிரஸ், சுயமரியாதை இயக்கம், பொதுவுடைமை இயக்கம் எனப் பல பரிணாமங்களை கண்டவர்.

மார்க்சியம் என்பது பேரறிவு கருவூலம். தேங்கி நிற் கும் குட்டை இல்லை. பல்வேறு கருத்து முதல் வாதம், ஆன்மீக வாத கருத்துக்களை எல்லாம் வென்று மனித சமுதாயம் தோன்றிய காலம் தொட்டு இன்று வரை வரலாற்றை படைத்த சாதாரண ஏழை எளிய மக்களை பற்றிய உண்மை வரலாற்றைக் கூறுவது ஆகும்.

*“எனக்கு சைவ, வைணவ மடங்களுடன் தொடர்பு உண்டு. மதங்களை மதிப்பவன். ஆனால் அவை கற்பிக் கும் குருட்டு நம்பிக்கைகளை, மடமைகளை பகுத்தறிவு கண்கொண்டு, மார்க்சிய நெறி கொண்டு மறுப்பவன். மத இலக்கியங்களைப் படித்தால் அல்லாது மறுப்பு உறுதியானதாக இராது”*

என்று ஜீவா சொன்னார். நம் மண்ணையும் இலக்கியத் தையும் தமிழன் நேசிக்க வேண்டும். திறனாய்வு நோக்கத்துடன் புரிந்து கொள்ள வேண்டும். மொழி, இலக்கிய, மெய்யியல் மரபை போற்றி வளர்த்தவர்.

எனவேதான் பாரத நாட்டின் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில், அதன் கிழக்கு நிலப் பகுதியில் ராம காதையும், மேற்கு நிலப் பகுதியில் பாரதமும் நாட்டுப்புறக் கதைகளாக இனக்குழு மக்களிடையே வழங்கி வந்தன. புத்த, ஜைன மதங்களில் கூட ராமாயணம் உண்டு. வால்மீகி கை வண்ணத்தில் சமஸ்கிருதத்தில் அதிகமாயிற்று. கம்ப ராமாயணம் தமிழ் கருவூலம்.

ஆதிகால மனிதன் வரலாற்றுப் போக்கில் தனக்கு அப் பாற்பட்ட சக்தி உலக உயிர்களை ஆட்சி செய்கிறது என்று நம்பினான். அதுவே கடவுள் நம்பிக்கையை வளர்த்துப் பிற்காலத்தில் மதமும், மெய்யியலும் தோன்றக் காரணமா யிற்று. இதனை நன்கு புரிந்து கொண்ட ஜீவா மாந்தர் வாழும் காலத்திலேயே துன்பதுயரமில்லாத ஏற்றத்தாழ்வற்ற சமுதாயத்தை காணமுடியும் என கம்பர் கூறியதை எடுத்து ரைத்தார். கல்வியில் பெரியவனான கம்பன் தமிழில் சிறந்த பேரிலக்கியத்தைப் படைத்து, அதன் மூலம் உலக இலக்கியத்தை செழிப்படைய செய்துள்ளான் என எடுத்துக் காட்டினார்.

ஏழு தலைமுறைகள் சாதிக்க முடியாத சாதனையை கம்பன் ஒரே தலைமுறையில் சாதித்து விட்டான் என்று நிறுவினார். “ வாலி வதம் முடிந்த பின் சுக்ரீவன் படைகள் தென் திசை நோக்கிச் சென்றால் இடையில் சந்திக்கும் இடர்கள் எல்லாம் புறாங்கண்டு தொண்டை நாட்டை அடைவீர்கள். ‘நளி நீர்ப் பொன்னிச் சேடுறு தண்புனல் தெய்வத் திரு நதியின் இருகரையும் சென்றடைவீர்கள் ‘நீங்கள் தொண்டை நாட்டு திருவேங்கடத்தில் தங்கி விடாதீர்கள். தங்கினால் திருவேங்கடவன் தரிசனம் பெற்று மோட்சம் அடைந்திடுவீர்கள். சீதையைத் தேடுவதில் தடை ஏற்படும். எனவே திருவேங்கடத்தை விட்டு விலகி அகன்று செல்லுங்கள் என்றும் இவ்வாறு துறைகளையும் மலை நாட்டையும் கடந்து விட்டீர்களானால் தென் தமிழ்நாட்டில் தமிழ்ச்சங்கம் கண்ட அகத்திய முனிவரை வணங்கிப் பரவி புனல் பரவும் பொருனை நதி கடந்தீர்களேயானால், வானளாவ ஓங்கி வளர்ந்து நிற்கும் மகேந்திர மலையை அடைவீர்கள் என்று வானர சேனைர்களுக்கு கட்டளையிட்டதாக கம்பன் கூறுகிறான். இதனை விளக்குகின்ற ஜீவா இதிலிருந்து தமிழகத்தின் எல்லைகளை அறியலாம் என்று விளக்குவார்.

கம்பனுடைய கோசலத்தின்

**“வண்மை இல்லை ஓர் வறுமை இன்மையால்**
**திண்மை இல்லை ஓர் செறுநர் இன்மையால்**
**உண்மை இல்லை பொய்யுரை இலாமையால்.**
**வெண்மை இல்லை பல் கேள்வி மேவலால்**

கம்பனின் கோசல நாட்டின் உண்மை நிலையை எடுத்துக் கூறவும் ஜீவா தயங்கியதில்லை.

இலக்கிய உலகம் கண்ட ஜீவாவிற்கு கவிமணி தேசிய விநாயகனார், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், இக்பால், விவேகானந்தர், சங்கரதாஸ் சுவாமிகள், பிரேம்சந்த், விஸ் வநாத தாஸ் உட்பட உலகத்து அறிஞர்கள் அனைவரையும் அவருடைய உரையிலே கண்முன் கொண்டுவந்து நிறுத்துவார்.

மகாகவி பாரதியின் மீது தீராத பற்று கொண்டவர். ஜீவா வின் பார்வையில்

*“பாரதி நாட்டு விடுதலைக் கவி அந்நிய ஏகாதிபத்தியத்தின் அடக்குமுறைகளை தவிடுபொடியாக்கி தமிழ் மக்களுக்கு சுதந்திர வேட்கையை ஊட்டி அவர்களை போராட்டப் பாதையில் செல்ல வழி காட்டியவன். சாதி வேற்று மைகளை சாடி சமத்துவம் காண விழைந்தவன்.*

*பெண் விடுதலைக்கு குரல் கொடுத்தவன். ஆண் பெண் சமத்துவத்திற்கு உரிமைக் குரல் கொடுத்தவன். மகத் தான சோவியத் புரட்சிக்கு கட்டியம் கூறி வரவேற்றவன். பொது வுடமைச் சமுதாயம் இந்தியாவில் மலர வேண்டும் என்ற நோக் கம் கொண்டவன் . யாதும் ஊரே யாவரும் கேளிர் என்னும் தமிழ் மரபை மீட்டெடுத்து வளர்த்தவன்.*

*பழமைக்கும் புதுமைக்கும் இடையே பலமான பாலம் அமைத்து தமிழ் மக்களை அழைத்துச் சென்றவன்.*

பாரதியை முழுமையாக கற்றுணர்ந்த காரணத்தினால் தான் ஜீவா பாரதியை தலைமேல் வைத்துக் கொண்டாடினார்.

பாரதி பற்றிய ஜீவாவின் ஆய்வும் பேச்சும் தனித்துவம் வாய்ந்தது. அதனால்தான் பாரதியின் மகளே சொன்னார் ஜீவாவின் உருவில், பேச்சில் பாரதியை நேரில் பார்த்ததாக...

பாரதிக்கு தனியாக மேடை அமைக்க வேண்டும் என்று ஜீவா ஆணையிட்டார். அதனை ஏற்றுக்கொண்ட கோவில் பட்டி தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக இருந்த அழகர்சாமி தலைமையில் பாரதி முற்போக்கு வாலிபர் சங்கம் உருவாக்கப்பட்டது. சங்கத்தினர் தொடர்ந்து பாரதி விழாவை தேசிய திருப்பதியாம் எட்டயபுரத்தில் நடத்தி வருகிறார்கள் .

கலை மக்களுக்காகவே என்னும் கோட்பாட்டை ஜீவா ஆதரித்து பல கட்டுரைகளை எழுதியுள்ளார் கவிதை களைப் படைத்துள்ளார்.

தமிழ் மக்களுக்கு பகத்சிங்கை கொண்டு சென்றவர். கை கால்களில் விலங்கிடப்பட்டு ஈரோடு வீதிகளிலே சிங்கத்தைப் போல் பிரிட்டிஷ் அரசாங்கத்தால் கொண்டு செல்லப்பட்டவர்.

*“காலுக்குச் செருப்புமில்லை*
*கால் வயிற்றுக்கு கூழும் இல்லை”*

என்ற சாகாவரம் படைத்து இலக்கியத்தில் தடம் பதித்த ஜீவா நாமம் வாழ்க.

*(ஜனவரி 18 ஜீவா நினைவு தினம்)*

தொடர்புக்கு: **94435 27486**















JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201 Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023 WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
**Posted on 22.01.2022 at Egmore RMS 1 / Patrika Channel.**
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 97 வது அமைப்பு தினத்தை முன்னிட்டு

# கியூப கம்யூனிஸ்ட் கட்சியின் வாழ்த்துச் செய்தி

இந்தியாவுக்கான கியூப தூதர் அலெக்சான்ரோ சிம்மன்கஸ் மரின் ஜனவரி 13 ஆம் நாள் டெல்லியில் உள்ள இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையகமான அஜய் பவனில் கட்சியின் பொதுச் செயலாளரான டி. ராஜாவைச் சந்தித்தார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 97 வது அமைப்பு தினத்தை முன்னிட்டு கியூப கம்யூனிஸ்ட் கட்சியின் வாழ்த்துகளைத் தெரிவிக்கும் அக்கட்சியின் மத்திய குழு அனுப்பியுள்ள கடிதத்தை, அவர் டி. ராஜாவிடம் அளித்தார்.

கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள வாழ்த்துச் செய்தி பின்வருமாறு:

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 97 வது அமைப்பு தினத்தை முன்னிட்டு கியூப கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேசத் துறையின் சார்பாக எங்களது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் சக்தியாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஸ்தாபிக்கப்பட்டது, உலக புரட்சிகர மற்றும் கம்யூனிஸ்ட் இயக்க வரலாற்றில் மதிப்பிடற்கரிய ஒரு நடவடிக்கை ஆகும். காலனியாதிக்கத்தில் இருந்து விடுதலை பெறும் போராட்டத்தில் எவராலும் மறுக்கமுடியாத தாக்கத்தை இந்திய கம்யூனிஸ்ட் இயக்கம் உண்டாக்கியது.

உலக கம்யூனிஸ்ட் இயக்கத்துடனான நல்லுறவு என்பது கியூப நாட்டின் முன்னுரிமைகளில் ஒன்றாக இருக்கிறது. இன்றைய உலகச் சூழல் ஏற்படுத்தியுள்ள சவால்களைக் கருத்தில் கொள்ளும் போது, நம்மை ஒற்றுமைப்படுத்தும் வரலாற்றுச் சிறப்புமிக்க நட்புறவு ஒரு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. கியூபாவின் ஸ்திரத்தன்மையை அழிப்பதற்கான ஜோ பிடன் நிர்வாகத்தின் சதித் திட்டங்களை கியூப மக்களும், கம்யூனிஸ்ட் கட்சியும் எதிர்த்துப் போராடி முறியடித்துள்ளனர்.அமெரிக்காவின் நிதி, வர்த்தக மற்றும் பொருளாதாரத் தடைகளை எதிர்த்து நிற்கும் போராட்டத்தில் கியூபாவிற்கு ஆதரவாகச் செயல்படும் உங்களுக்கும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

அனைத்துப் பிரச்சனைகள் குறித்தும், நமது இரு கட்சிகளும் தொடர்ந்து பரஸ்பரம் கருத்துப் பரிமாற்றம் மேற்கொள்ள வேண்டும் என்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு வாழ்த்துக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சந்திப்பின் போது, கட்சியின் சர்வதேசத் துறையின் செயலாளர் சிதம்பரம் மற்றும் தேசியக் குழு உறுப்பினர் டாக்டர் ஏ.ஏ.கான் ஆகியோர் உடன் இருந்தனர்.




## அத்திப்பட்டு விஜயகுமார் குடும்பத்தார் ரூ.50 ஆயிரம் கட்சி வளர்ச்சி நிதி



மத்திய சென்னை மாவட்டம், அத்திப்பட்டு விஜயகுமார் குடும்பத்தார் கட்சி வளர்ச்சி நிதியாக ரூபாய் ஐம்பதாயிரத்தை மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் அவர்களிடம் வழங்கினர்.




**அன்பார்ந்த தோழர்களே! நண்பர்களே!**

உத்தரபிரதேசம், உத்தரகாண்ட், பஞ்சாப், கோவா மற்றும் மணிப்பூர் ஆகிய ஐந்து மாநில சட்டமன்ற தேர்தலுக்கான அட்டவணை (பிப்ரவரி 7 ஆம் நாள் தொடங்கி ஏழு கட்டங்களாக நடைபெறும் என்று) அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் பிரச்சாரப் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. மக்கள் விரோத, பிரிவினைவாத மற்றும் வகுப்புவாத ஆர்.எஸ்.எஸ் – பா.ஜ.க கூட்டணியை முறியடிக்க இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது.

பா.ஜ.கவிற்கு எதிரான வாக்குகள் சிதறிவிடக்கூடாது என்பதற்காக இதர ஜனநாயக, மதச்சார்பற்ற மற்றும் முற்போக்கு சக்திகளுடன் தேர்தல் உடன்பாடு கண்டிட கட்சியின் மத்திய மற்றும் மாநில தலைமைகள் சீரிய முறையில் முயன்று வருகின்றன. இந்தத் தேர்தல் போராட்டம் ஒரு பெரிய மற்றும் கடுமையான போராட்டமாகும்.

மதச்சார்பற்ற, ஜனநாயக மற்றும் முற்போக்கு மாற்று அணியை கட்டமைப்பதில் இடதுசாரிகள் முக்கிய பங்காற்ற வேண்டியுள்ளது. இது கம்யூனிஸ்டுகளின் வரலாற்று கடமையாகும். இந்தச் சூழலில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேர்தல் நிதிக்கு தாராளமாகப் பங்களிப்பு செய்யுமாறு கட்சியின் உறுப்பினர்களுக்கும், நண்பர்கள் மற்றும் ஆதரவாளர்களுக்கும் தேசியக் குழு வேண்டுகோள் விடுக்கிறது.

நிதி வசூலை சீரிய முறையில் விரைந்து முடித்து, அவ்வாறு வசூலித்த தேர்தல் நிதியை கட்சியின் தலைமையகத்திற்கு அனுப்பிவைக்குமாறு கட்சித் தோழர்களை கேட்டுக் கொள்கிறோம்.

ஐந்து மாநில சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் 2024 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தல் முடிவுகள் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால் இந்தத் தேர்தல் மிக முக்கியமான ஒன்றாகும்.

ஆளும் கட்சிக்கு கார்ப்பரேட் நிறுவனங்கள் நிதியளித்து வருவதை நாம் நன்கறிவோம். இந்தத் தேர்தல் களத்தில், சமதளம் என்பது இல்லை. இந்தச் சூழலில், நமது தேர்தல் பிரச்சார செலவிற்கு நிதி உடனடியாகத் தேவைப்படுகிறது.

கட்சியின் ஒவ்வொரு உறுப்பினரும், அனுதாபியும் அவரவர் நிலைக்குத் தகுந்தவாறு நிதி அனுப்பிட வேண்டும். பின்வரும் முகவரிக்கு தங்கள் பங்களிப்பை (காசோலை/வரைவோலை) உடனடியாக அனுப்பவும்:

**Communist Party of India,**
**Central Office, Ajoy Bhavan,**
**15, Indrajit Gupta Marg, New Delhi – 110002.**

காசோலை அல்லது
வரைவோலை எடுத்து அனுப்புவோர்
**"Communist Party of India"**
என்ற பெயரில் எடுத்து அனுப்பவும்.

ஆன்லைன் மூலமாக நிதியளிக்க விரும்புவோர்,
பின்வரும் வங்கிக் கணக்கிற்கு அனுப்பவும்:

வங்கியின் பெயர்: **Canara Bank**

கிளை: **Rouse Avenue, CBSE, New Delhi**

**Account number: 24171010000036**

**IFSC Code.: CNRB0012417**

புரட்சிகர வாழ்த்துக்களுடன்,
**டி. ராஜா,** பொதுச் செயலாளர்
இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி

# நீட் தேர்வில் இருந்து தமிழகத்திற்கு விலக்கு அளிக்க வேண்டும்

### அனைத்துக்கட்சி நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள்

## அமித்ஷாவிடன் நேரில் வேண்டுகோள்



தமிழக அனைத்துக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் ஆலோசனை கூட்டம் ஜன.08 அன்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் ஜன.17 அன்று அனைத்துக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை சந்திப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் திமுக நாடாளுமன்ற குழுத் தலைவர் டி.ஆர்.பாலு தலைமையில், மதிமுக பொதுச்செயலாளர் வைகோ, காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயக்குமார், அதிமுக நாடாளுமன்ற உறுப்பினர் நவநீதகிருஷ்ணன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் டி.ராமச்சந்திரன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜன், வி.சி.க. நாடாளுமன்ற உறுப்பினர் ரவிக்குமார், பா.ம.க. மாநிலத் தலைவர் சட்டமன்ற உறுப்பினர் ஜி.கே.மணி ஆகியோர் அடங்கிய குழு உள்துறை அமைச்சரை சந்தித்து கீழ்கண்ட கோரிக்கைகளை முன் வைத்தனர்.



கிராமப்புற ஏழை எளிய மாணவர்கள் நன்றாகப் படித்து +2 ல் 450 மதிப்பெண்கள் பெற்ற போதும் நீட் தேர்வில் தோல்வி அடைவதால் அவர்களின் மருத்துவ கனவு சிதைந்து விடுகிறது. எனவே நீட் தேர்வில் இருந்து தமிழகத்திற்கு விதிவிலக்கு அளிக்க வேண்டும் எனவும்,

சமீபத்தில் பெய்த கன மழையில் தமிழகத்தில் ரூ.6336 கோடி மதிப்பிலான பயிர் சேதம் மற்றும் பொருட்சேதம் ஏற்பட்டுள்ளது. முதலமைச்சர் அவர்கள் பலமுறை வலியுறுத்தியும் மத்திய உயர்மட்டகுழு நேரில் வந்து ஆய்வு செய்தபோதும் இதுவரை மத்திய பேரிடர் நிவாரண நிதியில் இருந்து தமிழகத்திற்கு நிதி ஒதுக்கவில்லை. வருகின்ற ஜனவரி 26 குடியரசு தின விழாவில் தமிழ்நாடு விடுதலை போராட்ட வீரர்களான கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி. அன்னியரை எதிர்த்துப் போராடிய வீரமங்கை வேலு நாச்சியார், மகாகவி சுப்ரமணிய பாரதியார் மற்றும் நாராயனகவி ஆகியோர் உருவ படங்கள் அடங்கிய அணிவகுப்பு வாகனங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்ட செய்தியை ஒன்றிய உள்துறை அமைச்சர் அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

இக்கோரிக்கைகள் மீது ஒன்றிய உள்துறை அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும் போது, நீட் தேர்வு விலக்கு குறித்து மத்திய சுகாதாரத்துறை மற்றும் மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர்களை கலந்து ஆலோசித்து தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு உரிய முடிவு அறிவிக்கப்படும் என தெரிவித்தார்.

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.